ஸ்ரீ

# உதயணன் சரிதை

திருவல்லிக்கேணி

வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யன்

எழுதியது.

மூன்றாம்பதிப்பு.

சென்னை:

உமாபதி பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1932.

## விளம்பரம்

இந்தப்புத்தகம், சென்னை திருவல்லிக்கேணி தெள்ளிசிங்கப்பெருமாள்கோயில் தெரு 17-கதவிலக்கமுள்ள கிருகத்தில் வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யரிடத்தில் கிடைக்கும்.

# இப்புத்தகத்தில் அடங்கியவை.

காப்பு.

1. நூன்முகம்.

2. உதயணன்கதை:—

(1) உதயணன் பிறப்பு.
(2) உதயண பட்டாபிஷேகம்.
(3) வாசவதத்தையின் வரலாறு.
(4) உதயணன் சிறைப்படுதல்.
(5) உதயணனது சிறைமீட்சி.
(6) உதயணன் வாசவதத்தையை மணத்தல்.
(7) மந்திரிமாரின் மந்தணம்.
(8) பத்மாவதீ பரிணயம்.
(9) மகதமன்னவன் சந்தி.
(10) உதயணன் தன் முன்னோரது சிங்காதனம் பெறுதல்.
(11) உதயண மன்னவன் ஈசனருள் பெறுதல்.
(12) உதயண மன்னவனது திக்விசயம்.
(13) சிவபிரான் கனவில் அருளல்.
(14) நரவாகனதத்தன் பிறப்பு.
(15) கலிங்கசேனையின் வரலாறு.
(16) நரவாகனதத்தனது விவாகம்.
(17) நரவாகனதத்தன் வித்தியாதரசக்கரவர்த்தியாதல்.
(18) உதயணன் சுவர்க்கஞ்சார்தல்.

3. அபிதான விளக்க வகராதி.

4. செய்யுளுரை.

5. அரும்பத விளக்க வகராதி.

## காப்பு.

முன்ன ருரகவணி பூண்டோன் முகத்துதித்துத்
தொன்னன் னயமேய்ந்த தோமில் பெருங்கதையைப்
பன்ன வரந்தருக பாரதப்போர் முற்றுமா
முன்னிய மூர்த்தியனே முந்து.

## நூன் முகம்.

வரலாறு:—இந்தப் பூவுலகில் மலையரசனெனப் பெயர் பெற்று, மற்றெல்லா மலைகளினும் ஓங்கியதாய் இமயமலை யென்பது விளங்குகின்றதன்றோ? அதன் உத்தரபாரிசத்தில், ஆயிரம் யோசனைதூரம் பரந்ததாய்க் கைலாசமலை யென்பது ஒருசிகரமாக அமைந்துள்ளது. அங்குத்தான் கண்ணுதற்கடவுள் பதினெண் தேவகணங்களும் தம்மைச் சேவிக்க, உமாதேவியோடும் வீற்றிருக்கின்றார். ஒருகால், அக்கடவுளை உமாதேவியானவள் ஏகாந்தத்தில் அணுகி அகமகிழுமாறு துதித்தனள். அப்போது சந்திரசூடாமணி, பேருவகையோடு மலைமகளைத் தமது துடையின்மீது வைத்துக்கொண்டு, 'உனக்கு விருப்பம் யாது?' என்று வினவினார்.

உமை:—'பிரபூ! நீர் என்மீது திருவருள் வைத்திருப்பீரேல், நூதனமான சரிதையொன்று சொல்ல வேண்டுகின்றேன்' என்றாள்.

சங்கரக்கடவுள்:—'இறப்பு, நிகழ்வு, எதிர்வுஎன்னும் முக்காலத்துச் சரிதைகளையும் நீ உணர்வாய்; நீ அறியாத சரிதையும் உளதோ? நாராயணனது அமிசமான நீ, தக்ஷ முனிக்குப் புதல்வியாய்த் தோன்றி, பிறகு மலைமகளாய் அவதரித்துள்ளாய். இவ்வாறு எப்போதும் எனது மனைவி

யான உனக்கு நான் சொல்லவேண்டியது யாது உளது?' என்றார்.

உமை:—'நீர் தூர்த்தர்: முடியின்மீது கங்கையைக் கொண்டிருப்பதும், சந்தியாதேவியை வணங்குவதும் யான் அறியேனோ?' என்றுகூறி அப்பிரான்மீது ஊடல் கொண்டனள்.

சிவபெருமான், பார்வதிதேவியினது புலவியைப் போக்கக் கருதி, சமயோசிதமாக இன்சொற்கூறி, பிறகு திப்பியமான கதையைக் கூறலாயினார்; அப்பொழுது பார்வதீ தேவியும் தன்னூடல் தீர்ந்தனள்.

கண்ணுதற்கடவுள் தாம் சரிதையைக் கூறத்தொடங்குகையில், இங்கு ஒருத்தரும் வரற்பாலரல்லர்' எனக் கட்டளையிட்டனர்; அவ்வாணையின்படியே திருநந்திதேவர் வாசலிலிருந்து ஒருவரையும் உட்புகவொட்டாது பாதுகாவலாயிருக்க, சங்கரமூர்த்தி உமாதேவியை நோக்கிக் கூறலானார்:—'தேவி! கடவுளரோ எப்போழ்தும்இன்பமே நுகர்பவர்; மானுடரோ எப்போழ்தும் துன்பமே அநுபவிப்பவர்; இவ்விருவரது சரிதையும் இன்பம் பயவா. ஆகவே, கடவுட்டன்மையும் மாநுஷ்யகமும்கலந்த சரிதையே பரபாகத்தை யடைந்து, யாவர்மனத்தையும் கவருமென்று அவ்விருதன்மையுங் கலந்துள்ள விஞ்சையரது சரிதத்தை நினக்குக் கூறுவேன்' என்றுமொழிந்து, அந்தச் சரிதத்தைச் சொல்லத்தொடங்குமுன், அந்தச் சங்கரக்கடவுளினது திருவருளைப்பெற்ற புஷ்பதந்தனென்ற கணநாதனொருவன்வந்து உட்புகலாயினன்; திருநந்திதேவர் சிவபெருமானது திருவாணையை அன்னானுக்குத் தெரிவித்து, அந்தக் கணநாதனையும் உட்புகவொட்டாது தடுத்தனர். அதுகண்ட புஷ்பதந்தன்,'என்னையும் காரணமின்றித்தடுத்

தல் தருமோ? உட்புறத்து நடப்பது யாது? கண்டறிவேன்' என்று தன்னுட் கருதி, தனது யோகமகிமையால் திருநந்திதேவரது கட்புலனுக்குத் தோன்றாது கரந்து ஆவலோடு உட்புகுந்து நின்றான். நின்றவன், பிநாகி தன் பத்தினிக்கு மொழிந்துவரும் விஞ்சையரெழுவரது அற்புதமான சரிதைமுழுவதையும் சிறிதும் விடாது செவியேற்றனன்.

பிறகு அவன் அச்சரிதையைத் தன்மனைவி ஜயையென்பாளிடம் வந்து ஓதினன். பொருளின் வருவாயையேனும் இரகசியத்தையேனும் தமது மனைவிமாட்டுக் கூறாது நிற்கும் பெரியோர் அரியரேயன்றே! ஜயையும் தான் செவியுற்ற அச்சரிதைகள் அற்புதமாயிருந்தனவாதலால், வியப்பு உள்ளடங்காமல் உடனே கௌரீதேவியினிடஞ் சென்று அச்சரிதைகளைத் தெரிவித்தனள். மகளிரிடத்து வாயடக்கம் எவ்வாறு உண்டாகும்?

அதுகேட்ட மலைமகள் தன் கணவன்மீது சினந்து, தனது பதியைக் குறுகி 'நீர் அபூர்வமான சரிதையொன்றும் மொழியவில்லை; நீர் உரைத்ததை ஜயையென்பவள் முன்னமே உணர்ந்திருக்கின்றாள்' என்றனள். உமாபதியானவர், தமதுஞானதிருஷ்டியால் நிகழ்ந்ததையோர்ந்து 'காதலீ! நீ என்மீது சினவற்க; புஷ்பதந்தன் தனதுயோகமகிமையால் ஒருவரும்உணராதவாறு உட்புகுந்து நின்று, உனக்கு யான் கூறிய கதையைக் கருத்தோடு செவியேற்றிருந்து தன் காதலிபால் உரைத்தனன்; இவ்வகையால் தான் ஜயை உணர்ந்திருக்கவேண்டும். வேறு யாவர்தாம் இந்தச்சரிதையை உணர்ந்துள்ளார்?' என்றார்.

இவ்வாசகத்தைக் கேட்டதும், வெகுண்டு பார்வதீதேவி புஷ்பதந்தனை வரவழைத்து, 'நீ செய்த தகாத கரி

யத்தின்பொருட்டுத் தண்டனையாகப் புவியில் மாநுடப் பிறவி யெடுக்கக்கடவாய்' என்று சபித்தனள். அவன் பொருட்டு, பிரமதகணங்களுட் சேர்ந்த மால்யவானென்பவன், 'அன்னே! இவன் செய்த பிழையைப்பொறுத்திடுக' என்று பணிந்து வேண்டினன்; தகாத விடத்து அன்பு கொண்டதுபற்றி அவனையும் அவள் அவ்வாறேசபித்தனள். பின்னும், புஷ்பதந்தனும் மால்யவானும் புஷ்பதந்தன் மனைவியான ஜயையும் சண்டிகையின் தாளில் வீழ்ந்து 'அம்மே! இச்சாபத்திற்கு ஓர்வரையறை கூறவேண்டும்' என்று இரந்து வேண்டினர்.

வேண்டவே, தனது குளிர்ந்த திருவுள்ளத்தில் அன்னாரது அபராதத்தாற் பிறந்த சீற்றம் சிறிது தணிந்து, மலைமகள், 'சுப்பிரதீகனென்ற இயக்கன், குபேரனது சாபத்தாற் பிசாசரூபத்தைப்பெற்று, காணபூதியென்ற பெயருடன் விந்தமலையைச் சார்ந்தவொரு கானகத்தில் வசிக்கின்றான். அவனைக் கண்ட மாத்திரத்தில், புஷ்பதந்தனே! உனக்கு முற்பிறப்பின்உணர்ச்சி தோன்றும். அப்பொழுது அன்னனிடத்து நீ இப்போது செவியுற்ற சரிதையைக் கூறுவாய்; உடனே உனது சாபம் நீங்கிவிடும். அந்தக் காணபூதி, இச்சரிதையை, உன் நிமித்தம் பரிந்து கூறிய மால்யவானுக்கு மொழிந்ததும் சாபவிடை பெறுவான். மால்யவானே! நீ இந்தச்சரிதையை உலகத்திற் பரவச் செய்து, அப்பாற் சாபவீடு பெறுக' என்று திருவருள் புரிந்தனள்.

பார்வதிதேவி அவ்வாறு அருள்புரிந்ததும், புஷ்பதந்தன் மால்யவானென்ற இருவரும் மின்னல்போன்று ஒரு நொடிப்பொழுதில் மறைந்திட்டனர். அப்பால் புஷ்பதந்தன் கௌசாம்பிநகரியில் வரருசி யென்னும் பெயருடன்

தோன்றி, காணபூதிக்குத் தான் உணர்ந்த வரலாற்றை மொழிந்து சாபவீடு பெற்றனன். இது நிற்க:

வாசுகியென்னும் நாகராசனது புதல்வனான கீர்த்திசேநன், சோமசர்மா வென்னும் பிராமணனது புத்திரியைக் காந்தருவவிவாகத்தால்மணந்து, குணாட்டியனென்ற புதல்வனைப் பெற்றான்; அவன்தான் மால்யவா னென்பவன். அன்னான் தென்திசைவழியிற் சென்று விச்சைகளெல்லாவற்றையும் அதிகரித்து மிகவும்வல்லுநனாகி, சாதவாகன னென்னும் மன்னவனைச் சார்ந்து, தனது திறமையைக் காட்டி, அவனது அமைச்சருள் ஒருவனாகி அமைச்சுத்தொழில் பூண்டிருந்தனன்.

ஒருகால் அந்தச்சாதவாகனன் தன் மனைவியோடு புனல்விளையாடுகையில், அவளால் 'ஏஎ! கல்வியறிவிலீ!' என்று இகழப்பெற்றான்: அதுமுதல், அம்மன்னவன் மனக்கவலைகொண்டு மௌனஞ் சாதித்துவந்தனன்; எத்துணைநேரம் வினவினும் ஒருவர்க்கும் ஒருமறுமொழியும் கூறிற்றிலன். அதுகண்ட சர்வவர்மாவென்னும்மந்திரி, ஒருநாள் அவ்வரசனிடம் வந்து, 'வேந்தே! எனக்குக்கல்வியறிவு எவ்வாற்றாலேனும் உதிக்குமா? என்று நீர் என்னை முன் ஒருகால் வினவியிருந்தீர். அது கேட்ட யான் அதனைக்குறித்துச் சிந்தைகொண்டிருக்கையில், வானத்தினின்று வீழ்ந்த ஒருவெண்டாமரைமலர் குமரனொருவனால் அலர்த்தப்பெற்றதாக, அதனினின்று வெள்ளணிபூண்ட ஒருமாதரசி எழுந்து, நமது முகத்திற் புகக் கனாக் கண்டேன். ஆகவே, இனிக் கலைமகளே நம்மை நேரே சார்ந்திட்டா ளென்பதிற் சிறிதும் ஐயமிலது' என்றான்.

அதுசெவியேற்ற மன்னவன், 'எனக்குச் செல்வம் குறைவின்றியிருந்தும், அவையாவும் மரக்கட்டையில்

அணிகலங்களை மாட்டுவதுபோன்று கல்வியறிவின்மையாற் சிறிதும் சிறப்புறுவதில்லை: ஒருவன் பெருமுயற்சிகொண்டு கற்கப்புகின், எத்துணைக்காலத்திற் பெரும் புலவனுவன்?' என்று குணாட்டியனை வினவினன்.

குணாட்டியன்:—'பன்னிரண்டாண்டு பயின்றால்,வியாகரணசாஸ்திரத்தின்முகம் புலப்படுமென்று உலகோர் கூறுவர்; யானோ, ஆறியாண்டிற் பயிற்றுவேன்' என்றான்.

அதுகேட்ட சர்வவர்மா அழுக்காறு கொண்டு, சுகுமாரனை மன்னன்போல்வாரை இத்துணை வருத்தத்திற்கு உள்ளாக்குதல் தகவன்று; வேந்தே! நான் ஆறுதிங்களில் வல்லுநனாக்குவேன்' என்றான்.

குணாட்டியன்:...(இது ஒருகாலும்கூடாதசெயலென்று தன்னுட்கொண்டு,) 'நீர் அவ்வாறு செய்வீராயின், யான், ஸம்ஸ்க்ருதம் ப்ராக்ருதம் தேசபாஷை என்ற மூன்றிலும் பழக்கத்தை விட்டிடுவேன்' என்று சபதஞ்செய்தனன்.

சர்வவர்மா:—'நான் அவ்வாறுசெய்யகிற்றிலேனேல், உமதுமரவடிகளைப் பன்னீரியாண்டு என்முடிமேல் தாங்குவேன்' என்று மாற்றுச்சபதஞ் செய்தனன்.

மன்னவன், அவர்களுடைய மொழிகளைக் கேட்டு, எவ்வாற்றானும் தான் புலவனாகிவிடலா மென்று உறுதிகொண்டு மனக்கவலை மாறினன். குணாட்டியன் தன்னில்லஞ் சார்ந்தனன்.

சர்வவர்மாவோ, தனதுமொழியை நிறைவேற்றுதல் அரிதென்று கருதிப் பெருந்துயர் பூண்டு, தன்னில்லக்கிழத்திக்கு நிகழ்ந்தசெய்தி யனைத்தையும் உரைத்தனன். அன்னாள் 'குமாரக்கடவுளின்கருணையின்றி இச்செயல் முற்றாது;ஆதலால், அக்கடவுளின் நல்லருளை நாடுமாறு தவம்

புரிக' என்றனள். சர்வவர்மா, அதுவே உறுவதெனத் துணிந்து, அற்றையிரவு பொழுதுபுலர்வதற்கு முன்னரே புறப்பட்டுக்கானகஞ்சென்று, உணவின்றிக்குமாரக்கடவுளை நோக்கிக் கடுந்தவம்புரியலாயினன். குமாரக்கடவுள் அன்னாது தவத்திற்கு உள்ளமுவந்து திருவருள் சுரந்தனர்.

குமாரக்கடவுளின் அநுக்கிரகத்தைப் பெற்ற சர்வவர்மாவும், மீண்டும்வந்து, அரசனைச் சார்ந்து, எண்ணியமாத்திரையில் எதிரில்நின்ற விச்சைகளையெல்லாம் மன்னவனுணருமாறு செய்தனன். குமாரக்கடவுளின் திருவருளைப் பெற்றோர் எச்செயலைத்தான் இடையூறின்றிமுற்றுறச்செய்யார்?

கல்வியின்கரைகண்ட மன்னவன், தனதுஆசிரியனாகிய சர்வவர்மாவைச் சிறந்த முழுமணிகள்கொண்டு மிக்க பணிவோடு அருச்சித்து, நருமதையாற்றங்கரையிலுள்ள பருகச்ச மென்னுந் தேசத்திற்கு இறைவனாக்கினன்.

அப்பால், குணாட்டியனே, மனத்தில்துயர்பூண்டு, முன்னுறுதிப்படி தான் மும்மொழிகளிற் பயில்வதை நீத்து, சாதவாகனமன்னவனை விட்டிட்டு, விந்தைமகளைப் பணியுமாறு போயினன். அன்னாளைப்பணிந்ததும், அக்கடவுள் காணபூதியைக் காணுமாறு வழிவிடுத்தாள். அங்ஙனமே காணபூதியைக்கண்ட மாத்திரத்தில், குணாட்டியனுக்குத் தனது முற்பிறப்புணர்ச்சி தோன்ற, அன்னான் தன்செய்தியையெல்லாம் காணபூதியினிடங் கூறி, 'நம்மிருவர் சாபமும் நீங்குமாறு சங்கரக்கடவுள் முன்னர்க்கூறியசரிதைகளைக் கூறுக' என்று வேண்டினன். இங்ஙனம் குணாட்டியன் தன்னிடத்துக் குறையிரந்ததற்கு இணங்கி, அந்தக்காணபூதியென்ற பிசாசன், ஏழுசரிதைகளின்வடிவமாகிய அச்சிவபிரானுரைத்த பெருங்கதையைத் தன்மொழியால்உரைத்தனன். அது, வடமொழியில் 'ப்ருஹத்கதா' எனப்படும்.

அந்தச்சரிதையைக் குணாட்யன் அவ்வாறே பைசாச பாஷையினால் ஏழுலக்ஷங்கிரந்தங்களின் படிவமாக ஏழுயாண்டில் இயற்றினான். இயற்றியதும், 'இதனை விஞ்சையர் எங்குக் கவர்வரோ!' என்று பேரச்சங் கொண்டதனாலும், அக்கானில் எழுதுதற்கு ஏற்ற மசி கிடையாமையாலும், தனது உதிரத்தால் அச்சரிதையை வரைந்தனன். அதனைக் கேட்குமாறு,சித்தர் விஞ்சையர்முதலியோர் விதானங்கட்டியது போல் வானத்தைமறைத்துக்கொண்டு குழுக்குழுவாய்த் திரண்டுவரலாயினர்.

குணாட்யன் வரைந்த அந்தப்பெருங்கதையைக்கண்டு, காணபூதி தன்சாபமொழிந்து தன்னுலகைச் சார்ந்தனன் அவனுடனிருந்த பிசாசர்களும்அக்கடவுட்கதையைச்செவியேற்று விண்ணுலகு எய்தினர்.

பின்பு, 'தேவியின்கட்டளைப்படியே யான் இந்தப் பெருங்கதையை உலகிற்பரவச்செய்யவேண்டுமே!இதற்குச் செய்யத்தக்க உபாயம் யாதோ? இதனை யாரிடத்திற்சொல்வது? யாரிடத்திற் கொடுப்பது?' என்று குணாட்யனுக்குச் சிந்தையுண்டாயிற்று.

குணதேவனென்றும் நந்திதேவனென்றும் பெயர்பூண்ட அன்னைதுமாணாக்கரிருவரும், தமதுஆசிரியனாகிய குணாட்டியன் மனக்கவலைகொண்டிருப்பதை யுணர்ந்து தம்மாசிரியனைக் குறுகி,'சாதவாகனனே இந்தக்காப்பியத்தை ஈதற்குஉரிய பாத்திரம். அன்னான், சுவையுணர்ந்தோனாதலால், இந்நூலை ஏற்றபடி ஆதரிப்பான்' என்று விண்ணப்பித்தனர்.

குணாட்யனும், அன்னார்மொழிக்குஇணங்கிஅந்நூலைத் தமதுமாணவகராகிய அவ்விருவர்கையில்தானேயீந்து, அன்னாரையே அரையனிடம்அனுப்பித் தானும் அன்னாருடன்

சென்று, பிரதிஷ்டாநகரத்தின் புறத்திலுள்ள தொருபூங்கா வனத்தைச் சுட்டிக்காட்டி, தான் அங்குத்தானே இருப்ப தாக மொழிந்தனன்.

குணதேவ நந்திதேவ ரிருவரும் அரையனைச் சார்ந்து, அம்மன்னவன்பால் தமது ஆசிரியர் இயற்றித்தந்த பெருங் கதையென்னும் அந்நூலைக் காட்டினர். கல்விச்செருக் குக்கொண்ட அவ்வரசன் பைசாசபாஷையால் எழுதப் பெற்ற அந்நூலையும், பிசாசரூபத்தை யுடைய அன்னுரை யும் கண்டு, 'நீவிர் கொணர்ந்த இந்நூலின் அளவோ ஏழு லக்ஷங் கிரந்தம்; மொழியோ சுவையற்ற பைசாசபாஷை. எழுதப் பெற்றதோ உதிரக்கறையினால்; ஆகவே, பிசாசர்க்கு ஏற்குமாறு எழுதியஇக்கதைவெறுக்கத்தக்கதே யன்றி விரும்பி ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று' என்று அவமதிப் போடு கூறிவிட்டனன்.

அப்பால், அம்மாணவகர், மிக்க வருத்தத்தோடு அந் நூலை உடன்கொண்டு தாம் வந்தநெறியே மீண்டு, தம்மாசி ரியரிடத்துச் சென்று, நிகழ்ந்ததைப் பெருவருத்தத்தோடு அன்னணமே தெரிவித்தனர். குணாட்யன் அதனைச் செவி யேற்றதும், அடங்காப்பெருந்துயர மடைந்தனன்: உண் மையறிவினன் கணிசியாது அவமதிப்பின் எந்த அறிஞன் தான் மனத்துயரை யடையான்?

உடனே, குணாட்டியன் தன்மாணவகரோடு அருகி லுள்ளதொரு குன்றை யணுகி, நிர்மாநுஷமான அத்தல த்து அக்கினிகுண்டமொன்றை நிருமித்து, தான் எழுதிய நூலின் ஏடுகளை ஒவ்வொன்றாக உருவி, விலங்குகளும் பறவைகளும் தம்முணவையுட்கொள்ளாது வட்டமிட்டுச் சூழ்ந்துகொண்டு கேட்டு உருகுமாறு அதனைப் படித்துப் படித்துத் தனதுமாணவர் கண்ணீர் மல்கி நோக்கியவண்

ணம் எதிர்நிற்க, எரியில் ஓமஞ்செய்பலாயினன். குணாட்டியன், இங்ஙனம் விஞ்சையர் அறுவர்சரிதையைக் கனலுக்கு இரையாக்கிவிட்டு, தனது மாணக்கர்க்கு மிகவும் விருப்பத்திற்கு இடமாய் ஏழாவதான நரவாகனதத்தன்சரிதையைமாத்திரம், அம்மாணவகரின் பொருட்டு அங்கியில் எரித்திடாது அன்னார்கரத்திற் கொடுத்திட்டனன்.

இங்கு இவ்வாறு நிகழ்கையில், சாதவாகனமன்னவன் நோயடைந்து மேனி மெலிந்தான். மருத்துவர், 'உலர்ந்தவூனை யுண்டதனல் நேர்ந்ததாகும் இப்பிணி' என்றனர். உடனே, அரையன், மடையரைக் கூவிச் செய்தி விசாரிக்க, அவர்கள் 'யாம் என் செய்வோம்? வேட்டுவர் உலர்ந்தவூனையே கொணர்கின்றனர்' என்றனர். பின்னர் வேட்டுவரை யழைத்து 'நீவிர் உலர்ந்தவூனை ஏன் கொணர்கின்றீர்?' என்று வினவ, அன்னார் 'இந்நகர்க்கு அருகில் யாரோ பெரியவரொருவர்பெருஞ்சுவடியினின்று ஏடுகளை உருவி யுருவிப் படித்துப்படித்து அங்கியிற் பெய்கின்றனர்: அதனைச்செவியேற்குமாறு, கானகத்திலுள்ள விலங்குகளும் பறவைகளும் உணவையும் உட்கொள்ளாது அங்குத்தானை சூழ்ந்து நிற்கின்றன; அதனல், அவைகளின் தசையெல்லாம் உலர்ந்திருக்கின்றன' என்றனர்.

வேட்டுவர் இவ்வண்ணங் கூறவே, சாதவாகனமன்னவன், அவ்வதிசயத்தைக்காணுமாறுவிரும்பி அவர்களையே நெறிகாட்டுமாறு ஏவி, பின்னரேசென்று, தானேகுணாட்டியனது அருகிற் சார்ந்தான். கண்ணுங்கண்ணீருமாகச் சூழ்ந்து நிற்கும் விலங்குகளின் இடையில் இருக்கும் அன்னானைக் கண்டதும், மன்னவன், அவனைக் குணாட்டியனென்று உணர்ந்து, அன்னானைப் பணிந்து வரலாற்றை வினவினன். அந்த மூதறிவாளனும், அரையனிடத்துப் புஷ்பதந்

தனது சாபம் தொடங்கி அப்பெருங்கதை தோன்றி வந்த வரலாறு வரையிலும் முற்றிலும் பிசாசபாஷையினல் ஒன்றும் விடாது மொழிந்தனன்.

பிரமதகணத்தைச் சார்ந்தவனே குணாட்யனுக அவதரித்தானென்பதை யுணர்ந்த வேந்தன், பின்னும் மிக்க நன்மதிப்புக்கொண்டு அன்னனது பாதங்களிற் பணிந்து, தான்செய்தபிழையைப்பொறுத்திடுமாறுஇரந்து சிவபிரானது வாய்மொழியாகிய அப்பெருங்கதையைத் தருமாறு வேண்டினன். குணாட்டியன், மன்னவனை நோக்கி, 'சாதவாகன! ஆறுலக்ஷங்கிரந்தங்க ளடங்கிய ஆறுகதைகள் அக்கினிக்கு இரையாயின. ஒரிலக்கவளவினதான இந்த நரவாகனசரிதை யொன்றுமே எஞ்சிநிற்கின்றது, வேண்டுமாயின் இதனைத் தருவேன். எனது மாணக்கரான குணதேவ நந்திதேவ ரென்ற இவ்விருவரும் இதனை உனக்கு நன்கு தெரிவிப்பர்' என மொழிந்து, அப்பெருங்கதையை அன்னனிடங் கொடுத்திட்டு மன்னவனிடம் விடைபெற்றுக்கொண்டு, யோகமகிமையால் தன்னுடலத்தைப் புயங்கத்துரிவை போல நீத்துச் சாபத்தைக் கரைகண்டு தனது முன்னைப்பதவியைப் பெற்று வாழ்ந்திடலாயினன்.

அப்பால், சாதவாகனமன்னவன், குணாட்டியனாற் கொடுக்கப்பட்ட அந்தப்பெருங்கதையை யேற்றுத் தன்னரண்மனை சார்ந்து, குணாட்யனதுசீடர்களான குணதேவ நந்திதேவர்கட்கு ஆடை ஆபரணம் விளைநிலம் முதலியன ஈந்து சம்மானித்து, அவர்களைக்கொண்டு அந்தப் பிசாச பாஷையினல்தானே கதாபீடிகையையும்இயற்றுவித்தான். விசித்திரச்சுவையுள்ள அச்சரிதையும் குணதேவ நந்திதேவர்களின்முகமாகப்பிரசாரஞ்செய்விக்கப்பெற்று மூவுலகிலும் பெயர்பெற்றது.

க்ஷேமேந்திரரென்றமகாகவி, அந்தப் பெருங் கதை மிகவும் பரந்ததாய்ப் பிசாசபாஷையி லெழுதப் பெற்றிருப்பதனால் அதனை வடமொழி யுணர்ந்தோர் யாவரும் படித்து இன்பமுறுதற்கு இயலாதது கண்டு, அந்நூலைச் சுருக்கி வடமொழியில் 'ப்ருஹத்கதாமஞ்சரீ' என்று பெயரிட்டு மூன்று ஒருநூல் இயற்றினர். அந்நூல் முதனூலினுக்குச்சிறிதுமாறு பட்டிருப்பதோடு, மிகவுஞ் சுருங்கிவிட்டது கண்டு, சிறிது காலத்திற்குப் பிறகு சோமதேவபட்ட ரென்ற மகாகவி யொருவர், முதனூலின்முறைசிறிதும்வழுவாது தாம் அப்பெருங்கதையை வடமொழியின லியற்றி, அதற்கு 'கதாஸரித்ஸாகரம்' என்றுபெயரிட்டனர். இவற்றிற் கூறிய பொருளைத் தெரிவிப்பனவாகத் தென்மொழியிற்,பெருங்கதை யென்று ஒரு நூலும் உதயணகுமாரகாவியம் என்று மற்றொருநூலும் உண்டு; அவை கதைப்போக்கிற் பலவிடங்களிலும் வடமொழியிலுள்ள அந்நூல்களிற் கூறியவகையினும் மாறுபட்டுள்ளன. வடமொழியில், பாஸகவியென்பவர் செய்த ஸ்வப்நவாஸவதத்தம் ப்ரதிஜ்ஞாயௌகந்தராயணம் என்ற இரண்டு ரூபகங்கள் இருக்கின்றன; அவையும், ப்ருஹத்கதைக்குச் சிறிதுமாறுபட்டனவேயாம். சுபந்து வென்ற மஹாகவி செய்த வாஸவதத்தா என்ற கத்யகாவ்யத்திற்கும் ப்ருஹத்கதைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை; அந்நூல், கவி தமது நுண்ணுணர்வினற் கற்பித்த தனிச் சரிதை யென்பது அந்நூலினல் தானே தெற்றென விளங்கும்.

கதாஸரித்ஸாகரத்தையே பெரும்பாலுந் தழுவி, அதிற் கூறியுள்ள கிளைக்கதைகளைப் பெரும்பாலும் நீக்கி முதற்கதையை யான் இங்கு எழுதப்புகுந்தேன். அவ்வாறு

எழுதத் தொடங்கிய இந்தச் சிறு நூலில் நரவாகனதத்தனது சரிதையைச் சுருக்கிவிட்டு உதயணன்சரிதையையே விவரமாக எழுதுகின்றேன். இந்நூலை இவ்வாறு எழுத வேணுமென்னும் விருப்பம் எனக்குத் தோன்றக் காரணம், "ஆரானு மாதானு மல்லளவள் காணீர், * * * வாசவதத்தை யென்று, ஆரானுஞ் சொல்லப்படுவாள்— அவளுந்தன், பேராயமெல்லா மொழியப்பெருந்தெருவே, தாரார் தடந்தோள் தளைக்காலன்பின் போனாள், ஊரார் இகழ்ந்திடப் டாளே" என்று இந்நூலில் வழங்கும் இச் சரிதையின் ஒரு பகுதியைச் சான்றோர் பாராட்டிக் கூறியிருப்பதே யாகும். இதுவன்றியும், உதயணன் என்ற பெயர் புராணங்களிற் பயின்றுள்ள தென்பது, இங்கு எடுத்து உரைக்கத் தக்கது.

யான் எழுதப்புகுந்த இந்தச் சிறு நூலிற் காணப்படுங் குற்றங்குறைகளைச் சான்றோர் தமது இயற்கைப் பண்பாற் பொறுத்துக் குணத்தைமாத்திரம்கைக்கொண்டு சிற்றறிவினையுடைய சிறியேனை ஆதரிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"மணிபொதிகிழியு மிக்கமணியுடனிருந்தபோழ்தின், மணிபொதி கிழிதனையு மணியுடனமைத்து வைப்பர், துணிவினிப்புன்சொலேனுந் தூயநற்பொருள்பொதிந்தா, லணியெனக் கொள்வரென்றே யகத்தினின் மதித்துச் சொல்வேன்".

"குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறியு மாந்தர் கடன்"

ஸ்ரீ

# உதயணன் சரிதை.

திருமகள்கோன் செய்ய திருவடிகள் காப்பா
விருநிலத்தி லென்றன்னைக் காக்க—வருகவே
பார்த்த னருங்குலத்துப் பார்சே ருதயணன்றன்
சீர்ச்சரிதை செப்பவே யின்று.

## முதல் அத்தியாயம்:

## உதயணன் பிறப்பு.

இப்பூமியில் சுவர்க்கலோகம் போன்று தோன்றும் வத்சமென்று பேர் பூண்ட நாடொன்று உண்டு; அதன் நடுவில், திருமகளுக்கு உறைவிடமாகிப் பூமாதேவியின் திலகம் போன்று கௌசாம்பியென்ற பட்டணமொன்று உண்டு. ஒருகாலத்தில், அந்நகரத்திற் சதாநீகனென்பவன் அரசுபுரிந்தனன்; அவன், பாண்டவர்வமிசத்திற் பிறந்தவன்; ஜநமேஜயமஹாராஜனுக்குப் புத்திரன்; பரீக்ஷித்தின் பௌத்திரன்; அபிமந்யுவினுடைய ப்ரபௌத்திரன். அவன், தீயோரை நலிபவன்; நல்லோரை நாடுபவன்; கலைகட்கு இருப்பிடம்; வீரத்திற்குப் புகலிடம்; அறத்திற்கு நற்றோழன்; மறத்திற்குக் கடும்பகைவன்; பலசொல்லி யென்? அரசர்கட்கு இன்றியமையாத குணங்கள் யாவும் அவனிடம் குடிகொண்டிருந்தன. அவன், தக்கபருவத்தில், விஷ்ணுமதி யென்பவளைக் கடிமணஞ்செய்துகொண்டான். மணந்து பலகாலஞ் சென்றும், அவள் வயிறு வாய்க்கவில்லை.

இவ்வாறு இருக்க, ஒருகால், சதாநீகன் வேட்டை நாடிக் காட்டிற்குச் சென்றான். கானகத்துத் திரிகையில் அவ்வரசனுக்குச் சாண்டில்யமுனிவரோடு பரிசய முண்டாயிற்று. அம்முனிவரிடத்தில் மன்னவன் தனக்குள்ள மகக் குறையைத் தெரிவித்தான். முனிவர் சதாநீகமன்னவனுடன் கௌசாம்பியில் வந்து, புத்திரகாமயாக மியற்றி அங்கியில் ஓமஞ்செய்து, மந்திரமொழியாற் புனிதமான சருவை மன்னவன்மனைவி புண்ணுமாறு கொடுத்தனர்.

அந்தச்சருவை உட்கொள்ளவே, விஷ்ணுமதி கருவுற்றுப் பத்துத்திங்கள் கழிந்ததும் ஒரு புதல்வனைப் பெற்றெடுத்தாள். சதாநீகமன்னவன், அந்தப் பாலகனுக்கு ஸஹஸ்ராநீகனென்று நாமகரணஞ் செய்தனன். 'தந்தையினும் நூறுமடங்கு சிறந்தோன் தநயன்' என்ற மொழி பற்றிப்போலும், இவன் இவ்வாறு பெயர்சூட்டியது. விநயத்தினால் நல்லொழுக்கங்கள் விளங்குவது போல, அப்புதல்வனால் மன்னவன் மிகவும் விளங்கினன்.

தக்க பருவம் நிரம்பியதும், ஸஹஸ்ராநீகனது தாதை அக்குமாரனுக்கு இளவரசு முடிசூட்டி, தான் இனிது வாழ்ந்திடலாயினன். அக்காலையில், சதாநீகன் இன்பம் நுகர்தற்பொருட்டு மன்னனாக இருந்தனனே யன்றி, முறையாராய்வதிற் சிறிதுங் கருத்துக் கொள்ளவில்லை; இராச்சிய பாரமுழுவதும் ஸஹஸ்ராநீகனைப் பொறுத்ததாயிற்று.

அக்காலையில், வானுலகத்தில் தேவர்கட்கும் அசுரர்கட்கும் பெரும்போர் நேர்ந்தது; அதனால், தேவேந்திரன் சதாநீகனைத் தனக்குத் துணைபுரியுமாறு விரும்பி ஒரொற்றனை விடுத்தனன்: சதாநீகன், தேவேந்திரனது வேண்டுகோளை மறுத்தற்கு அஞ்சி, தனது அரசையும் மகனையும் யுகந்தரனென்னும் மந்திரியினிடத்திலும்

சுப்பிரதீகனென்னும் படைத்தலைவனிடத்திலும் கையடையாக்கி, தான் தேவேந்திரனுக்குத் துணைபுரியுமாறு மாதலியுடன் வானுலகஞ் சார்ந்தனன். தற்சேர்ந்தார் துன்பந் துடைத்தல் குடிப்பிறந்தார் கொள்கையன்றோ! சதாநீகன் வானுலகு சார்ந்ததும், அங்கு எதிர்த்துப்பொருத யமதம்ஷ்ட்ரன் முதலிய பல அசுரரையும் தனது திறலினாற் கொன்று, அந்தப்போரில் தானும் மாண்டனன்.

மாதலி,உயிர்நீத்த அம்மன்னவனதுஉடலைத் தேவேந்திரனது கட்டளையின்படி கௌசாம்பியிற் கொண்டு சேர்த்தான். ஸஹஸ்ராநீகன், இறந்த தந்தைக்கு ஈமக்கடன் முதலிய உத்தரகிரியைகளைச் செய்தனன். விஷ்ணுமதியென்பவள், தனது கொழுநனுக்கென்று அடுக்கிய ஈமவிறகில் ஸஹகமனஞ்செய்து தன்னுயிரை நீத்தனள்; இவ்வாறு கொழுநனோடு இறத்தல் கற்புடைய மகளிர் செயலன்றோ! தந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளெல்லாவற்றையும் செய்து முடித்த பின்பு, ஸஹஸ்ராநீகமன்னவன், தனது தமப்பனேறிய சிங்காதனத்தில் வீற்றிருந்து, மன்னவர் யாவரும் வந்து அடிவணங்கச் செங்கோல் செலுத்தலானான்.

இஃது இவ்வாறிருக்க: தேவாசுரயுத்தத்தில் சதமகனே வெற்றி பெற்றனன். பிறகு, தேவேந்திரன், தனக்காகச் செருக்களத்தி லுயிர்துறந்த நண்பனது புதல்வன் ஸஹஸ்ராநீகனை அமராவதிக்கு வருவித்து அவனைக்கண்டதும் உவகை பொங்க மனம் பூரித்துத் தழுவியணைத்து அளவளாவிப் பல்வகையாக முகமன் கூறிச் சுதர்மையென்னுந் தனது சபையில் தக்கதோ ராசன மளித்துப் பலபடி உபசரித்தனன். அங்குத் தேவேந்திரனதருகிற் சிலதேவமாதர்கள் ஆடினர்; வேறு சிலர் இன்னிசை பாடினர்; சிலர் வெண்சாமரை வீசினர்; மற்றுஞ் சிலர் ஆலவட்டம்

பணிமாறினர்; மங்களவாச்சியங்கள் முழங்கின; அமரர்கள் பல்லாண்டு பாடினர்; தேவவிருடியர் வாழ்த்தினர். இவ்வாறு பல்வகைச்சம்பிரமங்களுடன் தேவேந்திரன் இனிதிருத்தலைக் கண்டு, ஸஹஸ்ராநீகன். பெருவியப்புக் கொண்டான்; அங்குள்ள கற்பகம் காமதேநு சிந்தாமணி முதலிய பல வளங்களையுங் கண்ணுற்று, எல்லையில்லாத மகிழ்வெய்தினன்.

பின்னர்ச் சிறிது நேரம் வாசவனுக்கும் ஸஹஸ்ராநீகனுக்கும் சம்பாஷணை நிகழ்கையில், பேச்சோடு பேச்சு ஆக, மகவான், இராசகுமாரனைநோக்கி, அயோத்திமாநகரில் கிருதவர்மாவென்று ஓரரச னிருக்கின்றானென்றும், அவனது புதல்வியாகிய மிருகாவதியே உனக்கு மனைவியாவ ளென்றும் தெரிவித்தான். அச்சொல் செவியிற் சார்ந்ததும், ஸஹஸ்ராநீகனது மனம் மிருகாவதியினிடத்திற் சென்றது. அப்பால், மேகவாகனன் ஸஹஸ்ராநீகனைச் சத்கரித்து, தனது தேரின்மீது ஏற்றி, கௌசாம்பியில் விட்டுவருமாறு மாதலிக்குப் பணித்து, மன்னவனை வழிவிடுத்தான். ஸஹஸ்ராநீகனது உடல்மாத்திரம் தன் நகரை யணுகியதே யன்றி, அவன் தன் மனத்தால் அயோத்தியையே யடைந்தனன்.

ஸஹஸ்ராநீகமன்னவன் தன் நகர்க்கு மீண்டுசெல்லுகையில், திலோத்தமையென்னுந் தேவமாது, அம்மன்னவனை நோக்கி 'வேந்தே! யான் ஒன்று கூறுகின்றேன்: அதனைச் செவியேற்றுப் பின்பு செல்க' என்று அன்போடு கூறினள். ஸஹஸ்ராநீகனது மனம் வேற்றிடத்துச் சென்றிருந்தமையால், அச்சொல் அவனது செவிவழியிற் புகவில்லை. மன்னவன் தன்சொல்லுக்குச் செவிகொடாத்

சென்றிடவே, திலோத்தமை, மிகவும் வெட்கமும் வெகுளியும் ஒருங்கேகொண்டு, 'எவளிடத்து நேயங்கொண்டு என் சொல்லை உபேட்சித்து நீ இப்போது செல்கின்றாயோ, அவள்நிமித்தமாகப் பதினான்கியாண்டு பிரிவுத்துயருறுக' எனச் சபித்தாள். இச்சாபமொழி மாதலிக்குக் கேட்டது; மன்னவனோ, அதனையும் உணர்ந்திலன்.

ஸஹஸ்ராநீகன், கௌசாம்பியை யணுகியதும், அமராவதியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் தன்னமைச்சரிடத்துச் சொல்லி, மிருகாவதியை மணம்பேசி வருதற்பொருட்டு அயோத்திமாநகருக்கு ஒரொற்றனையும் விடுத்தனன். அவ்வொற்றன் அவ்வாறே சென்று வேந்தனது கட்டளையைக் கிருதவர்மாவென்னும் அரசனுக்கு விண்ணப்பஞ்செய்ய, அம்மன்னவன், ஒற்றன் கொணர்ந்தசெய்தியைத் தன் தேவிக்கு அகமகிழ்வோடு அறிவித்தான். கிருதவர்மாவின் மனைவி கலாவதியும், தன்மன்னவனைநோக்கி, 'இறைவ! நமது புதல்வி மிருகாவதியை ஸஹஸ்ராநீகனுக்குப் பத்தினியாக ஈதல் தக்கதொன்றேயாம்; இவ்வாறு செய்தல்வேண்டுமென்று ஓரந்தணன் என்கனவில் தோன்றிப் பணித்ததும் உண்டு' என்று தனது சம்மதத்தையும் தெரிவித்தாள். அச்சொற் கேட்டதும், கிருதவர்மா, கரைகாண வரிதான களிப்புக்கடலில் மூழ்கி, வந்த ஒற்றனுக்குத் தன்னுடன்பாட்டுமொழியை மொழிந்தனன். ஒற்றனும் மீண்டு ஸஹஸ்ராநீகனுக்குச் செய்தி தெரிவிக்க, பின்னர்க் கணிகுறித்த நன்னாளில், ஸஹஸ்ராநீகனுக்கும் மிருகாவதிக்கும் வதுவை நிறைவேறிற்று. கேள்வியும் கல்வியும் ஒன்றிவிளங்குதல் போல, ஸஹஸ்ராநீகனும் மிருகாவதியும் விளங்கலாயினர்.

சிலகாலஞ் சென்றதும், ஸஹஸ்ராநீகமன்னவனது மந்திரியருள் யுகந்தர னென்பவனுக்கு யௌகந்தராயணனென்னும் புதல்வனும், சுப்பிரதீகனென்பவனுக்கு ருமண்வானென்னும் புதல்வனும், அந்தரங்க காரியங்களில் துணைவனான நண்பனுக்கு வசந்தகனென்னும் புதல்வனும் தோன்றினர்.

சின்னாள் கழிந்ததும், ஸஹஸ்ராநீகராஜனது மனைவி கருவுற்றாள். அதற்கேற்ப, அவள்முகம் விளர்த்தது; கண் குழிந்தது; மெல்லிய இடை பருத்தது. அந்த மிருகாவதி ஒருநாள் தன் கொழுநனிடத்து, செந்நீர்நிரம்பிய வாவியில் மூழ்க விரும்பிய தன் வயாவைத் தெரிவித்தனள். அறநெறியிற்செல்பவனான ஸஹஸ்ராநீகன், செம்பஞ்சுச்சாறு முதலியவற்றால் செந்நீர்நிரம்பியதுபோலத் தோன்றும் வாவியொன்றை நிருமித்து, அதில் அவளது வயாவைத் தணித்துக்கொள்ளுமாறு அந்தத்தேவிக்குக் கூறினான். மிருகாவதிதேவி அந்நீர்நிலையில் நீராடி யெழுந்த போது, அவள்மீது செம்பஞ்சு தொடக்கமானவற்றின் சாறு படிந்திருந்ததனால், வானத்திற் பறந்து சென்ற கருடப்பறவையொன்று அவளை ஆமிடமென்று கருதிச் சடக்கென வந்து இறுஞ்சிக்கொண்டு வானவழியே போயிற்று.

அதனையுணர்ந்த மன்னவன் துயர்க்கடலில் மூழ்கினான்; மன்னவனது மனத்தின் திண்மை, மிருகாவதியை நாடிச் சென்றதுபோல அவனைவிட்டு அகன்றது. பல சொல்லி யென்? வேந்தன் துயரமிகுதியாற் செயலற்று மூர்ச்சித்துக் கிடந்தனன்.

அந்நிலையில், மன்னவனது நிலையைத் தன் மகிமையாலுணர்ந்த மாதலியென்னுந் தேவேந்திரசாரதி வானூர்தி

னின்று புவியினிலிறங்கி வேந்தனை யணுகி, 'மன்னவ! முன்பு சுவர்க்கத்தினின்று பூமியைநோக்கி மீள்கையில், தன் மாற்றத்திற்கு நீ செவி கொடாமையினுற் சிறிய திலோத்தமை நின்னைச் சபித்தனள்; ஆதலால்தான், இப் பிரிவுத்துயர் நினக்கு நேர்ந்தது; இத்துயரம்நீங்கப்பதினுன் கியாண்டுசெல்லும்' என்றுமெல்லச்சொல்லித்தேற்றினன்; மாதலியின் சொல்லைக் கேட்ட மன்னவனே, வருத்தத் தோடு 'மாதலீ! அந்தப்பாவி திலோத்தமை இன்று வயிறு குளிரட்டும்' என்று வாய்க்கு வந்தவாறு சொல்லி, மந்திரிகள் பலவாறுகத் தேற்றத் தேறி, பூல வருஷங் கழித்தாவது மீண்டும் மிருகாவதியைப் பெறலாமென்னுந் துணிவினுல் அரிதினில் தன்னுயிரைத் தாங்கினன்.

மிருகாவதியைக் கௌவிச்சென்ற கருடன் தான் கவர்ந்த பொருள் ஆமிட மன்றென்றும், யாரோ ஒரு மானுட மகளென்றும் தேறி, தற்செயலாய் அவளை உதயாசலத்தில் நீத்துச் சென்றது. பறவை தன்னைவிட்டுச் சென்றதும், அரசி, ஒருபால் அச்சமும் ஒருபால் துயரமும் தன்னை வருத்த, ஒன்றியாய், தான் கிரிதுர்க்கத்திற் கேட்பாரின் றிக் கிடப்பதுகண்டு கதறி யழலாயினள். அவ்வேளையில், மாசுணமொன்று, புலம்பிநிற்கும் மிருகாவதியைக் கண்டு விழுங்கத் தொடங்கிற்று. அத்தருணத்தில், அங்குத் தெய் விகமாகஒருபுருடன்தோன்றி,அம்மாசுணத்தைக்கொன்று, அம்மாதை அவ்வாபத்தினின்று விடுவித்தான்.

பின்பு, மிருகாவதி, தான் உயிர்த்திருப்பதனினும் இறந்தொழிவதே நல மென்று கருதி, ஆங்குச் சென்ற பெருமதங்கொண்டதோர் காட்டியானையின் முன் போய் நின்றுள். நின்றும், அவ்யானை அன்னுளை ஒன்றுஞ் செய்ய மாட்டாது அவளிடத்து அன்புபூண்டதுபோல நின்றது.

அப்பால், மிருகாவதியானவள், கருப்பொறையாற் சோர்ந்து, ஆங்குச்செல்லும் நீரருவியின் முன்பு நின்று கொண்டு, தனதுபதியை நினைந்து பெருங்குரலெடுத்துப் புலம்பலாயினள். அங்கு, காய் கனி கிழங்குகளைத் தேடி வந்த தாபதப்புதல்வனொருவன், யாரோ ஒருத்தி இடைக் கானிற் குரலெடுத்துப் புலம்புகின்றாளென்று உணர்ந்து அக்குரல்தோன்றும் வழியைப் பிடித்துவந்து, துயரமே ஒருவடிவுகொண்டிருப்பதுபோலத் தோன்றும் மிருகாவதியைக் கண்டான். கண்டதும், அக்குமரன் அவள் இடர்ப் படுவதன்காரணத்தை வினவி அறிந்துகொண்டு, அவளைத் தேற்றி, அவளிடத்து இரக்கம் மேலிட அன்னளை அங் குள்ள சமதக்கினி முனிவரது ஆச்சிரமத்துக்கு அழைத் துச் சென்றான்.

மிருகாவதி, தேற்றரவே வடிவு படைத்தாற்போன்ற சமதக்கினிமுனிவர் தமது பேரொளியால் அவ்வுதய பருவ தத்திலெஞ்ஞான்றும் பகலவன் பிரகாசிப்பதுபோலவிளங் கக் கண்ணுற்றாள். அநாதையான தனக்கு அப்பொழுது அவ்விடத்து அவரையன்றி வேறே யாதரவில்லை யென் பதை அறிந்த அந்த மிருகாவதி, அம்முனிபுங்கவரின் பாதங்களிற் பணிந்துநிற்க, முனிவர்கோமான் தமது ஞானக்கண்ணினால் அவளது செய்தியை முற்றுந்தெரிந்து, 'குழந்தாய்! நீ இங்குத்தானே இனிதாக இரு; உனக்கு ஒருபுதல்வன் பிறப்பான்; அவன் பிதாவின் குலத்தைத் தாங்குவான். விரைவில்தானே நீயும் உனதுகொழுநனைச் சார்வாய்; சிறிதுஞ் சவலைகொள்ளவேண்டா' என்று தேற்றினர். 'அறவிக்குத் தெய்வம் துணை' என்பது முது மொழியன்றோ? மிருகாவதியும் முனித்தலைவரின் மொழி

யைச் சிரமேற்கொண்டு, அந்த ஆச்சிரமத்தில் தானே உறைந்தாள்.

சிலநாள் கழிந்ததும், நல்லிணக்கம் நல்லொழுக்கத்தைத் தருவதுபோல மிருகாவதி புத்திரரத்தினத்தை யீன்றாள். அக்காலையில், 'உன்புதல்வன்பெயர் உதயணனென்பது. பெரும்புகழ்படைத்த இப்புத்திரன் வித்தியாதர சக்கரவர்த்தியாவன்' என்று ஓராகாயவாணி தோன்றிற்று. அதுகேட்டதும், மிருகாவதி வியப்புந் திகைப்புங்கொண்டனள்.

---

## இரண்டாவது அத்தியாயம்:

## உதயண பட்டாபிஷேகம்.

உதயணன், முனிவராச்சிரமத்தில் முனிகுமாரர்கள் தனக்குத் தோழராயமைய நற்குணங்களோடும் வளரலானன். முனிவர்கோமான் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் உரியபருவத்தில் அக்குமாரனுக்குச்செய்து, பதினன்கு விச்சைகளிலும் அவனைப்பயிற்றி வில்வித்தையிலும் பாரங்கதனாக்கினர். மிருகாவதி, தன்மகவினிடத்துக் கொண்ட பேரன்பினல், ஒருநாள், ஸஹஸ்ராநீகனது பெயர் பொறிக்கப்பெற்றுத் தன்கரத்தி லணிந்திருந்த கடகத்தைக் கழற்றிப் புதல்வன்கையி லணிந்தனள்.

ஒருகால் உதயணன் வேட்டையாடக் கானகத்திற்குச் சென்றபோது, இடைவழியில் ஒருவேடன் சர்ப்பமொன்றை வலியப்பற்றிவருவதை நோக்கினன். அழகிய அவ்வரவத்தைக் கண்டதும், அதனிடத்துப் பேரிரக்கங்கொண்ட உதயணன், அவ்வில்லியைநோக்கி, 'நான் சொல்லுகின்றேன், நீ இதனை விட்டிடு' என்றான். என்னலும்,

வில்லி, 'அண்ணலே! இதுவே எனக்குப் பிழைப்பு; நான் எளியவன்; பாம்பாட்டிப் பிழைக்கின்றேன். மந்திரவலிமையாலும் ஒஷதிபலத்தாலும் இங்கு உரகம் கிடைப்பது அரிதாயிற்று: இப்பெருங்காட்டில் அரிதில் தேடிப் பெற்ற பொருளாகும், இது. இதனை விடுத்து யான் என்செய்வேன்?' என்றான். அதுகேட்டதும், வள்ளலாகிய உதயணன், அச்சபரனுக்குத் தனது அன்னையீந்த கடகத்தைக் கொடுத்துப் பந்நகத்தை விடுவித்தான். சபரன் உதயணனிடத்தினின்று கடகம் பெற்றுச் சென்றதும், அந்நாகம், உதயணனைப் பணிந்து, 'யான் வசுநேமியென்னும் பெயரினேன்; வாசுகியின் அண்ணன்; யான் பலநாளாகப் பாதுகாத்துவந்த கோஷவதீ யென்னும் இவ்வீணையைப் பெற்றுக்கொள்க' என்று வேண்டியது. அவ்யாழை உதயணன் பெற்றுக்கொண்டதும், வசுநேமி விடைபெற்றுத் தன்னிருப்பிடத்திற்கு ஏகிற்று. உதயணன், அங்கு நின்று சமதக்கினிமுனிவரினுச்சிரமத்திற்கு மீண்டு, தனது அன்னையின் நயனத்திற்கு ஆராவமுதாக விளங்கினான்.

உதயணனிடத்திற் கடகம் பெற்ற சபரன் காட்டில் அலைந்து திரிகையில், அவனுங்கு அக்கடகத்தை விற்கவேணுமென்னும் விருப்ப முண்டாயிற்று. உடனே, அவன், கௌசாம்பிநகரத்தைச் சார்ந்து அங்காடிவீதியில்அக்கடகத்தை விலைகூறலானான். அந்த அணிகலத்தில் அரசனது பெயர் பொறிக்கப்பட்டிருப்பது கண்ட நகர்க்காவலாளர், சபரனைப் பற்றிக்கொண்டு சென்று மன்னவனது முன்னிலையில் விடுத்தனர். ஸஹஸ்ராநீகராஜன், சபரனைநோக்கி, 'உனக்கு இந்தக்கடகம் எங்கிருந்து கிடைத்தது?' என்று பேராதரத்தோடு வினவினான். அந்த வில்லி, தான் உதயாசலத்தில் திரிகையில் தன்கையில் நாகமொன்றுசிக்கியதும்,

அதனைக்கண்ட திவ்யபுருஷனொருவன் பொங்கும் பரிவி னால் தானணிந்திருந்த அணிகலத்தை ஈந்து அங்காரகத்தை விடுவித்ததும் முதலிய வரலாறு முழுவதையும் விரிவாக விளங்கக் கூறினன்.

சபரன் கூறிய வரலாற்றைக் கேட்டதும், தன்னில்லா ளணிந்திருந்த கடகத்தைக் கண்ட மன்னவனது மனம், செய்வது இன்னதெனத் துணியாது ஊசலாடுவதாயிற்று. அப்பொழுது 'ஒரசரீரி, 'மன்னவ! உனக்கு முன்நேர்ந்த சாபம் நீங்குங்காலம் நெருங்கியது. உனதுமனைவி உதய பர்வதத்தில் சமதக்கினிமுனிவ ராச்சிரமத்தில் 'தன்புதல்வ னோடும் பாங்காக வாழ்கின்றாள்' என்று வானத்தில் தோன்றி, அமுதமழை பொழிந்ததுபோல அரசனகத்தை மகிழ்வித்தது. கோடை வெயிலால்வாடிய தோகையைக் கார்வானம் பொழிந்து களிப்பித்ததுபோலப் பிரிவுத்துய ரால் மெலிந்த மன்னவனை அந்தத் திப்பியமொழி தோன் றித் தளிர்ப்பிக்கவே, ஸஹஸ்ராநீகன், அற்றைநாளை அரி திற்போக்கி, மறுநாள் அந்தச்சபரனையே துணையாக் கொண்டு, விரைவினில் மிருகாவதியைச் சாரவிரும்பிச் சேனையோடும் உதயகிரியை நோக்கிப் பயணமாயினன்.

ஸஹஸ்ராநீகன், சிலநாள் வழிநடந்து, புலிப் போத் தும் புல்வாயும் ஒருதுறையில் நீர் பருகும் பனவராச்சிர மத்தைச் சார்ந்ததும், 'ஆச்சிரமத்திற்கு உபத்திரவ முண் டாகுமோ?' என்னும் பேரச்சத்தினால் தானைமுழுவதையும் ஆச்சிரமத்தின் புறத்தே தங்கவிட்டுத் தான்மாத்திரம் ஆச் சிரமத்திற் புக்கு, சமதக்கினிமுனிவரைத் தரிசித்துப் பணிந் தனன். தூயவடிவம் பெற்றுத் தவமே விளங்குவதுபோன்ற அம்முனிவர், மன்னவனை வரவேற்று ஆதித்தியஞ்செய்து, மகிழ்வுடன் இன்பத்தை யளிப்பதுபோல மகவுடன் மிரு

காவதியையும் அளித்தார். அக்காலத்து மன்னவன்மனத் திலுதித்த மகிழ்ச்சியை நம்மால் ஓரளவிட்டுப் பேசமுடியுமோ? ஸஹஸ்ராநீகன், புதல்வனது வதனாரவிந்தத்தை அப்போதுதான் கண்டனனாதலால், தனது வேணவா உள்ளடங்காமல் அம்மகனைத் தழுவியணைத்துஉச்சிமோந்து உடல்முழுதும் மயிர்ச்சிலிர்ப்புப் போர்ப்பக் களிப்புக்கடலில் மூழ்கினன்.

பின்னர், ஸஹஸ்ராநீகன், சமதக்கினிமுனிவரிடத்து விடைபெற்றுக்கொண்டு, தேவி மிருகாவதியோடும் புதல்வன் உதயணனோடும் தன்னகர்க்கு மீண்டான். மீளுகையில், அந்தத் தபோவனத்திலுறையும் விலங்குகளும், அவர்கள் பிரிவை யாற்றாதனவாய்க் கண்ணீர்சொரிந்தவண்ணம் தபோவனம்வரையில் பின்தொடர்ந்துவந்து, அவர்கட்கு வழிவிட்டன. ஸஹஸ்ராநீகன், அவ்வாறு மீண்டு வருகையில், பிரிவுக்காலத்துத் தேவிக்கு நேர்ந்த சம்பவங்களைத் தன்தேவியினிடத்துக் கேட்டுக்கொண்டும் அக்காலத்துத் தனக்குநேர்ந்தநிலைகளைத் தேவிக்குத் தெரிவித்துக்கொண்டும் இவ்வாறுகழிந்த பதினான்குவருடத்து வரலாறுகளைத் தெரிந்துகொண்டு, படைகளுடன் வழிகடந்து கௌசாம்பியைச் சார்ந்தான்.

நகரமாந்தரனைவரும், மன்னவன் தேவியோடும் புதல்வனோடும் நகர்க்கு வருதலை யுணர்ந்து, அப்போது நகரமெங்கும் மகரதோரணங்கள் நிறைத்தனர்; பல்வகைக் கொடிகளைஉயர்த்தனர்; வீதியெங்கும்பனிநீர்தெளித்தனர்; வாழைகளை நாட்டினர்; கமுகு நாற்றினர். வீடுகளையெல்லாம் வெண்சுதை தீற்றிப் புதுப்பித்தனர்; சந்தனம் அகில் முதலியவற்றின் புகையினால் வீதியெங்கும் வாசமெழுப்பினர்; மாளிகைதோறும் பூரணகும்பங்களைப் பூரித்துவைத்

தனர். பல்வகைவாச்சியங்களையும் முழக்கினர். அப்போது, ஸஹஸ்ராநீகன், உதயணகுமாரனோடும் மிருகாவதிதேவியோடும், வேதியர் ஆசிகூற, மாகதர் இசைபெடுத்தேத்த, கட்டியக்காரர் விருதுகூற, பெரியோர் பல்லாண்டு பாட, வாரமடந்தையர் ஆடல்செய்ய, சத்திரம் சாமரம் முதலிய அரசசின்னங்கள் மேம்பாட்டோடு விளங்க, மகாவிபவத்தோடு நகரிற்புகுந்து அரண்மனை சேர்ந்தனன்.

சிலநாள்கழிந்ததும், ஸஹஸ்ராநீகன், தன் குமரனது நற்குணங்களைக் கண்டு இவன் ஸர்வஜநஸம்மதனாயிருப்பானென்று துணிந்து, அவனுக்கு இளவரசுமுடி சூட்டி, தன் மந்திரியரது குமாரரை அவனுக்கு மந்தணத்துக்கு உதவுமாறு வகுத்தனன். அதனால் யௌகந்தராயணன் ருமண்வான் வசந்தகன் என்னும் மூவரும் உதயணனுக்கு அமைச்சராயினர். அக்காலத்து, 'உதயணன் மந்திரிகளாற் புவிமுழுவதையும் வென்று தன்னடிக் கீழ்ப்படுத்துவன்' என்று ஓர் அசரீரி தோன்றிற்று: வானம் மலர்மழையையும் சொரிந்தது. ஸஹஸ்ராநீகமன்னவன், உதயணகுமரன் இனிது அரசுபுரிதலைக் கண்கூடாகக் கண்டதல்லாமல் திவ்யவாணியும் அவனது திறலை விளக்கியதனால், 'இனி நாம் நமதுவிருப்பத்தின்படி நடக்கலாம்; இராச்சியத்தைக் குறித்துக் கவலைகொள்ளவேண்டுவதில்லை' எனத்துணிந்து, சிலகாலம் மிருகாவதிதேவியோடு யாதொருகவலையுமின்றி நாள்கழித்தான்.

அப்பால், ஸஹஸ்ராநீகன், தனக்கு மூப்புமேலிடவே, ஐம்புலவாசைகளை முற்றும்விட்டொழித்து, நற்குணங்கள் வாய்ந்த தன்புதல்வன் குடிகளெல்லாம்ஆர்வம்மீதூர இனிது அரசுபுரிதலைக் கண்டு மகிழ்ந்து இராச்சியபாரம் முழுவதையும் அவனிடத்தில்தானே வைத்திட்டு, மந்திரி

யர் யுகந்தரன் முதலியோராடும் மனைவி மிருகாவதியோ டும் நாட்டைவிட்டு, மஹாப்ரஸ்தாநமாக இமயாசலத்திற் சென்று நற்கதி யடைந்தான்.

---

## மூன்றுவது அத்தியாயம் :

## வாசவதத்தையின் வரலாறு.

உதயணகுமாரன், தனது தமப்பன் மூலமாகக் கிடைத்த வற்சராச்சியத்தை மனுமுறைபிறழாது நன்கு அரசுபுரிந்தான்; குடிகளும் அந்த வற்சராஜனிடத்தில் ஆர்வம் மீதூர்ந்தனர். நாளடைவில், வற்சராஜன், மெல்ல மெல்ல ராஜாங்ககாரியங்களைெல்லாம் யௌகந்தராயணன் முதலிய தனது அமைச்சரிடத்து நம்பி வைத்திட்டு, தான் உல்லாசமாகஇருக்க விரும்பினன்; அவன் அல்லும் பகலும் வசுநேமி தந்த கோஷவதியை வாசிப்பதிலும், வனத்திற் சென்று வேட்டையாடுவதிலும், யாழ்வாசினையைக் கேட்டதனுற் சுவாதீனமற்ற மத்தக்களிறுகளைப் பிணித்துக் கொணர்வதிலுமே பொழுதுபோக்கலாயினன்.

இவ்வாறு நடந்துவருகையில், வற்சராஜன், தனது மனத்தில், 'எனக்குத் தக்க இல்லாள் கிடைப்பது எங்கும் அருமையாயிருக்கின்றது. வாசவதத்தை என்பவள் மாத்திரம் குலத்தினுலும் உருவத்தினுலும் பருவத்தினுலும் எனக்குத் தக்க கன்னிகை யென்று கேள்வியுறுகின்றேன். ஆயினும், அவள், நமதுமாற்ருனகிய உச்சயினீநகரத் தரசன் * சண்டமகாசேனனது புதல்வி; ஆகையால், அவளைப் பெறுவது அருமையே' என்று இவ்வாறு சிந்தித்தான்.

---

*'ப்ரத்யோதன்' என்பது, இவனது இயற்பெயரென்று பல நூல்களினுலும் தெரியவருகின்றது.

அக்காலத்திற்றானே, சண்டமகாசேநராசனும் 'எனது மகளுக்குத் தக்க கொழுநன் இத்தராதலத்தில் இல்லைபோலும். வற்சராசனாகிய உதயணன் நமது புத்திரிக்கு ஏற்ற கணவன்தான்; ஆயினும், அவன் நமது கருத்துக்கு இணங்கி எவ்வாறு நடப்பான்? இருக்கட்டும். அவனை நம்வயத்தி லொழுகுமாறு செய்விக்க உபாயமொன்று உண்டு; அதாவது:—வேட்டத்திற் கருத்தூன்றிய அவ்வேந்தன், வேழங்களைப் பிணித்தவண்ணம் கானகத்தில் ஒன்றியாய்த் திரிகின்றான்; இச்செய்கை அவனிடத்துஉண்மையால் அவ்வேந்தனைத் தந்திரத்தினால் எளிதில் நம்வலையி லகப்படுத்திவிடலாம். பின்பு,காந்தருவ வித்தையில் தேர்ந்த அவ்வுதயணராசனிடத்தில் நமது மகள் வாசவதத்தையை மாணாக்கி யாக்கினால், அவள் திறத்து அந்தவற்சராஜன் காதல்கொள்வா னென்பது திண்ணம். இவ்வகையால்தான் உதயணனை நமது மருகனாகக் கொள்ளுதல் இயலும். இதனைத்தவிர்த்து வேறு எந்தவழியும் பயன்பெறாது' என்று மனத்திலுறுதிகொண்டான்.

பின்பு, சண்டமகாசேனராசன், காளிகோயிலுக்குச் சென்று தேவிக்குப் பூசனைபுரிந்து பணிந்தேத்தித் தனது எண்ணத்தை ஈடேற்றுமாறு தேவியை வேண்டினான் உடனே, காளியினருளால் 'வேந்தே! உன்விருப்பம் விரைவினில் முற்றுறும்; நீ சிறிதும் கவலை கொள்ள வேண்டா' என்று ஓரசரீரி தோன்றிற்று. அதனைச் செவியேற்ற மகாராசன் எல்லையில்லாததோர் மகிழ்ச்சியடைந்து, அங்குநின்று மீண்டு, அவ்விடயத்தைக் குறித்துப் புத்ததத்தனென்னுந் தனது உழையனோடு ஆராயத் தொடங்கினான்.

மந்திரியோடும் ஆய்ந்த பிறகு, மகாசேனராஜன், 'உதயணனோ, மானத்தையே அணிகலமாகக் கொண்டவன்; உலோபகுணம் சிறிதுமில்லாதவன்; மிக்கவலிமையுடையோன்; அவனிடத்துப் பணியாளர்யாவரும் பேரன்பினர்; ஆதலால், அன்னனை, சாமம் முதலிய உபாயங்களினால் அகப்படுத்துதல் அருமையே. ஆயினும், ஒருபாயத்தைச் செய்துபார்ப்போம்' என்று கருதி, ஓரொற்றனைக் கூவி இவ்வாறு ஏவினான்: 'ஒற்றனே! நீ இங்குநின்றும் வற்சராசனான உதயணனிடஞ் சென்று யாம் கூறியதாக இதனைச் சொல்க. எமதுபுதல்வி உம்மிடத்துக் காந்தருவவித்தையில் மாணவிகை யாக விரும்புகின்றாள். நுமக்கு எம்மிடத்து அன்புஉளதாயின், நீர் இங்குவந்து எமது புதல்வியை அவ்விச்சையிற் பயிற்ற வேண்டுகின்றோம்' என்பதே.

ஏவிய தூதன், கௌசாம்பியைச் சார்ந்து உதயணனைக் கிட்டி, அன்னணமே செய்தி தெரிவித்தான். வேந்தன், தூதன்கூறிய தகுதியற்றசொற்களைச் செவியேற்றதும், யௌகந்தராயணனை மறைவிற் கூவி, சண்டமகாசேனராஜனது கருத்தைத் தெரிவித்து, 'இவ்வண்ணம் சண்டமகாசேனன் எனக்குச் செய்திசொல்லி விடுத்தது தருக்கினாலோ? அன்றி, ஏதேனும் அக்கொடியானுக்கு வேறு கருத்திருக்குமோ?' என வினவினான். உதயணன் இவ்வாறு வினவவே, பேரறிஞனாகிய அவ்வமைச்சன், வேந்தனது நன்மையையே நாடியவனாதலால் பின்வருமாறு இடித்துக் கட்டுரைகூறலானான்:—'மன்னவ! நீர் அநவரதமும் வேட்டம் முதலிய வ்யஸநங்களிற் கருத்தூன்றியுள்ளீரென்ற பெயர் புவிமுழுதும் பரவியிருக்கின்றது; அதனால் விளைந்த தீப்பயனேயாகும், சண்ட

மகாசேனராஜன் இவ்வாறு செய்திகூறி விடுத்தது. நம்மை அன்னான் தனது கந்யாரத்தினத்திறைற் பிணித்து விடலா மென்று அறுதியிட்டே ஆள்விடுத்துள்ளான். ஆகவே, நீர், இனியாவது வேட்டம் முதலிய வ்யஸநங்களிற் கருத்துவையாது அவற்றை ஒழித்திடுக. மன்னவர் வ்யஸ நங்களிற் கருத்துவைப்பரேல், பிடிபடுக்கப்பட்டகளிறு போலப் படுகுழியில் வீழ்வ ரன்றோ !' என்றான்.

அமைச்சன் இவ்வாறு கூறவே, உதயணன் அவ் வொற்றனை நோக்கி, 'நமது புதல்வி என்னிடத்து மாண விகையாகிப் பயில நமக்கு விருப்ப முளதாயின், அம் மகளை இங்கு அனுப்புக வென்று யான் கூறியதாக உங்க ளரசரிடத்துச் சொல்க' என்று மாறு கூறினான்.

வந்த ஒற்றனுக்கு இவ்வாறு மறுமொழிகூறி விடுத்த தும், உதயணன், தனது மந்திரிமாரை ஒருங்கே திரட்டி, தான் சண்டமகாசேனராஜனைப் பற்றிக் கொணருமாறு செல்லவிருப்பதைத் தெரிவித்தான்.

அரசனது சொல்லைக் கேட்டதும், மந்திரியருள் முந்தியவனை யௌகந்தராயணன் 'மன்னவரே ! நம்மால் அவ்வாறு செய்யவும் இயலாது; செய்தலும் தகாது. அம் மன்னவனோ மிக்க பெருமை பெற்றவன் : மேலும், நம் மோடு உறவுகொள்ளவும் விரும்புபவன். அவனது சிறப் பைச் சுட்டும் வரலாறொன்று கூறுகின்றேன் : கருத் துடன் கேட்க' என்று சண்டமகாசேனராசனது சரிதை யைக் கூறலானான்:—

" சிந்து கங்கைநீர் சேர்ந்து வளம்படு
மந்த மாகு மவந்திநன் னாட்டினு
ளிந்து சூடிய விஞ்சி வளநக
ருந்து மாளிகை யுச்சயி னிப்பதி"

புவிக்கு அணிகலமாக விளங்குகின்ற தன்றோ! அது, தன்னிடத்து வாய்ந்த வெண்சுதை தீற்றிய மாடமாளிகைகளால் விண்ணுலகத்ததான அமராவதியையே யிகழ்கின்றது. சிவபிரான் திருக்கைலாயத்திலும் அன்புமீத்து, அந்நகரத்தில் மஹாகாலமூர்த்தியாகி வேணவாவுடன் வாழ்கின்றார். அங்கு முன்னே மன்னவரிற் பெருமைவாய்ந்த மகேந்திரவர்மனென்று ஒருமன்னவ னிருந்தான். அன்னுனுக்கு ஜயசேனனென்று ஏற்ற ஒரு புதல்வன் தோன்றினன். அந்த ஜயசேனமன்னவனுக்கு ஒரு புதல்வன் பிறந்தான்; அவனது நாமதேயம் மகாசேன னென்பது. அவன் வலிமையிலும் ஆற்றலிலும் நிகரற்றவன். அவன், தனது நாட்டிற் செங்கோல் செலுத்திவருகையில், 'எனது ஆற்றலுக்கு ஏற்ற ஆயுதமாவது, குலகலங்கட்கு ஏற்ற மனைவியாவது வாய்க்கவில்லையே!' என்கிற சிந்தை அவனுக்கு உதித்தது. பின்னர், மகாசேனன் சண்டிகோயிலுக்குச் சென்று அந்தத் தேவிக்குப் பூசனை புரிந்தவண்ணம் பலநாள் பட்டினிகிடந்தான்; பிறகு, தன் தசையை யரிந்து அங்கியிலோமஞ் செய்தனன். அப்போது சண்டிதேவி, மகாசேகராஜனுக்குக் கண்கூடாகக் காட்சிதந்து, 'உனது செய்கைக்கு மனமுவந்தேன்; இந்த எனது வாளத்தைக் கைப்பற்றுக. இந்த வாளத்தின் மேன்மையால், இனி நின்னை மாற்றுரால் ஏற்றல் இயலாது; அன்றியும், மூவுலகிலும் இணையற்ற கட்டழகியாகிய அங்காரகாசுரன் புதல்வி அங்காரவதியென்பவளை விரைவினில் இல்லாளாகப் பெறுவை. நீ இப்பொழுது மிக்க கடுந்தொழில் புரிந்தமையால், இனி உனக்குச் சண்டமகாசேனனென்று பெயர் வழங்குக' என்று கூறி வாளத்தையீந்து திரோதானமாயினள். அரசன் தன்னெண்ணங் கைகூடியதால் எல்லை

யில்லதோர் மகிழ்வெய்தினன். சண்டமகாசேனராசனுக்கு முன்னமே நடாகிரி யென்று ஓர் மதயானை இருந்தது. இப்போது சண்டிதேவியின் வாளமுங் கிடைத்தது. தேவேந்திரனுக்குக் குலிசமும் ஐராவதமும் போல, சண்டமகாசேநராஜனுக்கு இவ்விரண்டும் இருமணிகள்.

இவ்விருபொருள்களைப் பெற்ற சண்டமகாசேனராசன் இனிது வாழ்கையில், ஒருகால் வேட்டமாட வனத்திற் சென்றான். அங்கு, வடிவத்தினாற் பருப்பதம்போன்ற கொடிய கேழலொன்றைக் கண்டான். அது, இரவில் தோன்றும் இருள் முழுதும் ஓர் பிண்டமாகத் திரண்டது போலும். மன்னவன் அப்பன்றியைத் தனது கூரிய கணைகளால் வடுப்படுத்தியும், அது அவற்றை ஒரு பொருட்டாக மதியாது மன்னவனது தேரைப் பொடிப்படுத்திப் பிலத்திற் புக்கது.

அரசனும் அடங்கா வெகுளியனாய்ச் சிதைந்த தேரை விட்டிட்டுப் பதாதியாகவே அவ்வெயினத்தைப் பின்பற்றி, தன் வில்லே துணையாகப் பிலத்திற் புகுந்தனன். புகுந்து செல்லு மெல்லைக்குள் அவ்வராகம் மாயமாய் மறைந்து போக, அவ்வரசன் அங்கு இனிய நகரொன்றைக் கண்ணுற்று, வியப்படைந்து, அந்நகரத்தினிடையே யிருந்த வாவிக்கரையிற் சற்று இளைப்பாறினான்.

அங்கு இருக்கையில், ஐங்கணையோனது வெற்றிக் கணைபோன்ற மங்கையர்நூற்றுவர் சூழ ஒரு மாது வருவதை நோக்கினான். அம்மங்கை, அங்குத் தங்கிய மன்னவனிடத்துக் காதல்கூர்ந்தவள் போன்று தன்னிரு கண்களாலும் அரையனை நோக்கியவண்ணமே அவனது அருகிற் சார்ந்தவளாய், 'நீர் யார்? எங்குநின்றும் இங்கு வந்

தீர்?' என்று வினவ, அரையனும் தன் சரிதையைக் கரவாது முற்றும் மொழிந்தான்.

மன்னவனது சொல்லைச் செவியேற்றதும், அக்கன்னிகை, காதலைப் புலப்படுத்துங் கண்களினின்று நீரோடு அகத்துள்ள உறுதியையும் வெளியே விடுத்தனள். 'நீ யார்? நினது துயர்க்குக் காரணம் என்னை?' என்று சண்டமகாசேநராஜன் அவளை வினவலும், காமவேளது கட்டளைக்கு இணங்கி இன்னணம் மறுமொழி பகர்ந்தனள்:—' இங்கு நமது கண்ணெதிரில் கேழலுருவத்துடன் எவன் தோன்றினுனே, அவன் அங்காரக னென்னும் பெயர்பெற்ற அசுரன் யான் அவ்வவுணனது புதல்வியாவேன் ; அங்காரவதியென்னும் பெயரினேன். இவன் வயிரம்போல் வலிய உடல் படைத்தவன் ; இவன் பல அரசர்களது அரண்மனைகளிற்புக்கு அரசமங்கையரைக் கவர்ந்துவந்து எனக்குப் பரிவாரமகளிராகச் செய்துள்ளான். இந்த மகாசுரன் சாபத்தினல் அரக்கனயினன் ; இளைப்பினலும் நீர்வேட்கையாலும் இப்போது வலியொடுங்கி யிருக்கின்றதனல், நீர் தன் கையிலகப்பட்டும் உம்மை இவன் உயிருடன் விட்டிருக்கின்றான் ; இப்போது வராகவடிவத்தை நீத்துத் துயில்கின்றான் ; இவன் துயிலொழிந்து எழுவனயின் உமது திறத்திற் பெருந்துன்பம் இழைப்பது தேற்றம். நமக்கு இனி நேரவிருக்குந் தீங்கை எண்ணியதனல்தான் எனது கண்களினின்று நீர் பெருகிற்று' என்றாள்.

இவ்வாறு அங்காரவதி மறுமாற்ற முரைத்ததும், சண்டமகாசேனராசன் அவளது காதற்குறிப்பை உய்த்துணர்ந்து அன்னளைநோக்கி,' என்மீது நினக்கு உண்மையாக அன்பு உளதாயின், இவ்வுதவியை மாத்திரம் எனக்குப் புரிக!' என்றுகூறி, 'இவன் கண்விழித்ததும் நீ இவ

னது எதிரிற் சென்று புலம்புக. அப்போது அவுணன் நீ புலம்புங் காரணத்தைத் தவறாது வினவுவன். நீ அப்போது அவனை நோக்கி, 'உன்னை எவனேனுங் கொன்று வீழ்த்துவனாயின் எனக்குப் புகலாவார் ஒருத்தருமில்லையே யென்ற ஈது ஒன்றுமே எனது துயர்க்கு ஏது' என்று மறுமொழி பகர்வாய். நீ இவ்வாறு செய்வாயேல், உனக்கும் நன்று; எனக்கும் மேதக்க நன்மையுண்டாம்' என்றான், அது கேட்ட அங்காரவதி, அரசன் சொல்லிற்குத் தான் அவ்வாறே செய்வதாக இணங்கினாள்; காதற்கடவுள் பெற்றோரிடத்தும் பகைமை விளைக்கின்றான்; இது என்ன வியப்பு!

'ஒருகால்; மன்னவனுக்குத் தன் தந்தையால் ஏதேனும் தீங்கு நேருமோ?' என்ற சங்கை தோன்றியதனால், அங்காரவதி, சண்டமகாசேனராசனை அங்கு ஓர் மறைவிடத்திற் கரந்துவைத்துத் தன்தந்தையி னருகிற் சார்ந்து அவன் உறக்கந் தெளிகையில் அவனது முன்னிலையிற் புலம்பலானாள்.

உடனே, அசுரன்—' குழந்தாய்! நீ ஏன் புலம்புகின்றாய் ?' என்று வினவினான்.

அங்காரவதி:—' தந்தையே! உம்மை எவனேனுங் கொன்றிடுவானாயின், எனக்குப் புகலிடமில்லையே யென்ற ஈதொன்றுமே என்மனத்தை வாட்டுகின்றது. இது தான் யான் புலம்பக் காரணம்' என்றாள்.

அசுரன்:—(சிரித்துவிட்டு), 'புதல்வி! என்னுடல்முழுதும் வயிரமென்பதை நீ உணராயோ? எனது இடக்கையில் மாத்திரம் ஊன முண்டு. அதனைச் சாபத்தினாற் பாதுகாக்கின்றேன். இவ்வாறிருக்க, என்னுயிரை மாய்க்கவல்லவன் யாவன்? நீ சிறிதுங் கவலவேண்டா' என்று கூறி, அங்காரவதியைத் தேற்றினான்.

இவற்றை யெல்லாம் கரந்திருந்த அரசன் செவியேற்றனன்.

பின்னர், அங்காரகாசுரன் ஒரு நொடிப்பொழுதிற்குள் படுக்கைவிட்டெழுந்து நீராடிச் சிவபிரானை வழிபடலாயினன். அற்றம் நோக்கியிருந்த அரையன், அவ்வேளையில் அவுணனை யணுகித் தன்கிலேயில் நாணேற்றிப் போர்செய்ய வருமாறு அன்னவனை அறைகூவினன். அவுணன் மௌன விரதத்தை அக்காலேயில் மேற்கொண்டொழுகுபவனாதலால், வாய்திறவாது தனது இடக்கரத்தைத் தூக்கிச் சற்றுப் பொறுத்திருக்குமாறு சைகை காட்டினன். மன்னவன் விரைந்து தொழில் செய்யவல்ல ஹஸ்தலாகவம் வாய்ந்தவனாதலால், அவ்வெல்லவை நோக்கி, அவனது இடக்கரத்தில் அம்புமழை பொழிந்தான். மருமத்திற் கணை தாக்கியதனால், அவுணன் பேரிரைச்சலிட்டு அறிவுகுன்றிப் பொறிகள் கலங்கி உயிர்ப்பொடுங்கி உயிர் துறந்தான்.

சண்டமகாசேனராசன், பின்னர் அங்காரவதியை வதுவைசெய்துகொண்டு உஞ்சைநகருக்குத் திரும்பினன். அசுர கன்னிகையை மணம்புரிந்த மன்னவனுக்கு, கோபாலகனென்றும் பாலகனென்றும் மகார் இருவர் தோன்றினர் அரையன், புதல்வர்தோன்றிய பிறகு, மிக்ககளிப்பினல் இந்திரவிழா அயர்ந்தனன். வாசவன், அரையன்புரிந்த விழாவிற்கு மனமகிழ்ந்து, அவனது கனவில் தோன்றி, 'என்னருளால் இணையாருமில்லாத புதல்வியொருத்தியை நீபெறுக' என்று பணித்தனன். அவ்வாறே சிலகாலஞ் சென்றதும், 'திங்களின்மாற்று வடிவமோ' என்று காண்போர் கூறுமாறு அந்தவரசனுக்கு ஓர்பெண்மகவு சனித்தது. அக்காலேயில், 'இப்பெண்மகவின் வயிற்றில் காமதேவனது அவதாரமாய் வித்யாதர மண்டலங்கட்கெல்லாந்தலைவனுவான் ஒருத்தன்

உதிப்பான்' என்று ஓரசரீரி தோன்றிற்று. உடனே, அரசன், 'எனக்கு வாசவன் அகமகிழ்ந்து இப்பெண்மணியை யளித்தனனாதலால், இவள்பெயர் வாசவதத்தை யாகுக' என்று கூறி, அங்ஙனமே அக்குழவிக்கு நாமகரணஞ்செய்தான். அன்னாள், கடைதற்குமுன்னே கமலை பாற்கடலி னகட்டிற் கிடந்தது போல, இப்போது தந்தையரண்மனையில் வாழ்பவளானாள். இவ்வாறு பெருஞ்சிறப்பினன், சண்டமகாசேனராசன். அன்றியும், தூர்க்கம் படை முதலியவற்றாலும் வலியான் : அவனை வெல்லுதல் அருமை. மேலும், தன் புதல்வியை நினக்குத் தரவும் விரும்புகின்றான்; ஆயினும், மானியாதலால், தன் கை மேற்படவேண்டுமென்று எதிர்பார்க்கின்றான், வாசவதத்தைக்கு மணாளனாகுபவன் நீயே யென்பதும் தேற்றமென்று கூறி முடித்தான்.

யௌகந்தராயணன் இவ்வாறு உரைத்ததும், உதயணன் தன் மனத்தை வாசவதத்தைதிறத்துக் கொள்ளை கொடுத்திட்டு, அவளைச் சிந்தித்தவண்ணமாகவே யிருந்தான்.

---

### நான்காவது அத்தியாயம்.

## உதயணன் சிறைப்படுதல்.

இங்கு இவ்வாறு இருக்க, உஞ்சைநகரை நோக்கிச் சென்ற ஒற்றன், சண்டமகாசேனராசனிடத்து உதயணன் உரைத்ததை ஒன்றும் விடாது கூறினான். அவ்வரசன் ஒற்றனுரைத்ததைச் செவியேற்றதும், 'உதயணன் மானி யாகையால் ஈண்டு வாரான்; வாசவதத்தையை ஆங்குப் போக்கலாமெனின், அது நமக்கு இளிவரவாம். ஆகவே, நாம் இப்போது செய்பத்தக்கது, உதயணனைத்

தந்திரத்தாற் பிணித்துக் கொணர்தலே' என்று அறுதி யிட்டு, மந்திரிகளைக் கூவி அன்னாருடன் மந்தணம் புரிந் தனன்.

பின்பு, மகாசேநராஜன் தனக்கு ஏற்றதாக, வேழப் பொறியொன்றை இயற்றுமாறு பணியாளர்க்குக் கட்டளை யிட்டான்.

"அரக்கி னும்மெழுக் காகிய நூலினு
மரத்தி னுங்கிழி மாவின் மயிரினும்
விரித்த தோலினும் வேண்டிய வற்றினுந்
தரித்து யானையைத் தாமிக் கியற்றினர்."

அவ்வாறு இயற்றிய வேழப்பொறி, செய்தொழில் வல்லமையால் போலியானையாகப் புலப்படாது இயற்கை யானையாகவே புலப்பட்டது. சண்டமகாசேனராசனது ஆணையின்படி, பணியாளர், அப்பொறியின் அகம்படியில் பலவீரர்களைப் படைக்கலங்களோடு மறைந்துறையுமாறு வகுத்து, அவ்வேழத்தை விந்தமலையைச் சார்ந்த அடவி யிற் கொண்டுபோய் நிறுவினர். சண்டமகாசேனராசனும் உதயணன் சிறைப்படுவதை யெதிர்பார்த்திருந்தனன்.

களிற்றை யகப்படுத்திக்கொள்வதில் வேணவாவுடைய னான உதயணமன்னவனது மனிசர், சேய்மையில் வேழத் தினைக் கண்டதும், உதயணனிடத்து விரைந்துசென்று, 'வேந்தே! விந்தமலைக்கானகத்தில் ஒருவேழம் திரிகின் றது; அதனைப் போன்ற களிற்றை இப்பூமண்டலத்தில் எங்குங் கண்டதில்லை: அது தனது வடிவத்தால் வானுற வோங்கிய மலையையே போல்கின்றது' என்றனர்.

ஒற்றர் கூறியதைச் செவியேற்ற உதயணராசன், உவகையுள்ளடங்காது புறம்பொசிய, அவ்வொற்றர்கட்கு

லக்ஷம்பொன் ஈந்தனன்; அன்றியும், 'யான் நடாகிரிக்கு எதிரியாகிய அவ்வேழத்தைப் பற்றுவனேல், பிறகு, சண்டமகாசேனராசன் எனக்குக் கீழ்ப்படிவனென்பது, திண்ணம்; பின்பு அவன் வாசவதத்தையைத் தானாகவே மணம்புரிவிப்பான்' என்று மனப்பால் குடித்தனன்.

உதயணன், மறுநாள் பொழுதுபுலர்ந்ததும், அமைச்சர் தடுத்துக் கூறியதையும் புறக்கணித்து, வேழத்தைப் பிடிக்கவேணுமென்னும் வினைசையால், வந்த ஒற்றர்கள் முன்னர்ச் சென்று வழிகாட்ட. விந்தமலைக்கானகத்திற்குப் புறப்பட்டான். புறப்படுகையில், புறப்பட்ட இலக்கினத்தின் பயன் 'சிறைப்பட்டுக் கன்னிகையைப் பெறுதல்' என்று நிமித்திகர் மொழிந்ததையும் உதயணன் மனத்திற் கொண்டிலன்; "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று, சூழினுந்தான் முந்துறும்" என்ற மறைமொழி தவறுமோ?

வற்சராசன், விந்தமலைக் கானகத்தைச் சார்ந்ததும், 'அங்குள்ள வேழம் வெருவி எங்கேனும் ஓடிவிடுமோ?' என்னுஞ் சங்கையினால், படைகளைச் சேய்மையில் தானே இறக்கி, ஒற்றர்மாத்திரம் துணைவராக உடன்வர, தனது வ்யஸநம்போற் பரந்துகிடந்த விந்தமலைக் கானகத்திற் கோஷவதியென்ற யாழொன்றைப் பூண்டவண்ணம் உட்புகுந்தான். புகுந்து விந்தமலையின் தென்பாரிசத்தில் வெகுதூரஞ்சென்றதும், உதயணன், உண்மையான வேழம் போலவே சேய்மையில் தோன்றும் வேழப்பொறியைச் சாரர்கள் காட்டக் கண்டான். அதனைக் கண்டதும் வற்சராசன், ஒன்றியாய் அக்கானகத்தில் இன்னிசையுடன் குரலெடுத்துப் பாடிக்கொண்டும் யாழை முரன்று கொண்டும், வேழத்தை எவ்வாறு அகப்படுத்துவதென்று சிந்தித்தவண்ணம் சென்று அவ்யானையை மெல்லச்சார்ந்-

தான். உதயணன், தன்மனம் இன்னிசையெடுத்துப் பாடுவதிற் சென்றிருந்ததனாலும், அந்தியிருள் செறிந்திருந்ததனாலும், மாயகஜத்தை உண்மைவேழமென்று மாறாகக் கருதினான்.

அவ்வேழப்பொறியும், இன்னிசையி னீடுபட்டது போன்று முறம்போன்ற தன்செவியைப் பரப்பி அரசனையணுகி யணுகி, அவன் தன்னைப் பற்றுமாறு கிட்டும்போதெல்லாம் சற்றுச்சற்று விலகி, இங்ஙனம் மன்னவனைக் கானகத்தில் வெகுதூரம் அலைக்கழித்தது. உதயணன் படைத்துணையின்றி வெகுதூரம் தனித்து வந்திட்டதைக் கண்டதும், அவ்யானையினகம்படியிற் கரந்திருந்த மள்ளர், கதுமென வெழுந்து உதயணனை வளைந்துகொண்டு ஆயுதபாணிகளாய் நின்றார். அம்மள்ளரைக் கண்டதும், உதயணன், தன்கருத்திற் சினம்பொங்கப் போர்செய்யுங் கருத்தினனாய், தன்னெதிரில் நின்றவர்களைச் சரிகையாற் குத்தி வீழ்த்தலானான். அவ்வெல்லையில் அவ்வுதயணனுக்குப் பின்புறமாகச் சிலர் வந்து அவனைப் பற்றிக்கொண்டனர், அவர்களதுசங்கேதப்படி மேன்மேலும் துணைப்படை வந்து உதவவே, அவ்வீரர் யாவரும் ஒருங்கே திரண்டு, உதயணனைச் சிறைசெய்து சண்டமகாசேனராசனது முன்னிலையிற் கொண்டுபோய் விட்டனர்.

சண்டமகாசேனராசன் தன்கருத்து முற்றியதனால் மகிழ்ச்சி மீக்கூர்ந்து உதயணனுடன் சென்று உஞ்சைநகரைச் சார்ந்தனன். மானம் வருத்துவதனால் மாசடைந்த உதயணமன்னவன், அந்நகரமாந்தரின் பார்வைக்குக் களங்கியாகிய திங்கள்போன்று மகிழ்ச்சிசெய்பவனாகத் தோன்றினான்.

வற்சராசனுன உதயணனைக் கண்ட உஞ்சை நகரத்து மனிதர்கள், அவனிடத்து மெய்யன்புகூர்ந்து, 'ஒருகால் சண்டமகாசேனராசன் இவ்வுதயணனைக் கொன்றிடுவனே?' என்று ஐயுற்று ஒன்றுகூடிக் கலகஞ்செய்யலாயினர். அது கண்ட சண்டமகாசேனராசன், அவர்களை நோக்கி 'வற்சராசனுடன் சாமோபாயத்தினால் இன்புற்று வாழ்ந்திருப்பதாகக் கருதியிருக்கின்றேனே யன்றி, அன்னனைக் கொலைபுரியுமாறு கருதுவே னல்லேன்: நீவிர் கலங்க வேண்டா' என்று தேற்றிப் பௌரஜநங்களைச் சாந்தப்படுத்தினன்.

பிறகு, மன்னவன், தன்புதல்வி வாசவதத்தையை அங்குத்தானே உதயணனிடத்துக் காந்தருவவித்தை பயிலுமாறு அனுப்பினன்; அன்றியும், 'பிரபோ! நீவிர் இவளைக் காந்தருவவித்தையில் நன்கு பயிற்றும். பின்னர் நமக்கும் நன்மையுண்டாகும்; மனத்துயரை நீத்திடுக' என்றுங் கூறினன். அவ்வுதயணனது மனம், வாசவதத்தையைக் கண்டதும் காதல் மீக்கூரவே, தான் சிறைப்பட்டிருப்பதையும் மறந்திட்டது வாசவதத்தையின் கண்களும் மனமும் ஒருங்கே உதயணனிடத்துச் சென்றன: என்றாலும், நாணம் கண்ணோக்கத்தை விலக்கிற்று; ஆயினும், மனமோ தடுப்பாரொருவருமின்மையால் அவ்வுதயணனிடத்தே குடிகொண்டது. அப்பால், காந்தர்வசாலையில், உதயணன் வாசவதத்தையிடத்தே கண்ணோக்குப் புக, அவளைக் காந்தருவத்திற் பயிற்றியபடியே இனிதிருந்தான். உதயணனுக்குத் தன்மடியில் வீணையும், மிடற்றில் இன்னிசைக்கீதமும், எதிரில்வாசவதத்தையும் இருந்து, விநோதவேதுக்களாயின. அவ்வுதயணன் சிறைப்பட்டிருந்தனனே யாயினும், திருமகள் திருமாலினிடத்து இருத்தல்போல, வாசவதத்தை, அன்னனைப்

பிரியாது அவனிடத்தே கருத்தூன்றி அவனுக்குப் பணி விடைகள் புரிந்து வந்தனள். இங்கு இவ்வாறு இருக்க:

---

## ஐந்தாவது அத்தியாயம்:

## உதயணனது சிறைமீட்சி.

வற்சராசனைத் தொடர்ந்து சென்ற ஜநங்கள் மன்னவன் மாற்றான்கையிற் சிக்கியதை நகரத்திற் சென்றுகூற, கௌசாம்பிநகரமெங்கும் பெருங்குழப்ப முண்டாயிற்று. நகரமாந்தர், உதயணனிடத்துப் பேரன்புபூண்டவர்களாதலால் உஞ்சைநகரத்தின்மீது படையெடுத்துச்சென்று தாக்கவேண்டு மென்னும் பேரொலி நகரின் நான்மருங்கிலும் தோன்றிற்று.

அப்போது, ருமண்வானென்னும் உழையன், நகரமாந்தரைத் திரட்டிப் பின்வருமாறு கூறினன்:—'நகரத்துப் பெரியோர்களே! நீங்கள் வேந்தனிடத்துள்ள பேரன்பினால் மாற்றான்நகரத்தைத் தாக்கியழிக்குமாறு கருதுவது எமக்கு மிக்கமகிழ்ச்சியையே விளைக்கின்றது. ஆயினும், இப்போது ஆராயவேண்டுவது ஒன்று உண்டு. சிறிது கருத்துடன் நீவிர் இதனை ஆராயவேண்டும். சண்டமகாசேனராசனை நமது வலிமைகொண்டு வெல்லுதலோ அருமை. அன்னான் சண்டிதேவியினருளினாற் பேராற்றல் படைத்துள்ளான். அன்றியும், நாம் படையெடுத்துச்சென்று உச்சயினி நகரத்தைத் தகர்க்கையில், சண்டமகாசேனராசன் ஒருகால் உதயணமன்னவனைக் கொலைபுரிந்தாலும் புரியலாம்; அவ்வாறு புரிந்திடின், நமது கருத்து முற்றுறாது. ஆதலால், இப்பொழுது, சண்டமகாசேனராசன்மீது படையெடுத்துச்செல்லுதல எவ்வாற்றானுந் தக்கதன்றாம். நமது

காரியத்தை நமது மதிநுட்பத்தினுல் வெல்லவேண்டிய கால மாகும் இது' என்று கூறி, ஜனங்களின் பரபரப்பை ஒருவாறு அடக்கினுன்.

யௌகந்தராயணன், நாடுமுழுதும் உதயணமன்னவனிடத்துப் பேரன்புகூர்ந்திருத்தலைக் கண்கூடாகக்கண்டு. ருமண்வான் முதலியோரை நோக்கி, உறுதிமொழியொன்று கூறலானுன் :—'ப்ரக்ருதிகளே! நீவிர் யாவரும் சோர்வின்றி இங்குத்தானே உறையவேண்டும். இப்போது இந்நாடு நும்மாற் கருத்துடன் பாதுகாக்கத்தக்கது. சமயம் வாய்க்கும்போதுதான் பராக்கிரமத்தைக் காட்டவேண்டும். யான் வசந்தகன் துணையாய் உதவ, இங்குநின்று சென்று எனது மதியின்வல்லமையால் வற்சராசனைச் சிறைமீட்டு இட்டுக்கொண்டு வருவேன். இதிற் சிறிதும் ஐயமில்லை. கார்காலத்துக் கொண்டலில் மின்னல் தோன்றுவது போல, இடர்ப்படுங்காலத்தில் மதிதோன்றப் பெறுபவனே பெருந்தீரன். மதிலைக் கல்லுதலும், விலங்கைமுறித்தலும், கண்ணுக்குத் தோன்ருமலிருத்தலும் முதலிய இக்காலத்துக்கு ஏற்ற உபாயங்களிற் பயின்றுள்ளேன், யான்' என்ருன்.

இவ்வாறு சொல்லி, யௌகந்தராயணன், ப்ரக்ருதிகளை ருமண்வானுடைய கையிற் காட்டிக்கொடுத்து, வசந்தகன் துணைனுய் வர உச்சயினிநகரை நோக்கிப் பயணமாகி, வசந்தகனுடன் விந்தமலையைச்சார்ந்த பெருங்கானகத்தின் வழியாகச் செல்லத் தொடங்கினுன். அம்மலைக் கானகத்தின் முன்றிசையிற்ருனே வேடர்கட்கெல்லாந் தலைவனுய் உதயணமன்னவனது மித்திரனுய், புளிந்தகனென்று பேர் பூண்ட வில்லியொருத்தனைக் கண்டான். கண்டதும், யௌகந்தராயணன் அவனேடு அளவளாவி, அவனில்லத்தில்

தங்கி அன்னுனைநோக்கி, உதயணமன்னவன் மீண்டு வருகையில் அவ்வரையனைப் பாதுகாக்குமாறு பெருஞ்சேனையுடன் கண்விழித்து அங்குத்தானே யிருக்குமாறு வேண்டினன். அந்தப் புளிந்தகனும் யௌகந்தராயணனது ஏவற்கு நேர்ந்தனன்.

பிறகு, யௌகந்தராயணன், வசந்தகன் உடன்வர உஞ்சைநகரின் மயானத்தைச் சார்ந்தனன். அம்மயானம், தசைநாறும் வாயினையுடையனவாகிக் காரிருள் போலக் கறுத்த பலவேதாளங்களாற் சூழப்பெற்றிருந்தது. அங்கு, யௌகந்தராயணனைக் கண்ட காட்சியில் அன்பு மிக்கூர்ந்தவனுகி, யோகேசுவரனென்று பெயர்பூண்ட அரக்கனொருவன் நண்பனுயினன். பின், அந்த அரக்கன் உபதேசித்த வண்ணம் அங்கொடியில்தானே தன்னுருவத்தை மாற்றிக்கொண்டு, யௌகந்தராயணன், வாமனனுய், முதியவனுய், பித்தனுய்க் கண்டவர் நகைக்குமாறு விகாரவடிவ முடையனுயினன். அன்றியும், இவனது நோயைக் கண்ட மாந்தர் இவனைச் சூழ்ந்து பெருந்துயரு மெய்தினர். இதனை,

"கொடிக்கோசம்பிக் கோமக னுகிய
வடித்தேர்த் தானை வத்தவன் றன்னை
வஞ்சஞ் செய்துழி வான்றளை விடீஇய
வுஞ்சையிற் றேன்றிய யூகி யந்தண
னுருவுக் கொவ்வா வுறுநோய் கண்டு
பரிவுறு மாக்களின்"

என்று சீத்தலைச்சாத்தனுரும் பாராட்டிக் கூறியிருக்கின்றனர். யௌகந்தராயணன், யோகேசுவரன் உபதேசித்த யோகமகிமையினுல்தானே வசந்தகனை நரம்புகள் நிரம்பிப் பருத்துத் தோன்றுந் தொந்தியையும் நேர்மையின்றி மாறுபட்டுக் கிடக்கும் முகத்தையு முடையவனுக்கினன். பிறகு

முதலில் வசந்தகனை அரண்மனைவாயிலிற் செல்லச் சொல்லி, யௌகந்தராயணன் தான் உச்சயினிநகரினுட் புக்கான். சிறுபிள்ளைகள் பலர் விநோதமாகத் தன்னைச் சூழ்ந்து கொண்டு கான நட்டமாடிக்கொண்டும் இசை பாடிக் கொண்டும், யௌகந்தராயணன், பலரும் வேடிக்கை காணுமாறு அரண்மனை சார்ந்தனன். அங்கு அவன், அந்தப்புரத்து மகளிர்க்கு விநோதத்தை யுண்டாக்கிக் கொண்டிருக்கையில், அவனைப்பற்றி வாசவதத்தை கேள்வியுற்றாள். அவள் விரைந்து தன்தோழியை யனுப்பி, யௌகந்தராயணனைத் தனது இருப்பிடத்திற்கு வரவழைத்தனள். இளமை யென்பது, விநோதங்களிற் கருத்தைச் செலுத்தவல்லதொன்றன்றோ!

பித்தனாகத் திரியும் யௌகந்தராயணன், அங்கு உதயணமன்னவன் சிறைப்பட்டிருப்பதைக் கண்கூடாகக் கண்டு தன் கண்களினின்று கலுழிநீரை நிரைநிரையாக வுகுத்து, அஞ்ஞான்று உதயணனுக்குச் சைகை காட்டினன். உதயணனும், யௌகந்தராயணன் தன் வடிவத்தைக் கரந்துவந்துள்ளா னென்று அவ்விங்கிதத்தினால் உணர்ந்து கொண்டனன். அப்பால், யௌகந்தராயணன், தன்யோக மகிமையால், வாசவதத்தைக்கும் அவளதுசேடியர்க்கும் கட்புலனாகாது தன்னைக் கரந்து, உதயணனொருவனது கண்ணுக்குமாத்திரம் புலனாக, அங்கிருந்தோர் யாவரும், 'இங்குத்தோன்றிய பித்தன் சடக்கென எவ்வாறு மறைந்திட்டான்?' எனப் பெருவியப் பெய்தினர்.

அங்குள்ளார் உரைப்பதையும், யௌகந்தராயணன் தனக்குக் கட்புலனாவதையும் உய்த்துணர்ந்த உதயண மன்னவன், யோகபலத்தால் அவன் பிறர் கட்புலனாகாது இருக்கின்றா னெனத் தேறி, அவ்யௌகந்தராயணனுடன் உரை

யாடவேண்டி, வாசவதத்தையை நோக்கி, 'வெண்டாமரையாளை வழிபடுதற்கு வேண்டிய பண்டங்களையெல்லாங் கொணர்க' என்று தந்திரமாகக் கட்டளையிட, அவளும் உதயணனது விருப்பத்தின்படியே வழிபாட்டுப் பொருளைக் கொணருமாறு பாங்கியருடன் சென்றனள்.

அவ்வெல்லையில், உதயணனருகிற் சார்ந்து, யௌகந்தராயணன், விலங்கைமுறித்தல் வாசவதத்தையை வயமாக்கிக் கொள்ளுதல் என்பவற்றிற்கேற்ற யோக வித்தைகளை ஏற்றவாறு உபதேசித்தனன். அன்றியும், 'வேந்தே! வசந்தகன் மாற்றுக்கோலத்துடனே இங்கு வந்து வாயிலில்நிற்கின்றான். அவனை அருகிலழைத்துக் கொள்க' என்று விண்ணப்பித்தான்; மேலும், 'எவ்வாறு ஒழுகினால் நுந்திறத்து வாசவதத்தை பெருங்காதலைப் பூண்பாளோ, அவ்வாறு நடந்துகொள்க' என்று உரைத்துப் பொட்டெனப் புறப்பட்டுப் போயினான்.

பிறகு, வாசவதத்தை, நாமகளின் வழிபாட்டிற்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் கொணர்ந்தனள். மன்னவன், 'கலைமகளை வழிபடுகையில், தக்ஷிணையைப் பெற்றுக் கொள்ளுதற்கு ஏற்ற இருபிறப்பாளனொருவன் வாயிலில் நிற்கின்றானாதலால், அவனை இங்கு அழைக்க' என்று உரைக்க, வாசவதத்தையும் அதற்கு இணங்கி, வாயிலில் விருபத்துடன் நிற்கும் வசந்தகனை உள்ளே வருமாறு அழைத்தனள்.

உள்ளேயழைப்பித்த அவ்வசந்தகன் வேந்தனைக் கண்டதும், உள்ளத்துயரத்தை யாற்றகில்லாது வாய்விட்டுப் புலம்பலானான். மன்னவன் உண்மையையுணர்ந்தோனாதலால், 'ஒருகால் இவன்உண்மையை வெளிப்படுவனோ?' என்று ஐயமுற்று, உண்மை வெளிப்பா

காதிருக்கக் கருதி, அவ்வந்தணனை நோக்கிப் பின்வருமாறு கூறலானன்:—'வேதியனே! நினக்கு நோயினல் வடிவம் மாறுபட்டிருப்பதை யான் ஒழித்துவிடுகின்றேன். புலம்பவேண்டா; நீ என்னருகில் தானே இனிது வாழ்க' என்று மொழிந்தனன். அன்றியும், மன்னவன், அவனது விருபமானமேனியைக் கண்ணுற்று, இகழ்ச்சியினல்நகைத்த வண்ணமாகவே இருந்தான். வசந்தகன் மன்னவன்மாற்றத்தைச் செவியுற்றதும், 'மன்னவ! நுமது பேரருளே' என்றுகூறி, மன்னவனது கருத்தை யுணர்ந்து, முகத்தில் முன்னிலும்பன்மடங்கு வைரூப்யந் தோன்றுமாறு நகைக்கலாயினன். விளையாடுகருவி போன்று வசந்தகன் வைரூப்யம் மிகுதியாகத் தோன்ற நகைப்பது கண்டு, இளையளாகிய வாசவதத்தை அகமகிழ்ந்து தானும் நகைத்த வண்ணமாக இருந்தனள்.

காலக்கழிவில் வாசவதத்தையின்கருத்துத் தன்தந்தை திறத்து ஊற்றமற, உதயணமன்னவனிடத்துக் காதல்மீக்கூர்ந்தது. அதனையுணர்ந்த யௌகந்தராயணன், ஒருகால் மற்றையோர் கட்புலனுகாது உதயணமன்னவன் சார்பில் வந்துநின்று, ஏகாந்தத்தில் வசந்தகனது முன்னிலையில், மன்னவனை நோக்கிப் பின்வருமாறு கூறலானன்:— 'வேந்தே! நீர் சண்டமகாசேனராசனது வஞ்சகத்தினற் கட்டுண்டிருக்கின்றீர். சண்டமகாசேனராசனே தன் புதல்வியை நுமக்கூந்து நும்மை மேம்படுத்திப் பிறகு சிறையினின்று விடுவிக்கக் கருதியிருக்கின்முன். அவன் எப்போது நம்மை விடுவிக்கின்முனென்று அன்னுன்கை பார்த்திருப்பது நுமதுதிறமைக்குத் தகவன்று; இழுக்கேயாம்; ஆகவே, நாம் இப்போது அவனது மங்கையை வலியக் கவர்ந்து செல்லுதல் நலம். இவ்வாறு செய்யின், செருக்

குக் கொண்ட அன்னானுக்கு மாறுசெய்ததாகவும் முடியும். அன்றியும், திறலைக்காட்டவில்லை யென்ற குறையும் நம்மை யணுகாது. சண்டமகாசேனராசன் பத்ரவதியென்று பெயர் பூண்ட பிடியானையொன்றைத் தன்மடந்தைக்குத் தந்திருக்கின்றான். தோன்றலே! நடாகிரியென்ற களிற்றைத் தவிர்த்து அவ்யானையைத் தொடர்ந்துசெல்லுதல் எந்த வேழத்திற்கும் இயலாது. நடாகிரியும் அப்பிடியைக் கண்ணுறின் மயங்கிப்பின்தொடர்ந்து செல்வதல்லது பொராது அப்பிடியானையின்பாகன், ஆஷாடகனென்பான்: அவனுக்குப் பெருஞ்செல்வமீந்து, நமது விருப்பத்தின்படி நடக்குமாறு புரிந்துள்ளேன். ஆகவே, நீர், நள்ளிரவில் பிறரெவர்க்கும்புலனாகாது வாசவதத்தையுடன் இங்குநின்றும்போந்து அப்பிடியானையை யூர்ந்து படைக்கலத்துணையோடு வெளிவந்திடுக. நீர், நமதுசெய்கையையுணர்ந்து கொள்ளாவண்ணம் இங்கிருக்கின்ற மஹாமாத்ரனென்னும் யானைக்குறிப்பறிந்த பாகர்தலைவனைக் கட்குடியில் மயங்கிக் கிடக்குமாறு செய்விக்கவேண்டும். இடைவழியில் யாதொரு தீங்கும் அணுகாது பாதுகாத்தற் பொருட்டு, யான் முன்னர்ச் சென்று புளிந்தகனென்ற நமது நண்பனருகில் தங்குகின்றேன்' என்று சொல்லி விடைபெற்றுச் சென்றான்.

உதயணனும், தான் செயற்பாலவற்றை இன்னவையென மனத்தி லுறுதிகொண்டு, பிறகு தன்னருகிலணைந்த வாசவதத்தையுடன் பற்பல பேச்சுக்களைப் பேசியிருந்து, இறுதியில் அன்னாளைத் தன்கருத்திற்கிணங்கியவளென்று பலபடி சோதித்து அறுதியிட்டு, அவளுழைத் தான் செய்யக் கருதியிருப்பதை மெல்லமெல்லத்தெரிவித்தான். வாசவதத்தையும், உதயணமன்னவனது கருத்திற்கு ஒருப்பட்டு உஞ்சைநகரத்தை நீத்துப் பயணப்பட உறுதிகொண்டு, ஆஷாடகனென்ற பாகனைக் கூவி அன்னானை எப்பொழுது

போகவேண்டுமெனினும் பயணமாகுமாறு வேழங்கொண்டு காத்திருக்கும்படி கட்டளையிட்டாள்; மகாமாத்ரனைக் கடவுட்பூசையென்று பேர்வைத்துக் களிப்பைத் தருகின்ற கள்ளைப் பருகுவித்தாள்.

பிறகு இரவுவந்ததும், ஆஷாடகன், பத்ரவதிக்குக் கல்லணையிட்டுப் பயணத்துக்கு ஏற்குமாறு செய்து காத்திருந்தான். அப்போது, பத்ரவதி, பாகனதுகுறிப்பை யுணர்ந்து தான் நூற்றெண்பது யோசனை தூரஞ் செல்லப் போவதாகப் பிளிறிற்று. வேழக்குரலை யுணர்ந்திருந்தும், மஹாமாத்ரன், மதக்களிப்பில்மூழ்கிக்கிடந்ததனால் தனக்கு வேறொன்றுஞ் செய்ய வியலாததுபற்றி, மற்றைப்பாகர்களை நோக்கித் தழுதழுத்தகுரலுடன் அப்பிடியானை கூறியதைக் கூறினன்: ஆயினும், அப்பாகர், அவன் கூறியதை இன்னதென்று ஓராது வாளா இருந்திட்டனர்.

அப்போது, உதயணன், கோஷவதியென்ற தன் வீணையை மீட்டியவண்ணம் யௌகந்தராயண னுபதேசித்த யோகபலத்தால் தன்விலங்கை முறித்து வீழ்த்தி, வசந்தகனும் உடன்வர, படைக்கலங்களோடு பத்ரவதியென்ற கரேணுவின் மீது ஏறினன். வாசவதத்தையும் ஆயவெள்ளத்தை நீத்து அம்மறைபொருளை யுணர்ந்த காஞ்சநமாலையென்னுந் தனது உயிர்ப்பாங்கியுடன், அப்பிடியானையின்மீது ஏறினள். வற்சராசன், பாகன் ஐந்தாமவனாக, உஞ்சைநகரத்தை நீத்துப் பயணமாயினன். புறப்படுகையில், அரண்மனைவாயிலிற் பாதுகாவலராக நின்ற வீரபாகு தாலபடன் என்ற வீரரிருவரும், வழிமறித்து எதிர்க்க, உதயணன் தனதுதோள்வலியால் அவர்களை மாய்த்து வீழ்த்த, அஞ்ஞான்று ஆஷாடகன் மாவெட்டியால் தூண்டி வேழத்தை விரைந்து செலுத்திச் சென்றான்.

நள்ளிரவில் அரண்மனைக் காவலரான வீரர் மாய்ந்து கிடப்பதைக் கண்ணுற்ற நகர்க்காவலர், கலங்கி விரைந்து சென்று மன்னவன்மாட்டு அறிவித்தனர். சண்டமகா சேனன், ஆராய்ந்து, உதயணமன்னவன் வாசவதத்தை யைக் கவர்ந்துகொண்டு ஓடுகின்ற செய்தியை யறிந்தான். அப்போது சண்டமகாசேனனது புதல்வனான பாலகனே, நகர் முழுதும் அல்லோலகல்லோலமாகிவிட்டது கண்டு பர பரப்புடன் நடாகிரியின்மீது இவர்ந்துசென்று, உதயண மன்னவனைத் துரத்திக்கொண்டோடினன். தன்னைப் பாலக குமரன் தொடர்ந்துவருவதைக் கண்ணுற்ற வற்சராசன், தன் கணைகளை மாரிபோலத் தூவினன்; அக்காலையில், பத்ரவதியைக் கண்டதும், நடாகிரி பொரத் திறனற்றுக் கிடந்தது. இவ்வாறு நிகழ்கையில், தாதையினுள்ளத்தை யுணர்ந்த கோபாலகன் விரைந்துசென்று இன்மொழி கூறி, பாலகனைப் பொருவதினின்று மீட்டுத் தன்னூர்க்குத் திரும் பினன்.

பிறகு, வற்சராசன், சிறிதும் மனக்கலக்க மின்றி வழிச் சென்றனன்; பொழுதும் அப்போழ்து மெல்லப் புலர்ந்தது. விந்தமலைக்கானகம் வரையில் நாற்றெண் பதுயோசனைதூரம் வழி நடந்ததனால், நண்பகல் வந்ததும் அப்பிடியானை, இளைப்புற்று நீர்வேட்கை கொண்டது: வாசவதத்தையுடன் வற்சராசன் அங்குத் தங்குகையில், ஆண்டு நீர்நிலையில் பத்ரவதி புனலைப் பருகி, அப் புனலின் குற்றத்தாற்போல உயிர்துறந்தது. அதுகண்ட உதயணனும் வாசவதத்தையும் பெருந்துயர் கொண்டனர். அஞ்ஞான்று அவர்களைத் தேற்றுமாறு வானத்தில் ஓர் விஞ் சைமடந்தை தோன்றி, 'அரசனே! நான் மாயாவதியென் னும் பெயர் கொண்ட விச்சாதரமடந்தை. இத்துணைநாள்

சாபத்தினற் பிடியானையாக விருந்தேன். உதயண! யான், இப்போழ்து நமக்கு உதவி புரிந்தேன்; இனி நமக்குப் பிறக்கும் புதல்வனுக்கும் உதவிசெய்யப் புகுவேன்' என்ருள்.

அப்பால், உதயணமன்னவன், விந்தமலைச்சாரலில் வாழும் புளிந்தகனென்னும் நண்பனுக்குத் தன்வரவைத் தெரிவித்தற்காக முன்னர் வசந்தகனை யேவி யனுப்பி, தானும் ஆங்குச் செல்ல விரும்பித் தன்காதலியுடன் பாதசாரியாய் மெல்லநடக்கையில், கள்வர் ஆங்கு உதயணமன்னவனை வளைந்துகொண்டனர். வற்சராசன், தன்வில்லே துணையாக, வாசவதத்தை நோக்கியவண்ணம் நிற்கையில், தன்னையெதிர்த்துவந்த கள்வர் நூற்றைவரையும் மாய்த்துக்கொன்றனன். அந்நொடியில், நண்பனுகிய புளிந்தகன், வசந்தகன் வழிகாட்டிக்கொண்டுவர ஆங்கு வந்துசேர்ந்தனன்.

அவ்வேடர்தலைவன், எஞ்சிய கள்வர்களையெல்லாம் உயிர் போக்கி, உதயணனை வணங்கித் தன்பாளையத்திற்கு இட்டுக்கொண்டு செல்ல, அங்கு உதயணன், தன்காதலியுடன் அவ்விரவைக் கழித்தனன். அங்கு வந்திருந்த யௌகந்தராயணன் ஒற்றர்மூலமாகச் செய்தி தெரிவித்ததனுல், சேனுதிபதியாகிய ருமண்வான்,மறுநாள் வைகறைப்போதில் அணிவகுப்புக்களோடும் அங்குச் சார்ந்தனன். விந்தமலைக் கானக முழுதும் எங்கும் அப்போது படைகள் நிரம்பியிருந்தன. உதயணமன்னவன், கடகத்திற் புகுந்து, உஞ்சைநகரத்தைக் குறித்த செய்தியை யுணர்தற்பொருட்டு அக்கானகத்தில்தானே தங்கியிருந்தனன்.

# ஆறுவது அத்தியாயம்:

## உதயணன் வாசவதத்தையை மணத்தல்.

வற்சராசன் அங்குத் தங்கி நிற்கையில், யௌகந்த ராயணனது நண்பனுல் உஞ்சைநகரில் நிகழுஞ் செய்தியை யுணர்ந்து வருமாறு மன்னவனுல் ஏவப்பெற்று அவ்வாறே தெரிந்துவந்த வணிகனொருவன், மன்னவனை யணுகி, 'வேந்தே! சண்டமகாசேனராசர் மருகப்பிள்ளையான நும்மிடத்து மிக்கஅன்புபூண்டு ஒருமனிசனை விடுத்திருக்கின்றார்: அவனுடன் யான் இங்குவந்தேன். அவன் பின்னே தங்கியிருக்கின்றான். நும்மிடத்து இச்செய்தியை விண்ணப்பித்தற்காகவே, யான் அன்னனுக்குத் தெரியாது முன்னம் வந்திட்டேன்' என்றான்.

இவ்வுரையைச் செவியேற்றதும், உதயணன், அக மகிழ்ந்து வாசவதத்தையின்பால் எல்லாவற்றையும் கூறினான். சுற்றத்தைநீத்து உதயணனே பற்றுக்கோடாக உடன் வந்த வாசவதத்தை கடிமணத்தை விரைவாக நிறைவேற்றவேணுமென்னும் விருப்பம் மனத்திலொருபாலோடவும், மற்றொருபால் நாணம்மீக்கூர்தலால் வாய்திறவாது வாளாவிருந்தனள். உயர்குலமகளிர்க்கு நாணமென்பது அணிகலமன்றோ!

பின்னர்ச் சண்டமகாசேனராசனது ஒற்றன், உதயணனருகே வந்து, அன்னனை நோக்கி, 'சண்டமகாசேனராசா நுமக்கு இவ்வாறு தெரிவிக்கின்றார்: நுமக்கு எங்களிடத்து அன்பு உள்ளதோ இன்றோ என்று ஐயந்தோற்றியதனுல், யாம் நுமக்கு வாசவதத்தையை முன்னமே கடிமணஞ் செய்வியாமல் தாமதித்தோம்: நுமது செய்கையால் எம்மீது நீர் பேரன்பு கொண்டிருக்கின்றீரென்பது, இப்

பொழுது தெற்றென விளங்குகின்றது. மன்னரே! நீர் சற்றுப் பொறுத்திரும். எனது புதல்வனாகிய கோபாலகன் தனது தங்கை வாசவதத்தையின் கடிமணத்தை நான் முறைப்படி செய்விப்பான்: ஆதலால்; நீர் அதுவரையில் கருணைசெய்து வாசவதத்தையின் கடிமணத்தைக் குறித்துக் காத்திருக்கவேண்டும். ஈதொன்றுமே எமது வேண்டுகோள்' என்று சண்டமகாசேனராசனது கட்டளையைத் தெரிவித்தான். இவ்வாறு உதயணனுக்குச் செய்தி சொல்லியபிறகு, வந்த ஒற்றன் வாசவதத்தைக்கும் தந்தை சொல்லிய செய்தியை மொழிந்தனன்.

அப்போது, வற்சராசன், ஆனந்தக்கடலில் ஆழ்ந்துகிடக்கும் வாசவதத்தையுடன், கௌசாம்பிநகரைச் சேர வேண்டுமென்று மனங்கொண்டு, கோபாலகன் வரவையெதிர்பார்த்திருக்குமாறு தனது மித்திரன் புளிந்தகனையும் மாமன்வீட்டிலிருந்துவந்த மனிசனையும் அவ்விந்தமலைச் சாரலி லிருத்தி, மறுநாள் வைகறையில், வேழப்படைகள் திரள்திரளாகத் தன்னைச் சூழவும், படைகளெழுப்பிய தூளிகள் வானமெங்கும் பரவவும், 'தனக்குமாற்றானாக எவனேனும் தோன்றி வருகின்றானோ?' என்று தேவேந்திரனும் மனத்தில் துணுக்குறுமாறு பெருஞ்சம்பிரமத்துடன் கௌசாம்பிநகரைநோக்கிச் செல்லலாயினன்.

இரண்டு மூன்று நாள்களில் வழிமுழுதுங் கடந்து, உதயணமன்னவன், மனைவியுடனே நகரமாந்தர் கண்டு களிக்குமாறு பட்டணத்திற் புகுந்தான்.

"கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—சீர்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிர்."

உதயணன் நகரிற் புகுகையில், அவனைக் காணுமாறு உபரிகையின்மீது ஏறிய மங்கையரது முகங்கள் வானகங்கையில்தோன்றிய செந்தாமரையோவென்று ஐயுறுமாறு விளங்கின. பலநாள் பிரிந்திருந்த கணவன் மீண்டு வரப்பெற்ற பதிவிரதைபோல, அந்நகரி, பலவகையணிகளோடு விளங்கிற்று: அப்போது, உதயணமன்னவன், தாமரைமலரிற் றோன்றிய திருவோ வெனக் கண்டவர்கண்கவரும்வனப்பு வாய்ந்த வாசவதத்தையுடன் தன் னரண்மனையிற் புக்கான். புகுகையில், மன்னவனின்மையால் ஒலியவிந்து கிடந்த அவ்வரண்மனை, அவ்வுதயணமன்னவனைத் தரிசிக்குமாறு திரண்டுவந்த வேந்தர்குழாம் ஒருபாற் சூழ, மாகதர் இன்னிசைபாட, துயிலுணர்ந்ததுபோல விளங்கிற்று

அப்பால், கோபாலகன், புளிந்தகனோடும் ஒற்றனோடும் கௌசாம்பிநகரில் உதயணமன்னவனது அரண்மனையை யடைய, உதயணமன்னவன், இருக்கையெழுந்து எதிர்கொண்டு உபசரித்து அன்னனுக்கு முகமன் கூறினன். வாசவதத்தை தன் னுடன்பிறந்தவன் வரக் கண்டு, ஒருபால் நாணம் மேம்பட மற்றொருபால் பெருமகிழ்ச்சி யடைந்தனள். பிறகு, கோபாலகன், நன்முகூர்த்தத்தில் வாசவதத்தைக்கும் உதயணமன்னவனுக்கும் மணச்சடங்கை விதிமுறைவழுவாது நிறைவேற்றுவித்தான். அம்மணத்தில், மன்னவர்களீந்த உபாயநங்களினாலும், கோபாலகன் தந்த அரதனம் முதலிய பொருள்களினாலும் உதயணமன்னவனது கருவூலம் நிரம்பவே, அம்மன்னவன் குபேரன் போன்று விளங்கினன். திருமணச்சடங்கு முற்றியதும், வதூவரர்கள், குடிகளின் கண்ணேக்கத்திற்கு இன்சாயலுடன் தோன்றினர்.

உதயணமன்னவன், தனதுமணம் நிறைவேறியதும் கோபாலகபுளிந்தகர்களை ஏற்றவாறு பட்டம் முதலியன ஈந்து சம்மானித்தனன்; கடிமணத்திற்கு வந்திருந்த மன்னவர்களையும் நகரமாந்தரையும் சம்மானித்தற் பொருட்டு, யௌகந்தராயணனையும் ருமண்வானையும் ஏவினன். அப்போது யௌகந்தராயணன் ருமண்வானைநோக்கி, 'மன்னவன் நம்மைச் செயற்கரியதொழிலில் ஏவியுள்ளான். உலகத்தோர் கருத்தை முற்றவுமுணர்ந்து ஒருத்தரது கருத்துங் கோடாது நடத்தல் அரியதொன் றன்றோ! சிறுவனேயாயினும் நமதுசெயலில் அகமகிழானாயின், சினங்கொள்வானே!' என மொழிந்து ருமண்வானுடன் மிக்க சிரத்தையோடு யாவரையும் சம்மானிக்கலாயினன். கடிமணத்தின் பொருட்டு வந்தவரில் ஒவ்வொருத்தரும் 'இவர் நம்மைத் தான் நன்கு உபசரித்தனர்' என்று கருதுமாறு எல்லோரிடத்தும் அவ்விருவரும் நடந்துகொண்டனர்.

பின்னர், உதயணமன்னவன், யௌகந்தராயணன் ருமண்வான் வசந்தகன் என்ற மூவர்க்கும் ஆடையாபரணங்களையும் கிராமங்களையும் பல்வகைச் சிறப்புக்களையும் முழுக்கருத்துடன் மிகுதியாகக் கொடுத்தனன். யாவரும் மனம் நிறைவுற்றனர். வந்த மன்னவரும் விடைபெற்றுத் தத்தமது இருப்பிடத்துக்கு ஏகினர்.

## ஏழாவது அத்தியாயம்:

## மந்திரிமாரின் மந்தணம்.

முற்கூறியவாறு வாசவதத்தையைக் கடிமணம் புரிந்ததும், வற்சராசன், உழையரிடத்து நிலப்பொறை முழுவதையும் வைத்திட்டு, தான் யாதொருகவலையுமின்றி இன்பமாகக் காலங்கழிக்கலாயினன். அப்போது மந்திரியருள்

முதல்வனுன யௌகந்தராயணனும் சேனுபதி ருமண்வானுமே அல்லும்பகலும் கருத்தோடு வற்சநாட்டில் அரசு செலுத்தலாயினர்.

ஒருநாள், யௌகந்தராயணன், தனது கருத்திற் பெருங் கவலைதோன்றியதனல், ருமண்வானைத் தன்னகத்திற்கு நள்ளிருளி லிட்டுவந்து, தன் கவலையைத் தெரிவிக்கலானுன்.

**யௌகந்தராயணன்:**—'இவ்வரசன் பாண்டவர்குலத்தில் தோன்றியவன்: ஒருகால் பார்முழுதும் இவன் மரபினர்வயத்திலிருந்தது; அன்றியும், அத்தினபுரம், இவர்கட்கு இராசதானியாக அமைந்திருந்தது. இம்மன்னவன் அவற்றையெல்லா மிழந்தும், அவற்றைத் தன்னுற்றலால் வென்று தன்னடிப்படுத்தவேணுமென்ற கருத்துச் சிறிதுமின்றி வாளா கிடக்கின்ருன். இப்போழ்து இவனது அரசோ, பூமண்டலத்தில் ஒருகோணத்தில் ஏகதேசந்தான். இவ்வாறிருந்தும், இம்மன்னவன், வேட்டையாடுவதிலும் கட்குடிப்பதிலும் கேளிக்கைக்கூத்தைக்காண்டல் முதலியவற்றிலுமே விநோதிக்கின்ருன். தன்னிலை தாழ்ந்திருத்தலைக்குறித்து இவன் சிறிதுங் கவலைகொள்வதில்லை. ராஜாங்கத்தைக் குறித்த சிந்தை முழுவதும் நம்மைப் பொறுத்திருக்கின்றது. ஆதலால், நமது நுண்ணுணர்விறுற்றலால், இவன் மரபினராண்ட குவலய முழுதும் இவனடிப்பட்டதாம்படிசெய்ய நாமே முயலவேண்டும். இவ்வாறு புரிந்தால் தான், நாம், தலைவன்மீதுவைத்துள்ள பக்தியைக் காட்டினவ ராவோம். நமது அமைச்சும் பயன் பெற்றதாகும்.'

**ருமண்வான்:**—'நாம் பூமண்டல முழுவதையும் நமது அறிவாற்றலால் வெல்வது எவ்வாறு?'

**யௌகந்தராயணன்:**—'மருத்துவன் தன்னுணர்வின் வல்லமையா லாராய்ந்து ஔடதமீந்து பிணியைப் போக்கு

தல்போல, நம்மாலியன்றவரையிலும் ஆராய்ந்து அரசனுக்கு எவ்வாற்றானுந் தீங்குநேராதவாறு பாதுகாப்புச் செய்து, பகைவரை நலிந்து மேதினி முழுவதையும் வென்று இவனுக்குத் தருமாறு முயல்வோமாக. நம்மரசனுக்குப் பகைஞனாகப் பின்புறத்தி விருப்பவன் மகததேசத்து மன்னனாகிய ப்ரத்யோதன். அவன், நாம் முன்புறத்திற் போர்செய்யச் செல்லுகையில் நம்மீது சினந்து பின்புறத்திற் போராட வருவான். ஆதலால், நாம் முதலில் அவனை நமது கைக்குள் அகப்படுத்துக்கொள்ளவேண்டும். அதைப்பற்றி ஒருபாயந் தோன்றுகின்றது; கேளும். அவ்வரையனுக்குப் பத்மாவதியென்று பேர்பூண்ட பெண்மணியொருத்தி இருக்கின்றாள். நாம் அக்கன்னிகையை உதயணனுக்கு உரியவ ளாக்குமாறு வேண்டுவோம். அதற்கு முன்னம் நாம் செய்யவேண்டிய செய்கை ஒன்று உளது; அஃதாவது—நமது மதியின்வல்லமையால் வாசவதத்தையைக் கரந்துவைத்து அவள் வாழ்ந்த இடத்தில் தீயிட்டு, எம்மருங்கும் 'தேவிவாசவதத்தை கனலி லெரிந்திட்டாள்' என்ற வதந்தியை யெழுப்பவேண்டு மென்பது. இவ்வாறு நாம் செய்யாவிடின், ப்ரத்யோதமன்னவன் பத்மாவதியை உதயணமன்னவனுக்கு வாழ்க்கைப்படுத்தான், நான் முன்னொருகால் உதயணமன்னவனுக்குப் பத்மாவதியை வாழ்க்கைப்படுத்துமாறு அம்மகதவேந்தனிடத்து மகட்பேசியபோது; அன்னான், 'உதயணமன்னவனுக்கு வாசவதத்தையினிடத்துக் காதல் கடலின் மிகப்பெரிது: ஆகையால், யான் எனது கன்னிகையைத் தாரேன்' என்று மறுத்துரைத்துள்ளான்; மேலும், உதயணமன்னவனும், தேவி வாசவதத்தை யிருக்கும்போது வேறொருத்தியைப் பாணிக்கிரகணம் புரியான். தேவி கனலி லெரிந்

திட்டா ளென்ற வதந்தி பரவுமாயின், நமது மனோரதம் இனிது நிறைவுறும். பத்மாவதி உதயணமன்னவனுக்கு வாழ்க்கைத்துணைவியாக வாய்ப்பா ளாயின், பின்னர், அந்தப்ரத்யோதமன்னவனும் உற்ற ஞகி உதயணமன்னவன்மீது சினவான்; துணையும் புரிவான். பிறகு நாம் குண திசை முதல் முறையே சென்று வென்றிடலாம். இவ்வாறு வற்சராசனுக்கு நானிலமுற்றும் நாம் வென்று தருவோமாக. நாம் இங்ஙனம் முயல்வோ மாயின், இந்தத் தராபதி, பூமண்டலமுழுவதையும் பெறுவ னென்பது தேற்றம். முன்னர் ஆகாயவாணியும் உதயணன் பூமண்டல முழுவதையும் பெறுவா னென்று உரைத்திருப்பது தவருதன்ருே!'

இன்னணம் மந்திரிதலைவன் மொழிந்ததைச் செவியேற்று ஸாஹஸச்செயலாகு மென்று கருதிய ருமண்வான் பின்வருமாறு கூறலானன்:—

ருமண்வான்:—'பத்மாவதியை மணம் புணர்த்தற் பொருட்டு நாம் துணிந்து செய்கின்ற செயல் ஒருகால் குற்றமாய் முடியுமேயாயின் என்செய்வ தென்று அஞ்சுகின்றேன். நமது செய்கை முற்றுதாயின், நாம் நகைப்பிற்கிடனுவதன்றி மன்னவன்முதலியோரதுசினத்திற்கும் பாத்திரமாவோமே! அன்றியும், வாசவதத்தையைப் பிரித்து வைத்தலில் மன்னவனுக்கு ஏதேனும் தீங்கு நேருமோ? என்றுஞ் சங்கிக்கின்றேன்.'

யௌகந்தராயணன்:—நாம் இப்போது துணிந்தே தொழில்செய்யவேண்டும். எந்தப்புருஷனும் துணிந்து ஒரு தொழிலைச்செய்யாது திகைப்புக்கொண்டிருப்பின், நன்மையைப் பெறுதல் அரிதேயாகும். "செயற்கரியசெய்வார் பெரியர் சிறியர், செயற் கரிய செய்கலாதார்." யாதொரு முயற்சி

யும் கைக்கொள்ளாது நாம் வாளாவிருந்திட்டால் வேட்டை முதலிய வ்யஸநங்களிற் கருத்தூன்றிய நம்வேந்தனுக்கு, உள்ளபொருளும் ஒழிந்திடுமென்பது தேற்றம். நாம் மந்திரியரென்று பெய ரெடுத்தும், நம்மந்தணம் பயனுறுது மாறுக முடியுமே யாயின், அப்போது தலைவனது அவமதிப்பிற்குப் பாத்திரராகவேண்டுவது தவிர வேறு நாம் செயற்பாலது யாது? இது நிற்க: அரசரில் தம்வயத்தசித்திய ரென்றும், அமைச்சர்வயத்தசித்திய ரென்றும் இருதிறத்தா ருளர். அவர்களுள், தன்வயத்தசித்தியனுனவேந்தனுக்குத் தன்னுணர்வே உதவுவதன்றி, அமைச்சர்செயலால் யாதொருபயனு முண்டாகாது. அமைச்சர்வயத்தசித்தியனை மன்னவனுக்கோ அமைச்சரது நுண்ணுணர்வே பயனைக் கூட்டுவிக்கும். அத்தகையமன்னர்மாட்டுள்ள அமைச்சர் மேன்மேலும் முயலுதலில் உற்சாகமின்றி வறிதேயிருப்பராயின், அப்பொழுது அம்மன்னவனது திருவுக்கு எள்ளும் புனலும் விடவேண்டுவதுதான். இனி, வாசவதத்தையின் தந்தையைக்குறித்து ஒருகால் நீர் சிந்தை கொள்ளக்கூடும்; அதுவேண்டா: ஏனெனில், சண்டமகாசேனராசனும் அவரது புதல்வனும் எல்லோரும் என்பேச்சை மீறி ஒருபோதும் நடவார்; நான் மொழிந்தவாறே நடப்பர்' என்று தீரமாகக் கூறினன்.

ருமண்வான்:—'பகுத்தறிவு உள்ளவரும், தமது காதற்குப் பதிவிடமான அரிவையரைப் பிரியின் வருந்துவர்; அவ்வாறிருக்க, உதயணமன்னவனைப்பற்றி நாம் என்பேசுவது? வாசவதத்தையைப் பிரிதலால், வற்சராசனுக்கு என்ன தீங்கு நேருமோ? என்று பெரிதும் ஐயுறுகின்றேன்.'

யௌகந்தராயணன்:—'மன்னவர்கள் காரியத்தினிமித்தம் துன்பத்தைப் பொறுப்பது இயற்கையே; ராவணவதத்

தின்பொருட்டுத் தேவர்கள் சீதாபிராட்டியாரைப் பிரித்து வைக்க, அப்போது இராமபிரான் அப்பிரிவுத்துயரைப் பொறுத்திலரோ?'

**ருமண்வான்:**—'இராமன் முதலியோர் கடவுளர்; அவர்களது மனம் எதையும் பொறுக்கவல்லது; மானுடர்மனமோ சிறுதுன்பத்தையும் பொறுக்ககில்லாததொன்றன்றோ?'

**யௌகந்தராயணன்:**—'இவற்றையெல்லாம்பற்றி முன்னமே ஆராய்ந்துள்ளேன். அரசரது தொழில்கள் இவ்வாறுதான் முற்றுறும். இதைப்பற்றித் திருஷ்டாந்தமாகப் பழைய வரலாறு ஒன்று கூறுகின்றேன். முன்பு உஞ்சைநகரத்திற் புண்ணியசேநனென்று ஒரு மன்னவன் இருந்தான். அவனைப் பேராற்றலுடைய வேறொருவேந்தன் எதிரிட்டனன். அப்போது புண்ணியசேனராசனது மந்திரிமார், பகைஞனை வெல்வது அரிதாதலையுணர்ந்து, அரசன் இறந்திட்டானென்று ஓர் பொய்யாய வதந்தியை எம்மருங்கும் பரவச் செய்து புண்ணியசேனமன்னவனை எவரு முணராதவாறு கரந்துவைத்து வேறோருயிர்நீத்தவுடலை அரச னென்று சொல்லி, ராஜமர்யாதையுடன் தஹநஸம்ஸ்காரமுஞ் செய்தனர். பின்னர் 'எங்கள் மன்னவர் மாய்ந்திட்டனராதலால், வேந்தனையிழந்த எமக்கு நீரே வேந்தனுக' என்று ஒரொற்றன் மூலமாகத் தமதுவேண்டுகோளை மாற்றானுக்குத் தெரிவித்தனர். பகைஞனும் அகமகிழ்ந்து அவர்களது வேண்டுகோட்கு இசைந்து உச்சயினிநகரத்தை யாளத் தொடங்கினன். அச்சமயத்தில் பிரகிருதிகள் யாவரும் படைகளுடன் சூழ்ந்துகொண்டு அம்மன்னவனைச் சேனையோடும் தொலைத்துவிட்டுத் தமது பழைய வேந்தன் புண்ணியசேநனையே மீண்டும் அரசு புரியுமாறு செய்தனர். எப்போதும்

அரசரது தொழில் இவ்வாறு ஸாஹஸமாகத்தான் செயற்பாலது; ஆதலால், நாம் இப்போது தேவி கனலி லெரிந்திட்டாளென்று கைதவமாகச்சொல்லித் துணிந்து தொழில் புரிவோமாக. புரியின், தவறுது 'கடவுள் நமக்குத் துணை புரிவர்' என்று மிக்க துணிவுடன் சொன்னன்.

ருமண்வான்:—'இவ்வாறு நீர் ஆராய்ந்து அவதியிட்டுள்ளீரெனின், நமது இராணியின் உடன்பிறப்பாகிய கோபாலகனை ஒரு வியாசத்தால் ஆத்ரத்தோடு இங்கு வரவழைத்து அவனுடன் மற்றும் ஒருமுறை யாராய்ந்து பின்னர்த் தொழிலி லிறங்குக.'

யௌகந்தராயணன் தான் அவ்வாறே புரிவதாக உறுதியுடன் சொல்ல, ருமண்வானும் அன்னுனிடத்துள்ள விசுவாசத்தால், அவ்யௌகந்தராயணன் செய்யவேண்டுமென்று கூறியதை அவ்வாறே அங்கீகரித்தனன்.

மறுநாள், அம்மந்திரியரிருவரும் தூதனொருவனைக் கூவிக் கோபாலகனைத் தாம் காண விரும்புவதாகக் கூறுமாறு சொல்லி உச்சயினிநகர்க்கு விடுத்தனர். ஒற்றன் சென்று உஞ்சைநகரைச் சார்ந்து செய்தி தெரிவிக்கவே, கோபாலகனும் காலக்கழிவின்றி உடனே பயணமாகிக் கௌசாம்பிநகரைச் சார்ந்தனன். சேர்ந்ததும், யௌகந்தராயணன் மந்தணைத்திற்கு உரிய இல்லத்திற்கு அவனை யழைத்துச்சென்று ருமண்வானுடன் சொல்லிய எல்லாவற்றையும் தெரிவித்தான். கோபாலகன் யௌகந்தராயணனுடைய ஆலோசனை தன் தங்கைக்கு முதலில் வருத்தத்தை விளைப்பதாகவிருந்தாலும், அரசனதுநன்மைக்கு நிமித்தமாகவிருத்தலால் உடன்பட்டான். மேலும், பெரியோரது பேச்சுக்குக் குறுக்குச் சொல்லுதல் அடாததொன்றன்றே!

ருமண்வான்:—(அப்போது மீண்டும் யௌகந்தராயணனை நோக்கி), 'சிறந்த உபாயம் நிறைவேறற்கு உரிய கருவிகள் யாவும் நிறைவுற்றிருப்பினும், முதன்மையான உறுப்பிற்குக் குறைவு வாராதவாறு பாதுகாத்தல் இன்றியமையாத் தொழிலன்றோ! ஆதலால் நீவிர் செய்வதாக ஆராய்ந்து கூறியன யாவும் நன்றேயாயினும், தனது தேவி வாசவதத்தை கனலிலெரியுண்டு மாய்ந்தனளென்ற செய்தியைச் செவியேற்கும் உதயணமன்னவன் தன்னுயிரை மாய்த்துக் கொள்ளாதபடி பாதுகாத்தல் எவ்வாறு இயலும்? ஈதொன்றைக் குறித்துமாத்திரம் மீண்டும் ஆராயவேண்டும்' என்றான்.

செய்தற்குஉரிய தொழில் யாவும் நன்காராய்ந்த யௌகந்தராயணன் மீண்டு கூறலானான் :—

யௌகந்தராயணன்:—'உயிரினும் நெடிதுறச் சிறந்து தோன்றுந் தனதுதேவி வாசவதத்தை உயிர்துறந்தனளென்ற காரணத்தால் உதயணமன்னவனது உயிருக்கே ஒருகால் தீங்குநேருமோவென்று நீர் ஐயுறவேண்டா; ஏனெனில், கோபாலகன் தன் தங்கை வாசவதத்தைதிறத்துத் தன்னுயிரினும் மிக்க பட்சம் வைத்திருந்தும், அவள் கனலிலெரிந்திறந்தாளென்றறிந்தும் அவன் மிக்க துயரமுறுதது கண்டு உதயணமன்னவன் 'நமது மனைவி ஒருகால் உய்ந்திருக்கக்கூடும்' என்று ஓரெண்ணமுங் கொள்வான். மேலும், பத்மாவதியை உடனே விவாகஞ்செய்துகொள்வதால், வாசவதத்தையின் பிரிவுத்துயரை மறந்தும் விடுவான்' என்றான்.

இவ்வாறு அவ்விரவில் மூவரும் ஆய்ந்து, உதயணமன்னவனையும் தேவியையும் இட்டுக்கொண்டு லாவாணகமென்ற ஊர்க்குப் போவோம்; அது மகதநாட்டிற்கு அண்

மையிலுள்ள ஊராவதன்றி, வேட்டைக்கு ஏற்றஇடமுமாத லால், நமது வேந்தனும் அங்கு விநோதமாக வெளியிற்செல் வான். அவ்வாறு மன்னவன் வெளிச்சென்றஅற்றம்நோக்கி அரண்மனையில் தீயிட்டு நாம் உன்னியதை நிறைவேற்ற வேண்டும். தேவிவாசவதத்தையைப் பத்மாவதியி னரண் மனையில் தந்திரமாக மெல்ல வைப்போம். பிரிவுக்காலத்தில் அவள்தான் இவளது நல்லொழுக்கத்திற்கு ஏற்ற சான்று வள். இங்ஙனம் புரியின், நாம் கருதியது முழுதுங் கை கூடும். இம்மந்தணம் வேற்றுச்செவிக்கு எட்டாது நமக் குள்ளாக இருக்கவேண்டும்' என்று பின்னர்ச் செய்ய வேண்டுவதைச் சுட்டி இங்ஙனம் ஓர்முடிபுக்கு வந்தனர்.

யௌகந்தராயணன் முதலிய மூவரும் மறுநாள் பொழுது புலர்ந்ததும் தமது செய்கடனைப் புரிந்து அரண் மனை சார்ந்தனர். அவர்களில், ருமண்வான், மன்னவனை நோக்கி, 'வேந்தே! இப்பொழுது லாவாணகமென்ற ஊர்க் குச் செல்வது, நமக்கு நன்மைதரும்; அது, மிகவும் இனிய வூர். அங்குவேட்டையாடுதற்குஏற்றனவாய்ப் பரந்த இடங் களுமுண்டு. அங்குப் புல்வாயினங்களும் ஆநிரைகளும் மிக்குள்ளன; அவற்றை மகதநாட்டரசன் நலிகின்றானாத லா , அவைகளைப் பாதுகாத்தற்காகவும் நாம் அங்குச் செல்லவேண்டும்' என்றான்.

அதனைச் செவியேற்றதும், உதயணமன்னவன் விளை யாட்டில் மிக்கவேட்கை யுள்ளவனாதலின், வாசவதத்தை யோடும் லாவாணகமென்னுமூர்க்குச் செல்லுமாறு கருத் தில் உறுதிகொள்ள, அதற்கு உரிய இலக்கினத்தைக் கணி கள் மொழிந்தனர்.

அவ்வெல்லையில், தன்மரபி லுதித்த மன்னவனிடத் துக்காதலால் கடவுட்டிங்கள் வானத்தினின்று இறங்கி

வருவதுபோன்று, திடீரென்று நாரதமுனிவர் விண்ணகத்தினின்று இறங்கி உதயணமன்னவனிடம் வந்தனர். முனிவர்பிரான் வந்ததும், உதயணமன்னவன், அதிதிக்குச் செய்யவேண்டியஸத்காரங்களையெல்லாஞ்செய்து,விநயத்துடன் அம்முனித்தலைவரின் முன்னிலையிற் கைகுவித்து நின்றனன். அம்மன்னவனிடத்துப் பேரருள்வைத்த அக்கடவுண்முனியும், பாரிஜாதமலர்மாலையை அம்மன்னவனுக்கு அளித்தபின்னர், தேவி வாசவதத்தை வணங்கி நிற்க அன்னாளை நோக்கி, 'காமதேவனது அமிசமாகி வித்தியாதரர்க்கெல்லாந்தலைவனாகும் புதல்வனைப் பெறுக' என்று ஆசி கூறினர்.

பின்னர், முனிவர்பெருமான், உதயண மன்னவனை நோக்கி, 'நினது மூதாதையர் என்பாற்பேரன்பு வைத்திருந்தனர். அவர்களிடத்து யான் கொண்டிருந்த அன்பினால் இப்போது நின்னிடத்தும் அன்பு பூண்டு நின்னைக் காணுமாறு ஈண்டுவந்தேன். ஆதலான், யான் ஒன்று கூறவிரும்புகின்றேன். நீ அதனை அவதானத்துடன் கேட்டு நடந்துகொள்க. நினது மந்திரியர் தக்கவமயத்திற் கூறுங்கூற்றுக்களை எனது மொழிபோலக் கருதி ஒழுகுக. இன்னும் சின்னாளில் நினக்குத் துன்பம் நேரும்; ஆயினும், நீ விரைவிற்றானே பெருநன்மையைப் பெறுவாய். அப்பொழுது அதன்பொருட்டுச் சற்றுங் கலங்கவேண்டா; அத்துன்பம் யாவும் இறுதியில் இன்பமாகவே முடியும்' என்றனர்.

இவ்வாறு சொல்லியதும் முனிவர்பெருமான் அந்தர்த்தானமாயினர். யௌகந்தராயணன் முதலிய மூவரும் முனிவர் பெருமானது மொழியால் தமது செயல் முற்றுறுமென்று மனந்தேறி, மேன்மேலும் அத்தொழிலை நடாத்துமாறு ஊக்கத்தோடு முயல்வாராயினர்.

எட்டாவது அத்தியாயம் :

## பத்மாவதீ பரிணயம்.

பின்னர், யௌகந்தராயணன் முதலிய மந்திரிமார், முன்பு அறுதியிட்ட முறைப்படியே, உதயணமன்னவனை வாசவதத்தாஸமேதனாக லாவாணகமென்னு மூர்க்குப் பயணப்படும்படி செய்தனர். மந்திரிமாரது எண்ணம் முற்றுவதைப் பறைபறைவது போன்று பேரொலியுடனே சேனைகள் புடைசூழ்ந்து வர, உதயணமன்னவன் லாவாணகமென்ற ஊரைச் சார்ந்தனன்.

பெருந்தானையுடனே உதயணமன்னவன் தன்னாட்டிற்கு அருகில் வந்துள்ளா னென்பதை ஒற்றராலுணர்ந்ததும், மகதநாட்டுமன்னவன், 'தன்னாட்டை எங்கு உதயணன் முற்றுகை செய்வானோ?' என்று பேரச்சங்கொண்டு மிக்கஆராய்ச்சியையுடையனாதலின், உதயணமன்னவனது கருத்தை உணர்ந்துவருமாறு யௌகந்தராயணன்மாட்டு ஓரொற்றனை விடுத்தனன். அவ்வமைச்சனும் வந்த ஒற்றுவனுக்கு மிக்க சிறப்புக்கள் புரிந்து விடுக்க, அதனால், மகதமன்னவனது மனம் தெளிவுற்றது.

லாவாணகமென்ற ஊரில் வாழும் உதயணமன்னவன் நாடோறும் கானகஞ்சென்று வேட்டமாடி விநோதமாகக் காலங்கழித்து வரலாயினன். இவ்வாறு கழியுநாட்களில் ஒருநாள் உதயணமன்னவன் வேட்டமாட வெளிச்சென்றிருக்கையில், ருமண்வான் யௌகந்தராயணன் வசந்தகன் என்ற மூவரும் கோபாலகனை முன்னிட்டுத் தேவிவாசவதத்தை வாழுமிடத்திற்குச் சென்று அங்கு ஒருத்தருமில்லாத அமயம் நோக்கி அவளருகிற் சார்ந்து, கணவனது நன்மையையே நாடும் அன்னாளை நோக்கி, தாம் செய்யுமாறு

கருதியதற்கு இணங்கும்படி இனிய மென்மொழிகளால் வேண்டினர். அவளும் முன்னரே தனது முன்னோன்மூல மாக அவர்கள்வினைவை யெல்லாம் உணர்ந்திருத்தலால், அப்போது அவர்களது வேண்டுகோட்கு எளிதி லிசைந்தனள். பிரிவுத்துயரை மெத்தத்தோற்றுவிக்கும் இச்செயலுக்கு வாசவதத்தை எவ்வாறு இசைந்தன ளென்று நாம் ஐயுறக்கூடும்; காதலரது நன்மையிற் காதல்கொண்ட குலமகளிர் எதனைத்தான் பொறார்?

அப்பால் அறவும்வல்லுநனை யௌகந்தராயணன், தனது யோகமகிமையால் வாசவதத்தையைப் பார்ப்பனிக் கோலத்தினளாக மாற்றி, வசந்தகனையும் கண்பொட்டை மாணியனாக மாற்றி, தானும் முதிய அந்தணவடிவங் கொண்டான். பிறகு, அவ்யௌகந்த ராயணன், பிராமணி யினுருவத் தினளாய தேவியை யிட்டுக்கொண்டு, வசந்தக னுடனே மகதநாட்டை நோக்கி நடந்தனன். தன்மனையி னின்றுவெளிச்செல்லும் வாசவதத்தை, தன்கருத்தெல்லாம் கொழுநன்மீது சென்றிருக்கத் தனது வெற்றுடம்பினால் மாத்திரம் யௌகந்தராயணன் பின் நடந்தனள்.

ருமண்வான், போரிற் கொள்ளியிட்டு மார்பிலும் அறைந்துகொள்பவர்போன்று முன்னைய சங்கேதப்படி அப்பொழுது அந்தப்புரத்தி லெரியிட்டு, 'ஐயகோ! தேவி வாசவதத்தை அனற்பட்டனளே! ஆ! என் செய்வேன்!! ஆ! ஆ! வசந்தகனும் இறந்தனனே! ஐயோ! ஐயோ!! என்று கதற லாயினன். அந்தப்புரத்தை யெரித்ததும் தீக்கடவுள் தணிந்திட்டது; ருமண்வான் முதலிய பரிசனங்களது கதற லொலி மாத்திரம் சற்றுந் தணிந்திலது.

இப்பால், யௌகந்தராயணனே, வசந்தகனுடனும் வாசவதத்தையுடனும் மகதநாட்டின் படைவீடாகிய நகரத்

தைச் சார்ந்தனன். அவ்வெல்லையில், மன்னவன்மகள் பூங்காவனத்தி லுறைவதை யறிந்து, யௌகந்தராயணன், அவ்விருவரோடும் ஆண்டுச் சென்றான். மன்னவன்மகள் பத்மாவதி, வாசவதத்தையைச் சேய்மையிற் கண்டதும், அன்னாளிடத்துக் காரணமின்றியே அன்பு பூண்டனள்; சந்திரகாந்தம் திங்களைக் கண்டவிடத்து நீர் கால்வதற்கும், தாமரைமலர் கதிரவனைக் கண்டவிடத்து அலர்வதற்கும் காரணங் கூற வியலுமோ? சோலைவாயில்காவலர் யௌகந்தராயணன் முதலியோரை உட்புகவொட்டாது தடுக்கையில், அவ்வரசகன்னிகை, அவர்களை வாளா விருக்கச்சொல்லி, முதிய அந்தணவடிவுகொண்ட யௌகந்தராயணன் முதலியோரைப் பூங்காவனத்தினுள் வருமாறு வேண்டினள்.

பின்பு அவள் யௌகந்தராயணனை நோக்கி, 'முத்தழலோம்புவோய்! நின்னுடனிருக்கும் இந்நங்கை யாவள்? நீ ஈண்டுவரக் காரணம் என்னோ?' என்று வினவினள். யௌகந்தராயணன், 'மன்னவன்புதல்வீ! இவள் எனது குமாரி; அவந்திகையென்னும் பெயரினள், இவளது கணவனோ, வ்யஸநி யாதலால், இவளை நீத்து எங்கோ சென்றிட்டான். இவளை இப்பொழுது நினதுவசத்தில் வைத்திட்டு, விரைவில்தானே இவளது கொழுநனை நாடி இட்டுக்கொண்டு வருவேன். இந்தக்குருட்டுமாணி இவளது உடன்பிறந்தோன்; இவளுக்குத் தனிமையால் தோன்றும் வருத்தம் நேராவண்ணம் இவளுடன் இவனுறைக' என்று விடை யிறுத்தான். எனலும், மன்னவன்குமரி அவனுரைக்கு இசைந்தனள். யௌகந்தராயணன் மன்னவன் குமாரி மாட்டு விடைபெற்று, அக்கணமே லாவாணகத்தை நோக்கிப் பொட்டெனப் போயினன்.

பத்மாவதி, அவந்திகையென்றுபேர்கொண்ட வாசவதத்தையையும், கண்பொட்டையனன பிரமசாரியையும் உடனிட்டுக்கொண்டு, அவர்களிடத்து மிக்கநட்பையும் மரியாதையையும் ப்ராராட்டியவளாய் மிக்கமகிழ்ச்சியுடன் தன்னரண்மனைக்குச் சென்றாள். ஆங்குப் பித்திகையிற் றீட்டிய ராமசரிதையிற் சீதாபிராட்டியாரைக் கண்ணுற்ற வாசவதத்தை, தனது பிரிவுத் துயரை அரிதிற் பொறுத்திருந்தனள். வடிவத்தினும், சாயலினும், பள்ளியிலும் ஊணிலும் நேர்மையினும், கருங்குவளைமலர் போன்று நறுமணம்வீசும் மேனிமணத்தினும், வாசவதத்தையைப் பெண்ணரசியெனத் துணிந்து, பத்மாவதி, அவளுக்குத் தன்னேடொக்க மிக்கமேம்பட்ட உபசாரங்கள் செய்யுமாறு புரிநதனள். அன்றியும், 'விராடநகரத்தில் முன்பு திரௌபதி கரந்துறைந்ததுபோல யாரோ ஒரு உயர்குடியிற் பிறந்த மாது இவ்வாறு இங்கு மறைந்துறைகின்றாள் போலும்' என்ற கருத்தும் பத்மாவதிக்குத் தோன்றிற்று.

வாசவதத்தை ஒருகால் தான் உதயணனிடத்துப் பயின்றவாறு பத்மாவதிக்குச் செவ்விவாடாமாலையைச் சூட்டி வாணுதற்றிலகத்தையும் தீட்டினள். பத்மாவதியின் அன்னை, அவற்றைப் பூண்ட மகளைக் கண்ணுற்று வியந்து, 'நங்காய்! இந்த மாலாதிலகங்களை நினக்குப் பூண்டவர் யாவர்?' என வினவினள்.

பத்மாவதி:—'என் மனையில் அவந்திகை யென்று ஒருத்தி வந்திருக்கின்றாள்; அவள் எனக்கு இவற்றைப் பூண்டனள்' என மறுமொழி கூறினள்.

அன்னை, 'இவ்வாறுபுரியும் ஆற்றல் படைத்த அன்னாள் மானுடமக ளல்லள்; தெய்வமகள்போலும்' எனப்

பாராட்டி மொழிந்து, பிறகு, 'கடவுளரும் முனிவரும் சாதாரண மானுடர்மனையில் உறைதல் இயல்பே. குந்திபோஜன் மனையில் முன்பு துருவாசமுனிவர் சில்நாள் வாழ்ந்தனரன்றே! ஆதலால் அன்னளை ஸாமாந்யமாநுஷீ யென்று மதியாது அவள்திறத்து அன்போடு நடக்க' என்றாள். இதனைச் செவியேற்றதும், பத்மாவதி, முன்னினும், அன்னாள் திறத்துப் பன்மடங்கு மதிப்புப்பூண் டொழுகுவாளாயினள். ஆயினும், தனது கொழுநனைப் பிரிந்த வாசவதத்தையோ, இராப்பொழுதின்கண் தாமரையோடைபோல ஒளிமாழ்கிக் கிடந்தாள். வசந்தகனது குறும்பான செயல்கள், பிரிவுத் துயரால் வருந்தும் வாசவதத்தைக்கு அவ்வப்போது சற்று முகமலர்ச்சியைத் தந்தன. இதுநிற்க:

அங்கு; உதயணமன்னவன், வெகுதூரங் காட்டகத்திற் சென்று வேட்டையாடிப் பொழுது போகையில் அவணின்று மீண்டு லாவாணகத்திற்கு வந்தனன். அங்கு அந்தப்புரம் கனலி லெரிந்திட்டதைக் கண்கூடாகக் கண்டான்; செவிப்புழையில் அனற்கொழுந்தைப் புகுத்துவதுபோலத் தேவியும் வசந்தகனும் எரியில் வெந்திட்டனரென்று அமைச்சர் கூறிய கடுமொழியைச் செவியேற்றான். அதனால், உதயணன் இடியொலி கேட்ட அரவம்போல நடுநடுங்கித் துயரமிகுதியாற் கையற்றுக் கீழ்விழுந்திட்டான்; அருகிலிருந்த பணியாளர் சைத்யோபசாரஞ் செய்ய, சற்றுநேரத்தில் மூர்ச்சைதெளிந்து, தேவியை யெரித்த கனல் தன்னிடத்தும் மூண்டதுபோலத் துடிதுடித்து வாய்விட்டுக் கதறிக்கதறி அழுது அழுது தன் துயர்க்கு ஒரெல்லை காணாது வாய்புலற்றினன். இவ்வாறு வாட்டமுற்றுத் திகைத்து வருந்தும் மன்னவன் மனத்தில் ஒரெண்ண முதித்தது. 'என்னே? வாசவதத்தை வித்தியாதரமன்னனு

வான் ஒருபுதல்வனைப் பெறுவ ளென்று முன்னமே அசரீரி மொழிந்துள்ளதே; தேவவிருடியாகிய நாரதமுனிவரும் அன்னணமே மொழிந்துள்ளாரே. அன்றியும், சிறிதுகாலம் நினக்குத் துயரம் நேரும்; ஆயினும், இறுதியில் அஃது இனிய பயனையே தருமென்றும் மொழிந்துள்ளாரே. இவ்வாறான முனிவர் சொல்லும் பொய்க்குமோ? பொய்யாதே. மேலும், வாசவதத்தையின் உடன்பிறப்பினனாகிய கோபாலகன் தன் தங்கைமீது மிக்கநேயம் வைத்திருந்தும், அவன்சிறிதுங்கவல்வதாகத்தோற்றவில்லையே. யௌகந்தராயணன் முதலியோரும் தேவி கனலி லெரிந்திட்டாளென்று கவலை மிகுதியாகக் கொள்ளவில்லையே. இவை யெல்லாவற்றையும் ஆய்கையில், தேவி வாசவதத்தை உயிருடன் பிழைத்திருப்பாளென்றேதோற்றுகின்றது. ஒருகால்யாதோ ஒருபெருஞ்செயலை நிறைவேற்றக் கருதிய உழையர் ஏதேனும் தந்திரஞ் செய்திருக்கக்கூடும். ஆகவே, உண்மை விளங்குதற்குச் சிலகாலந் தாழ்க்கவேண்டும். ஆதலான், மீண்டும் யான் அந்தத்தேவி வாசவதத்தையைக் காண்டலும் கூடும்' என்று சிந்தித்து, மந்திரிகளின் தேற்றரவினால் மனத்தைச் சாலவும் உறுதி செய்துகொண்டான்.

வற்சராசன் செய்தி இவ்வாறாக, லாவாணகத்தி லிருந்த மகதமன்னவனது சாரர்கள் தம்வேந்தனிடத்து லாவாணகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் அறிவித்தனர். காலமுணர்ந்து செய்வனசெய்யும் மகதபூபதி, இதுதான் ஏற்றசமய மென்று உணர்ந்து, முன்னமே உதயணனது மந்திரிமார் பத்மாவதியை வற்சராசனுக்கு வாழ்க்கைத் துணையாக்குமாறு வேண்டியுள்ளா ராதலால் 'அன்னணமே உதயணமன்னவனுக்குத் தன்குமரியை ஈயுமாறு தன் மனத்தி லுறுதி கொண்டு, பின்னர் ஒற்றுவன்மூல

மாகத் தன் விருப்பத்தை உதயணமன்னவனிடத்தும் யௌகந்தராயணனிடத்தும் உணர்த்தி வருமாறு சாற்றி விடுத்தான்.

உதயணமன்னவன், யௌகந்தராயணனது சொல்லினுற் பத்மாவதியை மணந்துகொள்வதற்கு உடம்பட்டனன்; அப்போழ்து, பத்மாவதியை மணம்புரிவித்தற்பொருட்டே மந்திரிமார் வாசவதத்தையைக் குறித்து அவ்வாறு வாய்மையற்ற வதந்தியை யெழுப்பி யிருக்கக்கூடு மென்ற ஓர் கருத்தும், உதயணமன்னவனுக்கு உதித்தது. அப்பால், யௌகந்தராயணன், கணிகளைக் கொண்டு நன்முகூர்த்தத்தை யறுதியிட்டு, மகதமன்னவனிடத்து 'உமது விருப்பத்திற்கு யாம் இசைந்தோம். ஆகவே, பத்மாவதியைப் பாணிக்கிரகணஞ் செய்துகொள்ளுதற்பொருட்டு இற்றைக்கு ஏழாநாள் நுமது நாட்டிற்கு வத்சராசர் வருவார். எமது வேந்தர் வாசவதத்தாதேவியை இதனுல்தான் விரைவில் மறக்கவேணும்' என்று சாற்றி மாற்றுத்தூதனை யேவினன். ஏவிய தூதுவன் மகதநாட்டைச்சார்ந்து மகதமன்னவனிடம் யௌகந்தராயணனது மாற்றத்தை அவ்வாறே மொழியவே, ப்ரத்யோதன் அதனைச் செவியேற்றுக் களிப்புக்கடலி லாழ்ந்தனன்.

பிறகு, மகதமன்னவன் தனக்குப் புத்திரியின்மீதுள்ள விருப்பிற்கும் தனது செல்வப்பெருக்கிற்கும் எவ்வாறு புரிந்தா லேற்குமோ, அவ்வாறு திருமணத் திருவிழாவைக் கோடித்தனன். பத்மாவதி தனக்கேற்ற கொழுநன் கிடைத்ததனை யுணர்ந்து சால வுவந்தாள். வாசவதத்தையோ அதனைச் செவியேற்றதும் எல்லையில்லாத் துயர்கொண்டாள்; முகப்பொலிவை யிழந்தாள்; மறைந்துறையும் வாசவதத்தைக்குத் துணை புரிவதுபோல இச்செய்தி அவளதுவடி

வத்தையே மாற்றியது. பெண்டிர்மனம் சக்களத்திமாரை யெண்ணி நோவது இயல்பேயன்றோ! அப்போழ்து, வசந்தகன் அற்றம்நோக்கி வாசவதத்தையை யணுகி, 'அம்மா! நீர் துயருறவேண்டா; நுமது கணவர் நும்மிடத்துக் காதலில் திறம்பார்: மகதநாட்டுமன்னவரை நட்புக்கொள்ளுதற் பொருட்டன்றோ இவ்வாறு செய்வித்தோம்' என்று பாங்கிமாரைப்போல இனிதாக மொழிந்து தேற்றினான். அத்தேற்றரவு வாசவதத்தையின் கருத்திற்குச் சிறிது திடனை யுண்டாக்கிற்று. பின்னர், நன்மனத்தினளாகிய வாசவதத்தை, பத்மாவதிக்கு மணம் நெருங்கியதனால், மீண்டும் திப்பியங்களான செவ்விவாடா மலர்மாலைகளைப் பூண்டனள்.

பத்மாவதியை மணந்துகொண்டால்தான் வாசவதத்தையைப் பெறுதல் கூடுமென்ற கருத்து, பத்மாவதியை மணந்துகொள்ளுமாறு பிரிவுத்துயரால் வருந்தும் வற்சராசனைத் தூண்டிற்று; அதனால், முன் சொன்னவாறே ஏழாநாள், வற்சராசன், பத்மாவதியை மணந்துகொள்ளுதற் பொருட்டுப் படைகள் புடைசூழ மந்திரிமாருடன் மகதநாட்டை யடைந்தான். மக்களின் நோக்கிற்கு மகிழ்ச்சியை விளைக்கும் மதியைச் சாகரம் பொங்கித் திரைக்கரத்தால் எதிர்கொள்வதுபோல, உதயணமன்னவனை மகதவேந்தன் மனமகிழ்ந்து எதிர்கொள்ள, உதயணமன்னவன் மகதநாட்டின் தலைநகரிற் புகுந்தான்; நகரமாந்தரினகத்தும் பெருங்களிப்புப் புகுந்தது. அப்போது பிரிவுத்துயரான்மெலிந்துவடிவழகால் மனத்தைக் கவரும் வற்சராசன், ரதீதேவியைப் பிரிந்துநிற்கும் கருப்புவில்லிபோலத் தோற்றினான்.

பிறகு, உதயணமன்னவன், மகதமன்னவனது மாளிகையிற் புகுந்து, ஆங்கு, மணத்திற்காக வமைத்த இடத்

தைச் சார்ந்து, அவன், மணவணியணிந்து நிற்கும் பத்மாவதியைக் கண்ணுற்றான். அன்னாள் செவ்விவாடாதமாலாதிலகங்களைப் பூண்டிருப்பது கண்டு, 'இன்னாளுக்கு இவை எவ்வாறு கிடைத்தன?' என்று ஒராராய்ச்சி கொண்டான்.

அப்பால், உதயணமன்னவன் மணப்பந்தரின் கீழ் வேதிகையின்மீது வீற்றிருந்து பத்மாவதியின் கரத்தைப் பற்றினான்; அது, புவிமாதின்கரங்களைப் பற்றநாளிட்டது போன்றது. வேதிகையின்மத்தியி லிருந்த கனல், உதயணன் வாசவதத்தைமீது பேரன்பின ஞதலால், பத்மாவதியின்மணத்தை மனப்பூர்வமாகக் காணுனென்பது பற்றிப் புகைமூலமாக ஒன்றுந் தோன்றாது மறைத்திட்டது. அங்கியை வலம்வருகையில், பத்மாவதியின் முகம், தனதுகணவன் வாசவதத்தையினிடங் காதல் கொண்டிருப்பதை யுணர்ந்து ஊடல்கொண்டதுபோலச் சிவந்து தோன்றிற்று. கலியாணச்சடங்கு முற்றியதும் வற்சராசன் பத்மாவதியின் கரத்தை விட்டிட்டான்; என்றாலும், அவனுடைய மனம் ஒருநொடிப்போதேனும் வாசவதத்தையை நீத்திலது. அஞ்ஞான்று, இரவலர், வெறுக்குமாறு ஆடையாபரணங்களைப் பெற்றனர்; சிறந்த பாடகர் கீதங்கள் பாடினர்; நாடகமகளிர் நட்டமிட்டனர்; இவ்வாறு அத்திருவிழா மிக்க சம்பிரமத்துடன் நடக்கலாயிற்று.

பகற்பொழுதில் திங்கட்கலைபோலத் தன்கணவனது உதயத்தை எதிர்பார்த்தவண்ணம்,வாசவதத்தைஒளிமாழ்கி உறங்கிக் கிடந்தாள். புவியில் இனி அரதனமொன்றும் இராதென்று தோன்றுமாறு அத்துணை மிகுதியாக மகதமன்னவன் வற்சராசனுக்கு அரதனங்களை வரதக்ஷிணையாகக் கொடுத்தனன். அவ்வெல்லையில், யௌகந்தராய

ணன் அங்கியங்கடவுள் சான்ருக, 'உதயணமன்னவனுக்குத் திரிகரணங்களினுலும் யாதொரு தீங்குஞ் செய்வதில்லை' என்று மகதராஜனைக்கொண்டு உறுதிமொழி கூறுவித்தான்.

செய்தொழிலில் வல்ல யௌகந்தராயணன், 'அரசன் அந்தப்புரத்திற் செல்வானுயின், அங்குள்ள வாசவதத்தையைக் கண்ணுறுவானே; அப்போழ்து நமது மந்தணமெல்லாம் வெளிப்படுமே' என்று கருதி, மகதமன்னவனைக் குறுகி, 'மன்னரே! உதயணவேந்தர் நமது இல்லத்தினின்று இப்போழ்தே பயணமாவார்' என்று செய்தி தெரிவிக்க, அதற்கு மகதமன்னவன் 'அங்ஙனமே யாருக' என்ருன். பின்னர், மந்திரி, உதயணமன்னனிடத்தும் அப்போழ்தே பயணமாக வேணுமென்று விண்ணப்பிக்க, அவனும் அதற்கு இசைந்தனன்.

அப்பால், வற்சராசன் மந்திரிமார் புடைசூழ, பத்மாவதியுடன் புறப்பட்டான். அப்போது பத்மாவதியின் விருப்பத்தின்படி, புடைசூழ்ந்த பணியாளருடன் வாசவதத்தையும் ஊர்தியை இவர்ந்து பணியாளர்குழாத்தின் பின்னர்ப் போந்தாள். அந்த வாசவதத்தைக்கு முன்புறத்தில் மாறுவேடம் பூண்ட வசந்தகன் சென்ருன். முறையே, லாவாணகத்தைச் சார்ந்ததும், உதயணன் மணமகளுடன் தன்னில்லத்திற் புகுந்தான்; அப்போது, வாசவதத்தையோ, உதயணமன்னவனைச் சிந்தித்தவண்ணமாகவே, தன்னுடன்வந்த பணியாளரை வெளிப்புறத்து நிறுத்திக் கோபாலகனது மனையகத்திற் புகுந்து, அங்குத் தன்னைக் கண்ணுற்றதும் ஆர்வம்பொங்கக் கட்புனல் சிந்திநிற்குங் கோபாலகனைத் தழுவியணைத்துத் தானுங் கண்ணீர் சிந்தினுள். அக்கணத்தில், யௌகந்தராயணன், ருமண்வானு

டன் அவ்வில்லத்திற் சென்று, வாசவதத்தை கண்ணீர் சிந்தித் தன்பிரிவுத்துயரைக் காட்ட, அன்னாளைப் பிரிவுத்துயரைச் சற்றுப் பொறுத்திருக்குமாறு தேற்றரவு கூறிக்கொண்டிருந்தனன்.

அப்போது, பெருந்தன்மையுள்ள பணியாளர், பத்மாவதியினிடம் போந்து, 'தேவி! அவந்திகை, நம்மையெல்லாம் நீத்துக் கோபாலகனென்ற மன்னவகுமரனது மனைக்கு ஏகினள்; இஃது என்னையோ?' என்று விண்ணப்பித்தனர். அரசனது முன்னிலையிற் பணியாளர் அவ்வாறு கூறவும், பத்மாவதி ஐயுற்று, அவர்களை நோக்கி, 'நீங்கள் சென்று, நீ என்னிடத்து அடைக்கலப்பொருளாக வைக்கப்பெற்றுள்ளாய்; ஆகலான், எனது இருக்கையில் வாழ்ச்சியே நினக்குத் தக்கதென்ன யான் மொழிந்ததாக அவந்திகையினிடத்துக் கூறுக' என்றாள். அவ்வுரையைத் தம் முடிமீதுதாங்கி அப்பணியாளர் சென்றனர்.

சென்றதும், வேந்தன், பத்மாவதியை ஏகாந்தத்திற் கூவி, 'நினக்கு இம்மாலாதிலகங்களை யியற்றித் தந்தவர் யாவர்?' என வினவினன்.

பத்மாவதி:—எனது இல்லத்திற் சேமப்பொருளாகப் பனவனொருவனாற் சேமிக்கப்பெற்று அவந்திகையென்று பேர்பூண்ட மாதரொருத்தி வாழ்கின்றனள்; அவளது சிற்பமாகும் இவை' என்று மறுமொழி யளித்தனள்.

அவ்வுரையைச் செவியேற்றதும், நரபதி, 'கோபாலகன் மனையிற் சென்றவள் வாசவதத்தையே; ஐயமின்று' என்று அறுதியிட்டு, அந்தக்கோபாலகனகத்திற் புகுந்து நோக்கினன்.

அங்கு, அப்போழ்து யௌகந்தராயணனும் ருமண்வானும் வசந்தகனும் வாசவதத்தைக்குத் தேற்றரவுகூறிக்

கொண்டிருந்தனர். அங்கு, வேந்தன், தன்னைப் பிரிந்த துயரத்தால் மேனி மெலிந்து நிற்கும் வாசவதத்தையைக் கண்டனன்; கண்டதும் திகைப்பூடு மிதித்தவன் போன்று மதி கலங்கிச் செய்வதுதோன்றாது திகைத்துக் கண்ணீர் ஆறாய்ப்பெருக வேரற்ற மரம்போலக் கீழ்விழுந்திட்டான். அஞ்ஞான்று, வாசவதத்தையும், நெஞ்சந் துடிதுடிக்கக் கண்களில்புனல்பெருக அறிவுசோர்ந்து உயிர்ப்புஒடுங்கித் திகைப்புக்கொண்டு பிரிவுத்துயராற் சோர்ந்து, வெளுத்த மேனியோடும் மனத்துயரைப் பொறுக்கவொண்ணாது மேதினியில் விழுந்திட்டாள்; சிறிது தேறி, தனதுசெயலைப் பலவாறாகப் பழித்துரைத்தாள். அந்தத்தம்பதிகள் அக்காலையிற் பட்ட துயரத்தைக் கண்டு மனமாற்றாது யௌகந்தராயணனும் கண்ணீர் துளித்தான்.

அவ்விடத்துத் தோன்றிய கோலாகலத்தைப் பத்மாவதிதேவி புணர்ந்து, மனத்திற் கலக்கங்கொண்டு அவண் வந்தனள்; மெல்லமெல்லச் செய்தியாவையு முணர்ந்து, உதயணமன்னவனையும் வாசவதத்தையையும் போலவே, அன்னாளும் அவர்க்கு நேர்ந்திருந்த நிகழ்ச்சிக்கு வருந்தினாள். நன்மங்கையர் நட்பிற்குக் கட்டுப்படுதல் இயற்கையேயாகும்.

வாசவதத்தை:—‘கொழுநனுக்கு இன்னலைத் தந்த எனது உயிர்வாழ்க்கையால் யாதுபயன்? எனது ஆவியால் யாது பயன்?’ என்று பன்முறையுந் தன்னைப் பழித்துக் கூறலானாள்.

யௌகந்தராயணன்:—‘நமக்குப் புவிமுழுதையும் அடிப்படுத்த வேண்டுமென்று அவாவிய யான், மகத மன்னவனது புதல்வியைப் பாணிக்கிரகணம் புரிவித்தற்பொருட்டுச் செய்த செயலாகும் இது; இத்திறத்

தில் வாசவதத்தையின்மீது ஒரு சிறிதும் பிழையில்லை; இவ்வாசவதத்தை நல்லொழுக்கத்தினின்று வழுவாதவ ளென்பதற்கு இவளது சக்களத்தியாகிய பத்மாவதியே ஏற்ற சான்றுவள்' என்று துணிவோடு கூறினன்.

பத்மாவதி:—(மனத்திற் சிறிதும் மாறுபாட்டமின்றி), 'இவள் நல்லொழுக்கமுள்ளவ ளென்பதை வற்புறுத்து மாறு, யான் தீக்குதித்தலாகிய சூளுறவையும் செய்து காட்டுவேன்' என்றாள்.

உதயணன்:—'வாசவதத்தையின் திறத்திற் பிழை பாடுடையன் யானே; என்பொருட்டாலன்றோ இவ்வாசவ தத்தை பேரிடர்க்குப் பாத்திர மாயினாள்!' என்றான்.

அப்போழ்து, பேரறிஞனாகிய யௌகந்தராயணன், மூழ்கி ஆசமனஞ்செய்து கீட்டிசைநோக்கிநின்று, 'நானும் மன்னவனது நன்மையையே நாடினவனாக இருந்து, தேவி வாசவதத்தையும் தனது நல்லொழுக்கத்தினின்று சிறிதும் வழுவாதவளாக இருப்பின், உலோகபாலீர்காள்! நீங்கள் எனது வினாவிற்கு விடையிறுக்க; இல்லாவிடின் எனது உடலை யான் அங்கியங்கடவுட்கு இரையாக்கு வேன்! என்று ஓலமிட்டான். அவன் வாய்மொழி முற் றுறுமுன்னமே இவ்வாறு ஓரசரீரி தோன்றிற்று: 'மன் னவ! நீ பாக்கியசாலி; நினக்கு யௌகந்தராயணன் அமைச் சனாகவும், வாசவதத்தை வாழ்க்கைத்துணைவியாகவும் அமைந்துளா ரன்றோ! இவள்திறத்து நீ சிறிதும் ஐயங் கொள்ளற்க' என்றது.

அவ்வண்ணம் வானத்தினின்று இடியேறு செவிப் பட்டாற்போன்று ஆகாயவாணி கம்பீரமான ஒலியோடு செவியில் விழவும், எல்லோரும் தம்மனத்தடுமாற்ற

மொழிய, மயில்போன்று வானத்தைநோக்கிய வண்ணமாக இருந்தனர். உதயணமன்னவன் கோபாலகனோடும் யௌகந்தராயணனது செயலை இடைவிடாது புகழ்ந்தவண்ணமாகவே யிருந்தான்; அன்றியும், புவிமுழுவதும் தன் கையிற் சிக்கியதாக உறுதியுங் கொண்டான்.

---

## ஒன்பதாவது அத்தியாயம்:

## மகதமன்னவன் சந்தி.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், உதயணமன்னவன் தனது மனைவிமார் இருவருடனும் ஏகாந்தத்திலமர்ந்திருந்து, யௌகந்தராயணன் ருமண்வான் வசந்தகன் என்னும் இவர்களுடன் விநோதமாகப் பேசும் பேச்சோடு பேச்சாக வாசவதத்தையைநோக்கித் தன் பிரிவுத்துயரைப் பொறுத்தது காரணமாக வஞ்சப்பழிப்பாகச் சில கூறவே, வாசவதத்தை நாணத்தினால் தலைகவிழ்ந்தாள்.

அஞ்ஞான்று அவளைச் சாந்தப்படுத்த யௌகந்தராயணன் காவலனைநோக்கிப் பின்வருமாறு கூறலானான்:—'எவள் ஒருத்தி தன்கொழுநனுக்கு நலத்தைத் தேடுகின்றளோ, அவளே தேவி யென்று உரைத்தற்குத் தக்கவள். தன்கணவனுக்கு விருப்பத்தைமாத்திரஞ் செய்வது கற்புடைமகளிர்க்கு அழகல்ல. அவ்வண்ணமே, அரசாட்சிமுறைமையைப் பற்றி நன்கு ஆய்ந்து செங்கோல் மேம்படுமாறு மந்தண முரைப்பதே மந்திரியர்க்கு அழகு. அன்றி, இறைமகன் ஒன்றைப் புகழின் அது தகுதியற்ற தென்று தெரிந்தும் தாமும் ஒக்கப் புகழ்ந்து; அவ்வாறே இகழினும் ஒக்க இகழ்வது மந்திரிமார்க்கு அழகன்று. நீர்வழிப்பட்டபுணைபோல இச்சகம்

பேசி இடித்துண்கை, பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை யாகு மன்றோ! எப்போதும் மாற்சரியங் கொண்டு ஒழுகும் மகதமன்னவனோடு சந்திசெய்வது கருதியும், நீவிர் புவி முழுவதையும் வென்று வீற்றிருந்து தனிச்செங்கோல் செலுத்துவது கருதியும், நாங்கள் இவ்வாறு முயன்றோம்; ஆகவே, மன்னவரே! பொறுத்தற்கு அரிய நும் பிரிவுத் துயரை நும்மிடத்துப்பேரார்வத்தினால் இந்த வாசவதத்தை பொறுத்தனள். அன்றியும், நுமது நன்மையையே நாடி நீர் வேறொருத்தியை மணத்தற்கும் தான் உடம்பட்டனள். ஆதலால், இவள்மீது சிறிதுங் குற்றங்கூறுதல் இயலாது; இவள்பக்கல் பெருநன்றி பாராட்டவேண்டுவதே நுமது கடமையாகும்' என்றான்.

இங்ஙனம் யௌகந்தராயணன் இடித்துக் கட்டுரை கூறவே, உதயணமன்னவன், தான் முன்னருரைத்தது பெரிதும் பிழையாகு மெனத் தேர்ந்து, அன்னாது முயற் சிக்குப் பேருவகைபூத்து, 'நுமது முயற்சிக்கு ஏற்றவாறு இந்தத்தேவி நடந்ததனால், நுமது நீதி நன்கு பயனுற்றது; அதனால் புவிமுழுதும் என்கையி லகப்பட்டது; ஆயினும், யான் இவ்வாறு பொருத்த மற்ற சில சொற்களைக் கூறியது, பேரன்பினா லாகும்; காதலாற் கண்குருடரானோர்க்கு ஆராயும் ஆற்றல் உண்டாவது அரிதேயன்றோ!' என்று இவ்வாறாக வாசவதத்தை வெட்கியதையும் முகமனுரைகளாற் போக்கினான்.

அற்றைக்கு அடுத்த நாள், மகதமன்னவன் உதயணனது செய்தி முழுவதையும் தெள்ளியதாகவுணர்ந்து, ஒரு தூதனை அனுப்ப, அவ்வொற்றனும் தமது மன்னவன் கூற்றாக இவ்வாறு கூறலானான்: 'நுமது மந்திரிமாரது சூழ்ச்சியின் அகவலைப்பட்டு நாங்கள் வஞ்சிக்கப்பெற்றோம்; இனி,

எம்மைச் சார்ந்தார் வருத்தமுறாதவாறு நடக்க வேண்டுகின்றேன்' என்றான்.

உதயணராசன் அம்மொழியைச் செவியேற்று, அவ்வொற்றனைச் சம்மானித்து, பத்மாவதி தன் தந்தைக்குச் செய்தி கூறியனுப்புமாறு அவனை அவளருகில் விடுத்தான். அன்றாளும், வாசவதத்தையின்முன்னிலையில் தானே அவ்வொற்றனுக்கு மிக்க பணிவோடுங் காட்சி யளித்தனள்: பணிவென்பது, மாதர்க்குப் பேரணிகல மன்றோ!

ஒற்றன் :—(பத்மாவதியை நோக்கி), 'நங்காய்! வஞ்சனையால் உதயணமன்னவர் நின்னை மணந்துசென்றனர்; அன்றியும், அவர், வேறொருமடந்தைபாற் காதல் மிக்குள்ளார்: இச்செயலை யெண்ணியெண்ணிக் கரைந்துகரைந்து நைந்துநைந்து உருகிஉருகிக் கண்ணீர்சோரப் பெண்பெற்றோரெய்தும் பெருந்துயர்க்குப் பேரிலக்கு ஆயினேன் என்று நுந்தை கூறுகின்றார்.'

பத்மாவதி :—'பத்ரமுகனே! எனது வாய்மொழியாக என் தாதையினிடத்தும் தாயினிடத்தும் இவ்வாறு மொழிக. இருமுதுகுரவரும் இடுக்கணடைவது எற்றுக்கு? ஆர்யபுத்ரர் என்திறத்துப் பெருங்கருணை வைத்துள்ளார்; வாசவதத்தாதேவியும் அக்காள்போல என்பால் நட்புப் பாராட்டுகின்றார். ஆதலால், தமது வாய்மையைப் பேணுவதுபோல எனது உயிர்வாழ்க்கையையும் பேண விரும்பினால், ஆர்யபுத்திரரிடத்து என்தாதை எள்ளளவும் மாறுபாடு கருதவேண்டா' என்று ஏற்ற விடை யளித்தாள்.

பிறகு, வாசவதத்தை, அவ்வொற்றனுக்குத் தக்கவாறு ஸத்காரஞ்செய்து அனுப்பினள்.

மகதராசனது ஒற்றுவன் திரும்பிச்சென்றதும், பத்மாவதி தனது பிறந்தகத்தைச் சிந்தித்துச் சிறிது கவல்பவள்

போயிருந்தாள். அவ்வேளையில், வாசவதத்தை, வசந்தகனை வரவழைத்து விசித்திரமான பல சரிதைகளை அவட்குக் கூறுமாறு கட்டளையிட்டாள். அன்னனும், அங்ஙனமே கூறி, அன்னாளது நெஞ்சிடரைத் தீர்த்து, இறுதியாகச் சில கட்டுரைகளைக் கூறலானான்: 'நன்மை விதைத்தால் நன்மை விளையும்; தீமை விதைத்தால் தீமை விளையும். இவ்வாறிருத்தலால், உதாரமனமுடையோர் எப்போழ்தும் பிறரிடத்து மாறுபட்டவினை செய்யக் கருதார். இடுக்கண் தலைவந்தக்கண்ணும் அரிமா கொடிப்புல் கறிக்குமோ? ஆதலால் பத்மாவதீ! நந்திறத்து எஞ்ஞான்றும் தேவி வாசவதத்தை அநுகூலபுத்தியுடனே நடப்பதன்றி ஒரு போதும் மாறுபடார். அன்றியும், நீவிரிருவரும் முற்பிறப்பில் உடன்பிறப்பாயிருந்து ஒரு சாபவயத்தால் இப்பிறப்பில் இவ்வாறு உதித்தீர். அதற்கு ஏற்பவே, இப்பிறவியிலும் நமது நெஞ்சம் இரண்டறக் கலந்து அக்யோக்யம் நன்மை புரிய நாடுகின்றது' என்றான்.

இவ்வாறு வசந்தகன் உரைத்ததைச் செவியேற்றதும், பத்மாவதி தன்னெஞ்சகத்துக் கொண்டிருந்த சிறிது துயரத்தையும் நீத்து முகமலர்ச்சி யுற்றாள். தேவி வாசவதத்தையும், பத்மாவதியைத் தன் தங்கையாகவே பாவித்து அன்னாளிடத்துப் பேரன்புபூண்டு தினையளவும் பொறாமையின்றித் தன்கொழுநனோடு தன்னைப்போலவே நடந்துவருமாறு இடங்கொடுத்தனள்.

மகதமன்னவன், தன்னொற்றுவரின் மூலமாகவும் பத்மாவதி விடுத்த தூதன் மூலமாகவும், தேவி வாசவதத்தையின் பெருந்தகைமையை யுணர்ந்து மனம் பூரித்தனன்.

சின்னாள் கழிந்ததும், யௌகந்தராயணன், தேவிமாரும் மற்றையோரும் இருக்கையில் உதயணமன்னவனை யணுகி 'கொற்றவ! மேன்மேலும் முயலுமாறு கௌசாம்பி நகருக்குச் செல்லவேண்டாவோ? நாம் மகதமன்னவரிடத்து வஞ்சித்தொழுகினும், இனி அம்மன்னவரிடத்து நமக்குச் சிறிதுஞ் சங்கை யின்று; கன்னிகையின் தொடர்பு என்னு பேர்பூண்ட சாமத்தால் அன்னார் நந்திறத்துக் கட்டுப்பட்டிட்டார். நம்மோடு மாறுபாடுகொண்டு, தம்முயிரினுஞ் சிறந்த மகளைக் கைவிடுதல் அவர்க்கு இயலா தன்றே! மேலும், அங்கியங்கடவுள் முன்னாகக் கூறிய வாய்மையைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் அன்னாருக்கு உள்ளது. தவிரவும், அன்னாரிடத்து வஞ்சனையாக எத்தொழிலையும் நீர் புரியவில்லை. செய்த வஞ்சனையாவும் எனதேயாகும்; அதுவும் அன்னார்க்கு இறுதியில் இனிமை பயப்பதே யாம். ஒற்றரைக்கொண்டும் அன்னாரதுமனநிலை நம்மீது மாறுபடாது நட்புப்பூண்டொழுகுகின்ற தென்பதையுந் தெற்றென வுணர்ந்தேன். அதன்பொருட்டுத்தான் இத்துணை நாள் இங்குத் தாழ்த்தது' என்றான்.

இவ்வண்ணம் யௌகந்தராயணன் உரைத்துக் கொண்டிருக்கையில், மகதமன்னவனது தூதன் வந்து; உதயணவரசனநுமதியின்மீது உட்புகுந்து உதயணமன்னவனை யணுகிப் பணிந்து இருந்து, தேவிபத்மாவதிவிடுத்த ஒற்றன்வாயிலாகச் செய்தி தெரிந்து அகமகிழ்ந்த தமது மன்னவன் கூறியதாக, 'பலசொல்லி யென்? யாவும் நன்கு உணர்ந்தோம்; நுஞ்செய்வினைக்கு அகமகிழ்ந்தோம். எதன் பொருட்டு இத்துணை முயற்சி புரிந்தீரோ, அத்தொழிலிற் சிறிதுங் காலந்தாழ்க்காது இறங்குக. நாமும் அதற்கு இசைந்திருக்கின்றோம்' என்றான்.

அது கேட்டதும் உள்ளத்தில் அடங்கா உவகை பொங்க, உதயணமன்னவன் பத்மாவதியோடும் அன்னனைச் சம்மானித்து விடுத்தான். அப்போது சண்டமகாசேனமன்னவனிடத்தினின்று ஒரு தூதன் வந்து பணிந்து, 'மன்னவரே! சண்டமகாசேனமன்னவர் நமதுசெய்வினையின் பயனையுணர்ந்து மகிழ்ந்து, நமக்கு இவ்வாறு கூறுகின்றார். பல சொல்லி யென்? நமது மேன்மையைச் சுருங்கச்சொல்லில், யௌகந்தராயணனை அமைச்சனாகப் பெற்றிருக்கின்றீரென்ற இத்துணையே. நம்மிடத்துப் பக்தியோடு ஒழுகுதலால், வாசவத்தை தங்கையாயினள்; அன்றியும், நல்லோர்குழாத்தில், யான் ஏக்கழுத்தங் கொள்ளுமாறு நடந்துகொண்டாளுமாயினள். எனக்கு வாசவதத்தை வேறு, பத்மாவதி வேறு அல்லள்: ஏனெனின், அவ்விருவரது உடல்மாத்திரம் வேறேயன்றி, மனம் ஒன்றேயன்றோ! ஆதலால், மேலே முயலுக' என்றான்.

இவ்வண்ணம் தனது மாமன்மார்கூறி விடுத்த மொழிகளைச் செவியேற்று, உதயணமன்னன் தன் மனத்துக் கரைகடந்த களிப்புக்கொண்டான்; அவனுக்குத் தேவிமாரிடத்துக் காதற்சிறப்பு விஞ்சியது; மந்திரிமாட்டு நட்பு மிக்கது.

அப்பால், நரபதி, அவ்வொற்றனையும் ஏற்றவாறு சம்மானித்து விடுத்து, மேல் செய்வனவற்றைக்குறித்து மந்திரியரோடு ஆராய்ந்து, கௌசாம்பிநகர்க்கு மீண்டு செல்லுமாறு மனங்கொண்டான்.

பத்தாவது அத்தியாயம்.

## உதயணன் தன் முன்னோரது சிங்காதனம் பெறுதல்.

பிற்றைநாள், உதயணமன்னவன் அந்த லாவாண கத்தினின்று மந்திரியரோடும் புறப்பட்டான்; அக்காலேயில், அவனது படைக்குழாம், அகாலத்தில் வரம்பு கடந்து பொங்கியெழுந்த முந்நீர்போலப் பேராரவாரத்துடன் மண்ணுலகத்தில் வெற்றிடமில்லையாகுமாறு பரந்து சென்றது. அப்பொழுது களிற்றின்மீது ஏறிச்செல்லுகின்ற உதயணன், உதயமலேயுடன் வானத்திற் செல்லுங் கதிரவனைப் போன்று விளங்கினன். பகலவனொளியை வென்று விளங்குகின்ற அம்மன்னவனிடத்து, அன்னனைக் காணுமாறு மகிழ்ச்சியால் வந்த இந்துவைப்போன்று ஒற்றைவெண் கொற்றக்குடை நிழற்றியது; வெண்சாமரைகள், அந்தத் தாரகாபதியின் கதிர்களை நிகர்த்து இருமருங்கிலும் விளங்கின. துருவனைக் கிரககணங்கள் புடைசூழ்ந்து நிற்றல் போல, சாமந்தர், மன்னவர்யாவரினும் மேம்பட்டுத் தோன்றுகின்ற அவ்வுதயணனது நான்மருங்கிலும் புடை சூழ்ந்து சென்றனர். சிதேவியும் பூமிதேவியும் அன்போடு அன்னனைப் பின்பற்றிச் செல்லுதல்போல, வாசவதத்தையும் பத்மாவதியும் பிடியானையை யிவர்ந்து அவ்வுதயண னைப் பின்தொடர்ந்து சென்றனர்.

அங்ஙனம் உதயணன் பயணமாகச் செல்லுகையில், அவனது நால்வகைச் சேனையுள், தேர்கள் வீரர்களையேந்தி விரைந்துசென்றன; மதக்களிறுகள் கர்ச்சித்துச் சென்றன; வலியுள்ள பரிமாக்கள் கனைத்துச் சென்றன; வீரர்கள் ஆரவாரித்துச் சென்றனர். அப்படைகளால் எழும்பிய

தூளி வானுலகத்தை நிலவுலக மாக்கியது ; வந்தியர் புகழ்ந்தனர் ; பல்லியங்கள் முழங்கின. உதயணமன்னவன் இவ்வாறு பயணமாகிச் சின்னாட்களிற் கௌசாம்பிநகலரச் சார்ந்தான்.

அப்போழ்து அந்நகரமாந்தர் எங்கும் தோரணங்களாலும் துவசங்களாலும் பதாகைகளாலும் அலங்கரித்திருந்தனர் ; வீதியெங்கும் பனிநீர்தெளித்துத் தூளியை யடக்கி மலர்ப்பலிகளால் அணிந்தனர் ; புறம்பே சென்றிருந்த தமது மன்னவன் திருமணக்கோலத்தோடு நகரிற் புகுவது கருதிப் பெருங்களிப்பினால் ஆர்ப்பரித்தனர் ; தமது மாளிகைவாயில்கள் தோறும் பூர்ண கும்பங்களைப் பூரித்து வைத்து, தோரணங்களையும் மாலைகளையும் நாற்றினர் ; அப்போது அகில் சந்தனம் முதலியவற்றின் நறும்புகைகள் திசையெட்டும் கமகமவென்று கமழ்ந்து வீசின. பல சொல்லி யென் ? நகரத்திற்கே ஒருபெருஞ் சோபை யுதித்தது.

அரசன் நகரிற் புகுகையில் நகரமாந்தர் அவன்மீது மலர்மழை பொழிந்தனர். மாளிகைகளின் உபரிகை யெங்கும், மன்னவனைக் காண விரும்பிய மடவாரது முகங்கள் திகழ்ந்தன. வாழ்த்தொலி எங்கும் பரம்பியது. பல்வகை வாச்சியங்களும் பேரொலிசெய்தன. உபரிகையிலேறிய மாதர்கள் தமது கண்ணிமைகளைக் கொட்டாது பார்த்தலால் விமானத்தி லேறி நிற்கும் அச்சரமங்கையர் போன்றனர்.

அப்போது, வாசவதத்தை கனலி லெரிந்திட்டனளென்று செவியுற்றிருந்த சிலர், அரசன்பின் செல்லும் வாசவதத்தையைக் கண்டு, 'தீக்கடவுள் இவள்திறத்துத் தீமையிழைத்திருப்பின், இந்த உலகம் பகலிலும் இருளிலழுந்திவிடுமே !' என்று வாசவதத்தையினிடத்து அன்பு

கொண்டவர் போலக் கூறினர். மற்றுஞ் சிலர், 'ஈது என்ன புதுமை! வாசவதத்தை தனது சபத்தினியிடத்துச் சிறிதும் மாற்றாண்மை பாராட்டாது தோழிபோல இருக்கின்றனளே! ஈது என்ன வியப்பு!!' என்று பாராட்டிக் கூறினர். பத்மாவதியின் அழகைக் கண்ணுற்ற வேறுசிலர், 'இவளது நல்லுருவத்தைக் கண்டும், வாசவதத்தை நாணமேனும் பொறாமையேனுங் கொள்ளாது நட்புப் பூண்டொழுகுகின்றாளே! இது கடவுளின் நற்செயலே' என்றனர். மற்றுஞ் சிலர், 'இவர்களது வடிவழகைத் திருமாலாவது சிவபிரானாவது கண்ணுற்றிலர்; இது தேற்றம்; அல்லாக்கால், திருமகளையும் உமாதேவியையும் அன்னார் எவ்வாறு பத்தினியராகக் கொள்வார்?' என்றனர்.

நகரமாந்தர் இங்ஙனம் உரைக்க, மங்கைமார் மங்கலங்களைச் செய்ய, நகரத்தவரின் கட்புலனுக்குத் திருவிழா வுண்டாகுமாறு, உதயணமன்னவன் தனது மனைவியரோடும் தன்னரண்மனையிற் புகுந்தான். உதயணமன்னவன் புகுந்ததும், சூரியோதய காலத்துத் தாமரையோடை போலவும், சந்திரோதயகாலத்துச் சாகரம் போலவும் அவ்வரண்மனை விளங்கிற்று; அன்றியும், மற்றைப்பூபாலர் கொணரப்போகின்ற உபாயனங்களை முன்னர்க் குறிப்பிப்பதுபோன்று ஸாமந்தர் கொணர்ந்து வைத்த பாகுடங்களால் ஒருகொடிப்பொழுதில் நிரம்பி விளங்கலாயிற்று. திருவிழா முற்றியதனால், உதயண மன்னவன் உடன்வந்த அரசர்களை உபசரித்து வழிவிட்டு, நகரமாந்தர் அகங்குளிரத் தன்னரண்மனையில் எஞ்சியபொழுதையும் போக்கினன்.

மறுநாள் பொழுதுபுலர்ந்ததும், உதயணமன்னவன் தனது காலைக்கடனை முற்றி, அத்தாணிமண்டபத்தில் மந்தி

ரியருடன் வீற்றிருக்கையில், அந்தணனொருவன் புறங்கடையில் சென்று முறையிட்டான். வாயில்காவலர் அதனை அரையனுக்கு அறிவிக்க, அரையன் அப்பனவனை உள்ளே யழைத்து வினவினன்.

**அந்தணன்:—**'அரசர் குலதிலகமே! பாதகராகிய ஆய்ச்சிறுவர்கள் அடவியிற் சென்றுகொண்டிருந்த என் புதல்வனது தாளைக் காரணமின்றி வெட்டி வீழ்த்தினர்; இது முறையோ' என்று ஓலமிட்டான்.

மன்னவன் அந்தணனைத்தேற்றி முறைக்கேட்டையாராய்வதாக உறுதிகூறி, சிலபணியாளரைக் கூவி அப்பொதுவர் புதல்வரைப் பற்றிக் கொணருமாறு கட்டளையிட்டனன்.

பணியாளர் அம்மக்களில் இரண்டுமூன்று பேர்களைப் பற்றிக்கொணர, உதயணமன்னவன் அவர்களை வினவினன். அதற்கு, அன்னார், 'மன்னவரே! இடைச்சிறுவராகிய நாங்கள் ஆள்வழக்கற்ற கானகத்தில் ஒன்றுகூடி விளையாடுகின்றோம். எம்மில் தேவசேனனென்னும் பெயர்பூண்ட ஒருத்தன் இருக்கின்றான். அவன் அடவியின் ஒருசார் ஒரு பெருங்கல்வட்டத்தின் மீது இருந்து, 'யான் நுமக்கு அரசன்' என்று சொல்லி எங்களைத் தன்னாணைக்கு உட்படுத்துகின்றான். நாங்கள் அன்னானுக்கு அஞ்சி அவனது ஆணையை மீறுவதில்லை; இவ்வாறு, அவ்வாய்ச்சிறுவன் அரணியத்தில் அரசுபுரிகின்றான். இப்பொழுது இவ்வந்தணனது புதல்வன் அவ்வழியே செல்பவன் கானகத்திற்கு இறைவனாகிய அக்கோவலனைப் பணியாது சென்றான். நாங்கள் மன்னவன் பணியினால், எம்மிறைவனைப்பணியாது செல்லற்க வென்று அந்தப் பார்ப்பனச் சிறுவற்கு உணர்த்தினோம். உணர்த்தியும் அப்பாலகன் எம்முறையை இகழ்ந்து

சென்றனன். செல்லவே, எம்வேந்தன் முனிந்து அச்சிறுவனுக்குத் தண்டனையாக அவனது தாளைச் சேதிக்குமாறு எமக்குக் கட்டளையிந்தனன். நாங்கள் மன்னவன் மொழிப்படியே பார்ப்பனச்சிறுவனைத் துரத்திச்சென்று பற்றி, அவனதுதாளை வெட்டினோம். எம்போலியரால் பிரபுக்களது கட்டளையை மீறுதற்கு இயலாதன்றோ!' என்று பணிந்து உரைத்தனர்.

இவ்வண்ணம் பொதுவர்சிறுவர் விண்ணப்பிக்கவும், யௌகந்தராயணன், தன்னறிவாற்றலால் ஆராய்ந்து, மன்னவனை மறைவில் அணுகி 'அரசே! இடைச்சிறுவனும் அரசுசெலுத்தும் ஆற்றல் படைத்தலால் அங்குப் பெருநிதியம் முதலியவை இருக்கவேண்டும்; அதனால்தான் அவனுக்கு அவ்வாறாய வல்லமை யுண்டாயிற்று. ஆதலின், ஆங்குச்சென்று நாடி யறியவேண்டும்' என்றனன். அமைச்சன் இவ்வண்ணம் கூறவே, உதயணமன்னவன் ஆய்ச்சிறுவரை முன்னர்ச் செல்லச்சொல்லி, தானை புடைசூழ, தன் பரிசனங்களுடன் அக்கானகம் நோக்கி நடந்தான். அரணியத்தைச் சார்ந்ததும், அவ்விடத்தைப் பணியாளரைக் கொண்டு அகழ்ந்துபார்த்தான்: அகழ்ந்த நிலத்தினின்று பருப்பதம் போன்ற பெருவடிவினனாக ஓரியக்கன் அவண் தோன்றி, அரையனை விளித்து, 'வேந்தே! உமது முதாதை சேமித்துவைத்த நிதியமாகும் இது: இதனைப் பன்னாளாகப் பாதுகாத்து வருகின்றேன். இதனை ஏற்க வேண்டும்' என்றுகூறி, மன்னவனது பூசையை ஏற்றுப் பின்னர் அந்தர்த்தானமாயினன். தோண்டிய அப்பள்ளத்தில் பெருநிதியத்தோடு ரத்னகசிதமான சிங்காதனமொன்றும் தோன்றிற்று: ஆகூழில் நன்மைகள் மேன்மேலும் நேர்வது இயல்பேயன்றோ! உதயணமன்னவன் கிடைத்த நிதியம் முழுவ

தையுந் திரட்டி யெடுத்துக்கொண்டு, அவ்விடையர்கட்கு இனி ஒரு தீத்தொழிலும் செய்யாதிருக்க உறுதியாகக் கட்டளையிட்டுத் தன்னகர்க்கு மீண்டனன்.

ஆங்குநின்றுங்கொணர்ந்த பதுமராகக்கற்களின் செங்கதிர், இனிக் காட்டப் போகின்ற உதயணமன்னவனது பிரதாபம் போன்று திசையெட்டும் ஒளிவீசிற்று; முத்துக்களின் வெள்ளொளி யௌகந்தராயணனது திறத்தைப் பூமிதேவி கண்டு வியந்து வெண்முறுவல் பூப்பதுபோன்று விளங்கிற்று. அரசன்கொணர்ந்த அரதனசிங்காதனத்தைக் கண்டநகரமாந்தரனைவரும் வியப்புக்கடலில் மூழ்கினர்; மன்னவனுக்கு வெற்றி நேர்வது திண்ணமென்று உறுதிகொண்ட உழையரும் களிப்புக்கடலில் ஆழ்ந்தனர். ஒரு காரியந் தொடங்க உறுதி கொண்டிருக்கையில் மங்கலம் நேர்வது, எடுத்த தொழில் இனிது முடியு மென்பதற்கு ஓர் நன்னிமித்த மாகு மன்றோ! அப்போது உதயணமன்னவனுகிய கொண்டல், வானத்துப் பதாகையென்னும் மின்னுக்கள் தோன்றப் பணியாளரிடத்துக் கனகமழை பொழிந்தது.

---

## பதினோராவது அத்தியாயம்:

## உதயணமன்னவன் ஈசனருள் பெறுதல்.

இவ்வண்ணம் அந்நாள்கள் பெருமகிழ்ச்சியோடு கழிய, யௌகந்தராயணன், வற்சராசனது உள்ளக்கருத்தை யுணருமாறு, 'அரசே! வழிவழியாகவந்த சீரியசிங்காதனத்து வீற்றிருந்து அரசுமுறை நடாத்துக' என்று வேண்டினன்.

அரசன்:—'எனது முன்னோர் நிலவுலக முழுவதையும் தமது தோள்வலியால் வென்று தம்மடிக்கீழ்ப் படுத்தியபின்னரே இச்சிங்காதனத்தில் ஏறி வீற்றிருந்தனர். இவ்வண்

ணம் முன்னர் நிகழ்ந்திருக்க, இப்புவியை வென்றிடாமல் யான் இதன்மீது ஏறியிருத்தலில் எனக்கு என்ன புகழ் ? கடலை யாடையாகக்கொண்ட இந்நிலவுலகம் முழுவதையும் வென்றபிறகுதான் யான் இந்தச்சீரிய சிங்காதனத்தில் ஏறுவேன்' என்று திடமாகக் கூறினனே யன்றி, அச்சிங்காதனத்து அப்போது ஏறியிருக்கத் துணிந்திலன். குடிப்பிறப்பாளர் அபிமானத்தோடு ஒழுகுதல் இயற்கையே யன்றோ?

யௌகந்தராயணன் :—(அதுகேட்டு மனமகிழ்ந்து), வேந்தே ! ஆயின், முன்னர்க் குணதிசையை நோக்கிப் போர்க்கு எழுக.'

உதயணமன்னவன்:—'வடதிசை முதலிய திசைகளிருக்கக் கொற்றவர் குணதிசையைநோக்கிப் பொர எழுதல் யாதுகாரணம்பற்றி ?'

யௌகந்தராயணன் :—'வடதிசையானது செழிப்புமிக்குள்ள தாயினும், மிலேச்சர் நிறைந்திருப்பதாற் பழி பூண்டது. குடதிசை பகலவன் அத்தமித்தற்கு இடனாதல் பற்றிச் சிறப்பற்றதாம் ; தென்திசையோ அரக்கர்களை மிகுதியாகப் பெற்றிருப்பதோடு கூற்றுவனுக்கு வாழிடமாகவு மிருத்தலாற் கொடியதாம். ஆகலான், மன்னவர் அத்திசைகளில் முந்துறச் செல்லார். குணதிசையோ-சூரியன் உதயமாதற்கு இடனாயது : தேவர்கட்கெல்லாந் தலைவனான இந்திரனே இத்திசையில் திக்பாலகனாக வீற்றிருக்கின்றான் : திருமாலின் திருவடித்தாமரையினின்று தோன்றிய கங்காநதி இத்திசைமுகமாகச் செல்கின்றது. இவ்வாறு பலபடியாலும் குணதிசை மேம்பாடுற்றது. இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடைப்பட்ட தேசமாகிய ஆரியாவர்த்தத்திலும் கங்காநதி பாயப்பெற்ற தலமே மேம்பாடுடையது ; ஆகவே, மங்கலத்தை நாடும் மன்னவர் பிரத-

மத்தில் குணதிசை நோக்கியே சமர்செய்ய எழுகின்றனர்:— அன்றியும், சுரநீர்க்கு அருகிலுள்ள நாட்டைத் தம் வாழிடமாகவும் கொள்கின்றனர். நம்குலத்துமுன்னோரும் குணதிசை தொடங்கியே திக்விஜயஞ் செய்தனர்; கங்காநதிக்கு அருகிலுள்ள ஹஸ்திநபுரத்தைத் தம்வாழிடமாகவும் கொண்டனர். சதாநீகமன்னவரோ, அரசு வெற்றியினால் நிலைநிற்பதென்றும் நாடு அதற்குக் காரண மாகாதென்றுங் கருதி, இனிதாயிருப்பதுபற்றிக் கௌசாம்பிநகரில் வாழலாயினர்.'

உதயணமன்னவன் :—' ஆம்; செல்வத்தைப் பெறுதற்குத் தேசம் காரணமாகாது; ஆண்மை காரண மென்பதே தேற்றம்'.

யௌகந்தராயணன்:—' வேந்தே! நமக்கு ஆண்மையும் மிக்கிருக்கின்றது; கடவுளினருளும் நிரம்பியுள்ளது; அரசநீதியிற் பயின்று சிறிதுதேர்ந்த நாங்களும் நமக்குத் துணைவராகநிற்கின்றோம்: ஆதலின், முன்னர்ச் சிந்தித்ததொழிலாகிய திக்விசயத்தை விரைந்து புரியத்தொடங்கும்.'

உதயணமன்னவன்:—' நீர் சொல்வது தக்கதே; ஆயினும், நற்றொழில்கள் எஞ்ஞான்றும் பல இடையூறுகளைக் கொண்டனவாம்; ஆதலின், அவ்வாறு இடையூறுநேராவண்ணம் முதலில் சங்கரக்கடவுளைத் தவத்தினால் ஆராதிக்கப்போகின்றேன். கடவுளின் அருளில்லாமல் எண்ணியகருமம் இனிதுமுடியுமோ?' என்றான்.

அவ்வாறு மொழிந்த மன்னவன்மொழிக்கு மந்திரிமாரும் இசைந்தனர். அப்பால், உதயணமன்னவன் மூன்றிரவு உண்ணாநோன்பு மேற்கொண்டு சங்கரக்கடவுளைத் தியானித்திருந்தான். அவனதுகனவிலே முக்கட்

கடவுள் தோன்றி, 'உனது செயலுக்கு மனமுவந்தனம்; ஆதலால், இனி எழுக. இடையூறில்லாமல் வெற்றியடைவாய் அன்றியும், விஞ்சையர்குழுவுக்கெல்லாம் சக்கரவர்த்தியாகும் புதல்வனையும் விரைவிற் பெறுவாய்' என்று அருளிப் போயினர்.

கடவுளினருள் பெற்றதாற் பட்டினிகிடந்த மெலிவும் மன்னற்கு நீங்கிற்று. பொழுது புலர்ந்ததும், உழையர்க்கும், உண்ணு நோன்பைத் தன்னோடு மேற்கொண்டதனால் வாடி நாண்மலர்போல் மெல்லியலாரான தன்னிரு தேவியர்க்கும், உதயணமன்னவன் அக்கனவை யுரைத்தனன். அவர்கள் அதனால் உவகைக்கடலு ளாழ்ந்தனர். அச்செவியுணவால் மனம் நிறைந்த அத்தேவியர்க்குப் பாரணையென்பது, ஆசாரமாத்திரையாயிற்று.

உதயணமன்னவன் தவத்தினால் தன் முன்னோரது மேன்மையைப் பெற்றான்; அவனது மனைவியரும் கற்புடைமகளிரது புண்ணியப் புகழைப் பெற்றார்கள்.

---

## பன்னிரண்டாவது அத்தியாயம்:

## உதயணமன்னவனது திக்விசயம்.

மறுநாள் பாரணை முற்றிய பிறகு, யௌகந்தராயணன் கொற்றவனை நோக்கி, 'சங்கரக்கடவுள் நமக்குத் திருவருள் புரிந்தன ராதலால், நம்மைப்போலப் பெருப்பேறு பெற்றவர் இந்நிலத்தில் யாவர் உளர்? வேந்தே! நீர் இப்பொழுதே சென்று, மாற்றாரை வென்று, தோள்வலியாற் பெற்ற வீரலட்சுமியைத் தழுவுக. அத்திருமகள், அரசரது மரபில் அன்னாரது வல்லமையினால் தோன்றின் நிலைத்திருக்கின்றாள். தோள்வலியாற் பெற்ற திருமகள், ஒரு

காலும் அழிவுறுவ தில்லை. அன்றியும், இது நமக்கு ஆகூழ்க்காலமென்று தோற்றுகின்றது; நமது முன்னோரது தேட்டமும் அரதனச் சிங்காதனமும் எளிதிற் கிடைத்தனவன்றோ; மேலும், அரசன் தம்மரபிற்கு ஏற்ற முறையால் தேடிய நிதியம் வழிவழியாகப் பெருகும்; நீதி முறையா னன்றி வந்த பொருள் நீர்க்குமிழி போன்று அழிவுறும். ஆகலான், ஆண்மக னெவ்வொருத்தனும் அறநெறியாற் பொருளை ஈட்டுமாறு முயலவேண்டும். மன்னராய்ப்பிறந்தோர்க்கோ அரசமுறையாற் பொருளை யீட்டி வைத்தல் இன்றியமையாத கடமையாகும். அரசு நிலைத்து நிற்றற்குப் பொருளே பெருஞ்சாதன மன்றோ! ஆகவே, திக்விசயஞ்செய்து அறநெறியாற் பொருளைத் தேடுக மாமன்மா ரிருவ ரிருத்தலால், அவர்களது சுற்றத்தார்க்குச் சுற்றத்தார்களாக அரசவமிசத்திற் பலர் நம்மோடு மாற்றுண்மை காட்டாது நண்புரிமைபூண்டு நமக்கு உதவ வருவர். வாராணசியில் வாழ்கின்ற பிரமதத்த னென்ற வேந்தன் எக்காலும் நம்மோடு மாறுபாடு கொண்டு நடக்கின்றன னாதலால், அன்னன்மீது முதன்முதலிற் படையெடுத்துச் செல்லலாம். அவனை வென்றதும் கீட்டிசைமுதலாக எல்லாத்திசைகளிலுஞ் சென்று முறையாகப் பகைஞரை வெல்லலாம். இவ்வாறு பகைஞரையெல்லாம் வென்று இசையை இப்புவிமிசை முற்றும் பரப்புக' என்றான்.

உழையரிற் சிறந்தோனான யௌகந்தராயணன் இன்னணம் உரைக்கவும், உதயணமன்னவன் அவனுரைக்கு உடன்பட்டு, அமைச்சர் முதலிய பிரகிருதிகளைப் போர்க்கு எழுமாறு கட்டளையிட்டான். போர்த்துணையாகத் தன்னுடன் வரும் மைத்துனனான கோபாலகனுக்கு வைதேஹ ராஜ்யத்தில் இறைமையையும், பத்மாவதியி னுடன்பிறந்

தோனை சிங்கவர்மாவுக்குச் சேதிதேசத்துக்குத் தலைமையையும் அளித்து, அவ்விருவரையும் மேம்படுத்தினன். அன்றியும், வேட்டுவர் தலைவனான புளிந்தகனையும் போர்க்குத் துணைவருமாறு அழைத்துக்கொண்டான். அந்நாட்டில்,போர்க்கு எழுவதைப்பற்றிய பரபரப்புத்தோன்றவே, அவனுடையமாற்றாரது மனத்திற் கலக்க முண்டாயிற்று. அப்பொழுது, யௌகந்தராயணன் பிரமதத்தமன்னவனது செயலை உணருமாறு வாரணசிக்கு ஒற்றர்களையேவினன்.

அப்பால், நன்னாளில் நன்முகூர்த்தத்தில் உதயண மன்னவன் போர்க்குப் புறப்பட்டனன்; வெற்றிக்கு முற்குறியாக நன்னிமித்தங்கள் பலவுந் தோன்றின: உதயண மன்னவன், உத்துங்கமான வெற்றிக்களிற்றின்மீதுஏறி, வெண்கொற்றக்குடை நிழற்ற வெண்சாமரை யிரட்ட, முதன்முதலில் கீழ்த்திசையில் பிரமதத்தமன்னவனை வெல்லுமாறு பேருவகையோடும் 'பருவ மல்லாப் பருவத்திற் கொண்டலில்லா திருக்கவும் கார்ப்பருவந் தோன்றிற்றே!' என்று மக்கட்டொகுதி ஐயுறுமாறு பேரொலி கொண்ட வாகினிகளாற் புவியிடம் முற்றிலும் நிரம்பப் பயணமாகிச் சென்றனன். அக்காலம்—செல்லும் வழிகளிற் சேறின்றியும், நதிகளில் நீர்ப்பெருக்குச் சிறிதுகுறைந்தும், வானம் கார்க்கொண்டலின்தொகுதிநீங்கப்பெற்றும்இருக்கின்ற கூதிர்ப்பருவ மாகும்.

அப்பொழுது,படைக்குழாத்தின் பேரொலியாலெழுந்த பிரதித்தொனியானது, உதயணமன்னவன் நம்மீதுவந்திடுகின்றானே யென்று திசைகள் ஒன்றையொன்று நோக்கித் தம்து அச்சத்தை வெளியிடுவது போலும். உதயண மன்னவனுக்குப் புரிந்த ஈராஜகத்திற் சிந்தை யுவந்த அங்கியங்கடவுள் பின்தொடர்வது போன்று, பைம்பொற்கல்

லணையாற் செந்நிறமாகத் துலங்குகின்ற பாய்மாக்கள் கனைத்தவண்ணம் தாவிச்சென்றன; உதயணமன்னவனிடத்து அச்சத்தால், சரத்காலத்து வெள்ளிய மேகங்கள் தங்கப்பெற்றும் காவிக்கல்லிற்பட்டு வருகின்ற அருவி சொரியப் பெற்றுமுள்ள தமது குழவிகளைப் பருப்பதங்கள் போர்க்கு உதவியதுபோல், வெண்டாமரைகளைச் செவியிடங்களில் தாங்கியும் சிந்தூரச் செம்பொடியைக் கரைத்துக்கொண்டு கன்னமதம் ஒழுகப்பெற்றுமுள்ள குஞ்சரங்கள் கர்ச்சித்துக்கொண்டு சென்றன. இம்மன்னவன் மற்றையோரது ஒளியைப் பொறானென்று தெரிவிப்பதுபோல், ஆதவனதுகதிர்களை மறைக்குமாறு தூசிகள் வானத்தி லெழுந்தன. 'இம்மன்னவனை வணங்கி உயிர் தப்புமின்; அன்றி, கானகத்தில் ஓடி ஒளிந்திடுமின்' என்று கூறுவதுபோலப்பதாகைக்கொடிகள்பவனவேகத்தால் இங்கும் அங்கும் அசைந்தன. உதயணமன்னவனே, அரசர்பலரும் புடைசூழ்ந்துவர,பெருஞ்சேனையோடு,நீர்நிலைகளில் வெண்டாமரை மலர்ந்திருப்பதையும், யாறுகளில் தெளிந்தவெள்ளருவிகள் ஓடுவதையும், வயற்புறங்களிற் பச்சைப்பசேரென்று பயிர்கள் செழித்தோங்கி வளர்ந்திருப்பதையும் கண்ணுற்றுக்கொண்டு சென்றான்.

உதயணமன்னவன் செல்லுகையில், யௌகந்தராயணன் ஏவிய ஒற்றர்கள் காபாலிகவிரதம் பூண்டு வாராணசியைச் சார்ந்தனர். அவர்களில்கரவடத்திற்றேர்ந்தஒருவன், தான் ஞானியென்று பேரிட்டுக்கொண்டு ஆசானக, மற்றையோர் அன்னானுக்கு மாணவகராயினர். அவ்வாசான் இங்கும் அங்கும் பிச்சையெடுத்து உண்ணலாயினன். அவனது மாணவர்கள் 'எம்மாசிரியர் முக்காலமும் உணரும் மூதறிவாளர்' என்று தமதுகுருவைப்பற்றி எங்கும் பெய

ரெழுப்பினர். தன்னை யணுகிக் கேட்பவர்க்கு, குரு 'இன்று இங்கு அனல் கொளுந்தும்; இன்று இங்குக்கொள்ளை நேரும்' என்று வருங்காலத்து நிகழ்வனவாக எவற்றைச் சாற்றுகின்றனரோ, அவற்றை அங்ஙனமே மாணவர் பிறரறியாவண்ணம் நிகழ்த்திவந்தனர். அதனால், அந்தஞானியின்பெயர் எங்கும் பரவுவதாயிற்று. அரசர்வமிசத்து உதித்து மன்னவனது அன்பிற்குப் பாத்திரனான ஒருத்தன் தனது அற்பத்தொழில் ஞானிகூறியவண்ணமே நிறைவேறியதால்,ஞானியின் வலையிலகப்பட்டான்; அந்தஞானி அன்னானைத் தனக்கு அந்தரங்கன்போலஉரிமையாக்கிக்கொண்டான். அவ்வரசிளங்குமரன்முகமாக, உதயணனிடத்து மாற்றுண்மையால் பிரமதத்தமன்னவன் அவனை வெல்லுமாறுபுரியுஞ்செயல்களை யெல்லாம்உணர்ந்துகொண்டான்.

அப்பொழுது,பிரமதத்தனது அமாத்தியனாகிய யோககரண்டகன் உதயணமன்னவனது மற்றைச் சார்களையுணர்ந்து அவர்கட்கு,நஞ்சூட்டுதல் முதலிய செயல்களால் விபத்தை யுண்டாக்கினான்; அன்றியும், உதயணமன்னவன் வரும் மார்க்கத்திலுள்ள மரம் செடி கொடி நீர்நிலைமுதலியவற்றையும் நஞ்சினாற் கெடுத்தும் படைத்திரளைமாய்க்குமாறு விஷகன்னிகளை எவியும், படைவீரர்களது வீரத்தைக் குறைக்குமாறு விலைமாதரை யனுப்பியும், ஏதேனும் வியாஜத்தினாற் சேனையிற் சார்ந்து இராக்காலத்திலுட்புகுந்து கொல்லுமாறு ஆள்களையனுப்பியும் இங்ஙனம் மறைவிற் பலவாறாக வற்சராசனது வல்லமையைத் தடுக்க முயன்றிருந்தனன்.

ஞானியென்று மாற்றுருவம் பூண்ட சாரன்,அவற்றையெல்லாம் உணர்ந்து தனக்குத் துணையாகப் போந்த மாணவர் மூலமாக, முன்னரே யௌகந்தராயணனுக்கு அறிவித்

தனன். அவற்றை யெல்லாம் உணர்ந்த யௌகந்தராயணன் வழியிடையிலுள்ள மரஞ்செடி கொடி நீர்நிலைகள் நஞ்சினூற் கேடுண்டிருப்பவற்றை மாற்றுப்பொருள்கொண்டு மாற்றி னன்; பாசறையில், வேற்றுமங்கையர் நாடாதவாறு புரிந்த னன்; ருமண்வானுடன் பார்த்திருந்து, இரவிற் கரந்து புகுந்து கொலைபுரியுந் தீயரை நாடிப் பிடித்துக் கொன்ற னன். விஷகன்னிகைகளை வெருட்டுவதற்குத் தன் வல்ல மையால் மாற்றுவிஷகன்னிகைகளைப் படைத்து அவர் களின் மீது ஏவினன்.

தன்னமைச்சன் செய்திருந்த தந்திரங்கள் யாவும் பழுது பட்டுப் போயதைக் கண்ட பிரமதத்தன், திசைமுழுதும் நிரம்பிய தானைத்திரளுடன் வற்சராசன் போர்க்குநெருங்கி வரவும், உழையரோடு ஆராய்ந்து, அன்னானை வெல்வது அருமையென்று அறுதியிட்டுத் தான் சிரமேற்கைகுவித்து வணங்குவதாகத் தூதுவன் முகமாகச் செய்தி யறிவித்து, அவ்வுதயணன் தன்னருகிற் சார்ந்தவுடனே தானே நேரிற் சென்று முடிமேற்கைகுவித்து உபாயந மீந்து நின்றனன். அவ்வாறு பிரமதத்தமன்னவன் வணங்கிநின்றதைக் காண வே, உதயணமன்னவன், அகமகிழ்ச்சியோடு அன்னானை வரவேற்றுச் சம்மானித்தனன். பணிந்தார்மாட்டுச் சீற்றம் புரிதல் கீழ்மக்கள் செயலாகு மன்றோ!

பிரமதத்தன் பணிந்திட்ட பின்பு, உதயணமன் னவன், அக்கீழ்த்திசையில் மென்மையை யுடைய மன் னவரைப் பணிவித்தும், வன்மையை யுடைய மன்ன வரை வேரோடு பறித்தும் இவ்வண்ணமாக முற் றிலும் வென்று, வங்கநாட்டாரை வென்றிட்டதால் அஞ்சி நடுங்குவது போன்று அலைவீசுங் கீழைக்கடலைச் சார்ந்து, அதன் கரையில் வெற்றித்தம்பத்தை நாட்டினன். கலிங்க

நாட்டார் உதயணமன்னவன் போர்க்குஎழுவதைச் செவியேற்று, எதிர்கொண்டு திறைப்பொருள் இறுக்கவே, அம் மன்னவனது புகழ்மயேந்திரப்பருப்பதத்தின்மீதுஏறியது.

கீழ்த்திசையிலுள்ள காவலர் யாவரையும் வென்ற பிறகு, உதயணன், மயேந்திரமலைகாறும் வென்றிட்டதனால் வெருவிய விந்தமலைச்சிகரம்போற் பெருந்தோற்றங் கொண்ட யானைக்குழுவோடு அகத்தியமுனிவர் வாழுந் தென்திசையின்கட்சென்றான். அங்குப் பருப்பதத்தில் வாழும் பகை மன்னவர், முகம் விளர்த்துக் குரலொடுங்கிப் பணிந்தனர். உதயணமன்னவன், தனது தானையுடன் காவிரிநதியைக் கடந்ததால், அந்த நதியும் கலங்கிற்று; அங்கு வாழுஞ் சோழவேந்தனது நெஞ்சமும் கலங்கிற்று. பாண்டியரையும் வென்ற பின்னர், உதயணமன்னவன், முரலரென்ற நாட்டார் செருக்கினால் தலையெடுப்போடிருந்ததனால், அவர்களையும் தன்தோள்வலியால்வென்று, நாணத்தினால்தலைகவிழச்செய்தான். பின்பு, அவனது மாதங்கங்கள் கோதாவரிநதியை யணுகி ஏழுகிளையாகப் பிரியும் அதன் புனலைப்பருகியதனால் எழுதலத்தினின்று மதநீரைச்சொரிவதுபோன்று மதநீரைப் பொழிந்தன.

அப்பால் வற்சராசன் ரேவாநதியைக்கடந்து, சண்டமகாசேனராசன் வரவேற்க உச்சயினிநகரைச் சிறப்பாகச் சேர்ந்தான். அவன், நகரத்திற்புகுகையில், அப்பத்தநத்து மங்கையர் விரைந்துவந்த வேகத்தால் தமது கூந்தல் அவிழ்ந்து முன்னையினும் இருமடங்கு அழகுசெய்யுமாறு நிற்க, ஒருகொடிப்போது அன்னார் கண்ணுக்குக் காட்சி கொடுத்தனன். பின்பு, உதயணன், தன்னாட்டில் தான் விரும்பிநுகரும் போகங்களையும் மறக்குமாறு தனது மாமன் உபசரிக்க, மகிழ்ச்சிக்கடலுள் ஆழ்ந்திருந்தனன்.

தன்தாதையருகில் வாழுமவளாய், வாசவதத்தையும், பாலப்பிராயத்தில் தான் நுகர்ந்த இன்பத்தினிடத்துவிருப் புக்கொண்டவள்போ லாயினுள். சண்டமகாசேனராசன் தன் மங்கையாகிய வாசவதத்தையினிடத்து எத்துணை யன்பு காட்டினனோ, அத்துணையன்பைப் பத்மாவதியினிட மும் காட்டினன்.

சிலநாள் அங்கு இளைப்பாறியிருந்து, உதயணமன்ன வன், மேற்றிசை நோக்கிப் பயணமாயினன். அங்கு லாட நகரத்து மங்கையர் உதயணமன்னவனது கூரிய வாளத் தைக் கண்டதும் கண்களில் நீரைக் கான்றதனுல், அவனு டைய அக்கூர்வாளானது மாற்றார்க்குப் புகையே யாகும். அந்த வற்சராசனது களிறுகளால் அசைக்கப்பெற்றதனுல் மந்தரமலைக்காடுகள் அசைவது, பாற்கடலைக் கடையுமாறு 'என்னை மீண்டும் வேரோடு பறித்து எடுக்கவேண்டா' என்று இரப்பது போன்றது. அவ்வுதயணன் தினகரன் முதலிய சுடர்களினும் வேறுபட்ட கதிரவ னுவான்; வெற் றியோடுபொலியும் அவன், மேற்குத்திசையில் வெகு சிறப் போடு உதயமாயின னன்றோ!

அப்பால், உதயணன் வெள்ளிமயமான கைலாயமலை யைத் தன்னிடத்து உடைமையால் மற்றைத்திசைகளை நோக்கி நகுவதுபோன்று செல்வச்சிறப்பு வாய்ந்த கௌ பேரதிசையைச்சார்ந்தான். அங்கு, சிந்துபூபதியைவென்று, மிலேச்சர்களையெல்லாம் தன் வல்லமையாற் பொடி படுத்தி, பாரசிகத்தைச் சார்ந்து, அம்மன்னவனது முடி யை யறுத்து வீழ்த்தினுன். அவ்வுதயணனது புகழ் வெள்ளம் மற்றொரு கங்காநதிபோல் அங்குப் பெருக லாயிற்று. அச்சத்தாற் பகைவரை நடுநடுங்குவித்த உத யணமன்னவனது தானை, பெருமகிழ்ச்சியோடு பேரார

வாரஞ் செய்யும்போது மலைமுழைஞ்சுகளில் மாத்திரம் மாருக எதிரொலியெழும்பிற்று. அங்குள்ள காமரூப மன்னவன், போர்செய்ய மனமின்றித் தன் முடிமீது குடைநிழற்றப்பெருமல் உதயணமன்னவனைச் சார்ந்து அவனது தாள்களிற் பணிந்து, வேழத்திரள்களைத் திறைப் பொருளாகத் தந்து முகந்துன்றி நின்ருன்.

இவ்வண்ணம் உதயணமகாராசன் தனதுபரிவாரங்களுடன் புறப்பட்டுச் சென்று, புவிமுழுவதையும் வென்று பத்மாவதிதேவியின் தாதையாகிய மகதமன்னவனது புரத்தைச்சார்ந்தனன். அன்றும், தனது மனைவிமாருடன் உதயணசக்கரவர்த்தி தன்தேயத்தை வெற்றியுடனேசார்ந்ததை யுணர்ந்து, உவகைக்கடலு ளாழ்ந்தனன். பேரன்போடு உதயணனிடத்து நெஞ்சை முந்துறப் போக்கிப் பின்னர்த் தானும் நகரமாந்தருடன் வரவேற்றுப் பூசித்தனன். அந்த மகதமன்னவன், சின்ஞள் கரந்து உறைந்து வெளிப்பட்டுத்தோன்றிய வாசவதத்தாதேவியின் மிக்க பணிவினைக் கண்கூடாகக் கண்டறிந்தான். பிறகு, வெற்றிபெற்ற கொற்றவஞன உதயணன், அங்குநின்று புறப்பட்டுச் சென்று சிலநாள் இளைப்பாறுமாறு தன்னூராகிய லாவாணகத்தில் தங்கினன்.

தன் சேனை இளைப்பாறுதற்பொருட்டு லாவாணகத்தைச் சார்ந்ததும், வற்சராசஞனஉதயணன், தன்னமைச்சனை ஏகாந்தமாக அழைத்து அவனை நோக்கி, 'உமது மதிவல்லமையாற் புவிமுற்றிலும் அரசர்யாவரையும் வென்றிட்டோம்; நம்மிடத்துத் தோல்வியுற்ற அம்மன்னவர்களும் நமதுஆணையை மீறி நடப்பதில்லை; வாராணசிக்குத் தலைவஞகிக் கெடுநினைவுடைய பிரமதத்தன் மாத்திரம் நமது ஆணைக்குக் கீழ்ப்படியா னென்று தோற்றுகின்றது;

கேழோரிடத்துக் காட்டும் விசுவாசம் நற்பயனைத் தராதன்றோ!' என்றான்.

யௌகந்தராயணன்:—'அரசே! நமது வல்லமையால் வெருண்டு பணிந்த அன்னவனிடத்து நீர் அவமதிப்புக்காட்டாது ஸத்கரித்தீர்; அறிவுள்ள எவன்தான் நன்மையாக நடக்குமவரிடத்து மாறுபாடுகொள்வன்? ஒருவன் நல்லோரிடத்தும் மாறுபாடு பூண்டு ஒழுகுவானாயின், அது தானே அவனுக்குத் தீமையை யூட்டும். மன்னவரேறே! வென்றபின்பும் தன்திறத்துப் பெருமதிப்புடனே நடத்துகின்றநம்மிடத்து அப்பிரமதத்தன் மாறுபாடுபூண்டொழுகுவானாயின், அவன் தன்வாயில் தானே மண்ணைப்போட்டுக்கொள்ளுகின்றான்; அவனைப்பற்றி நமக்குச் சிறிதும் சிந்தைவேண்டா' என்றான்.

மந்திரியர்முதல்வன் இன்னணம் மொழியவே, உதயணமன்னவன், மனமுவந்து, அவனது மொழியைச் சிலாகித்து, அற்றைநாளைக்கழித்தான்; மறுநாள்பொழுது புலர்ந்ததும், அவ்விடத்தினின்று பயணமாகித் தன் பரிவாரங்களோடு கௌசாம்பிநகரை மெல்லச் சேர்ந்தான். அப்பொழுது பெருமகிழ்ச்சிகொண்டுநகரமாந்தர் உதயணமன்னவனைச் சேவித்துப் பேராரவாரஞ்செய்தனர்; பெரியோர் வாழ்த்தினர்; தூரியங்கள் முழங்கின; வந்தியரும் மாகதரும் இன்னிசை பாடினர்; மன்னவர் பணிந்தனர். இவ்வாறு உதயணமன்னவன் பெருவிபவத்தோடு நகரத்திற்சேர்ந்து தன்னரண்மனைபிற் சென்றான்.

பிறகு, உதயணமன்னவன், கணிகள் குறித்த நன்னாளில் மன்னவரும் மந்திரிமாரும் பெருமகிழ்ச்சியுடன் 'நன்று! நன்று!!' என்று கொண்டாடவும், பல்லியங்கள் திசைகளில் எதிரொலி தோன்றுமாறு துவைக்கவும், அந்

தணர்கள் மறைமொழிகொண்டு வாழ்த்தவும், வாழையடி வாழையாய் வந்த தன் முன்னோரது அரதனச்சிங்காதனத்தின்மீதுஏறி வீற்றிருந்து சக்கரவர்த்திப்பட்டம் பூண்டு, தனது தோள்வலியாற் பெற்ற வெறுக்கையை அந்தணர் வெறுப்புக்கொள்ளுமாறு வாரி வீசி, தன்னமைச்சரையும் மன்னர்களையும் சம்மானித்து, எல்லாத்தேயத்து மன்னவரும் தனக்குக் கீழ்ப்படிந்து குற்றேவல் செய்ய, ஒற்றை வெண்கொற்றக் குடை நிழற்றப் புவிமுழுதும் தனிச்செங்கோல் செலுத்தலானன்.

அம்மன்னவன் செங்கோல் செலுத்துகையில், நாடு எங்கும் மாதம் மும்மாரி பெய்தது; புலங்கள் செழித்துப் பூரணமாகப் பயனளித்தன; பிணி வற்கடம் கள்ளம் என்ற அச்சங்கள் ஒழிந்தன; மறன் குலைந்தது; அறன் ஓங்கிற்று. அவன் தேயத்துக் குடிமக்கள் யாவரும் ஒரு குறைவுமின்றித் தம்மனோரதம் முற்றப் பெருவிழாக் கொண்டனர்.

---

## பதின்மூன்றுவது அத்தியாயம்:

## சிவபிரான் கனவில் அருளல்.

அப்பால், உதயண மன்னவன் தனது தோள்வலியாற் பெற்ற புவியை, யௌகந்தராயணன் ருமண்வானுடன் சேர்ந்து ஆட்சிபுரியுமாறு அப்புவிப்பொறையை வைத்திட்டு, வசந்தகனுடன் விளையாடல்களில் இனிது விநோதிக்கலானன். சிலகால், அன்னன் பத்மாவதிதேவியும் வாசவதத்தாதேவியும் உடனிருக்க, வீணைவாசித்து இன்னிசைச் சுவையை நுகர்வான். சிலகால், அவனது தேவி வாசவதத்தை யாழில் இன்னிசை யெழுப்புவள்; தேவி யாழ்வாசிக்கும்பொழுது அவளது குரலுக்கும் அவ்யாழி

னின்னிசைக்கும் வாசி தோற்றமையால், விரலசைத்தலே யாழ்வாசினையைக் குறிப்பிக்கும். சிலகால், உதயணசக்கரவர்த்தி பசுநிறமுள்ள அங்கிதரித்து வில்லைக் கையிலேந்திப் பலவேட்டுவர் உடன்வர வேட்டமாடக் காட்டகத்திற் செல்வான்; அப்பொழுது,

"குன்றுகுன்றுதொறு நீலமேவிய
குளந்தொறுங் குளிர்வனந்தொறும்
சென்றுசென் றடிதொடர்தடர்ந்து பல
திக்கினஞ்செறி விலங்கெலாங்
கொன்றுகொன்று குவைசெய் தெரித்திடு
கொடுங்க னற்படு கொழுந்தசை
தின்றுதின்று புனலுண்டு வென்றிபுனை
திண்பெரும்படை நடக்குமே."

"இரவினிற்பெரி திருண்டு குன்மழை
யிரண்டு துன்றியுல கெங்கணும்
பரவி யெய்தகணை யெதிர்வ ரும்படி
படர்ந்த முண்டகவி றும்பினுற்
றரவினங்கரடி புலிகள் பன்றிக
ளழுங்குடும்பெலி மடங்கன்மான்
கரவி லுற் றிகனுளுறையுமென் றெயினர்
காடெலாமெரிபரப்புவார்."

"சுட்டசெந்தழலில்வெந்துவெந்துடல்
சுருளும் பற்பலவிலங்கினம்
கட்டுபாசமதுவிட்ட ஞாளிகள்
கடித்திடச் சில கழிந்திடும்
கெட்டழிந்துநிலையற்று மீமிசை
கிளர்ந்தெழுந்து குதிகொண்டுபோய்

*　　　*　　　*

வெருண்டு சிற்சில விழுந்திடும்"

இங்ஙனம் வேட்ட மாடுவதிலும் யாழ்வாசித்தலிலும் மதுப்பருகுவதிலும் மனைவியருடன் இனிது கழித்தலிலும்

உதயணன் தன் வாழ்நாளை விநோதித்திருக்கையில், ஒருகால் நாரதமுனிவர் அங்குத் தோன்றினர். தோன்றியதும், அரசன் இருக்கையெழுந்து எதிர்கொண்டு பணிந்து போற்றி ஆதித்தியஞ் செய்ய, அம்முனிவரும் அதனைப் பெற்று உவகை மீக்கூர்ந்து ஒருநொடிப்பொழுது வாளாவிருந்து, பின்னர் 'மன்னர்மன்ன! யான் நினது முன்னோர்களிடத்துக் கொண்டுள்ள விசுவாசத்தினல், உனக்குமெப்போழ்தும் நன்மையையே நாடுவேன். ஆதலால், நினக்கு இதமொன்றைக் கூறுவேன்: நினது முன்னோரிற் சேர்ந்த பாண்டு வேட்டமாடி முனிவன்சாபத்தால் இறுதியையெய்தினனன்றே! ஆதலின், பயனற்ற சுவையையுடைய இவ்வேட்டத்தைத் தவிர்தல்நலம்; இவ்வேட்டத்தால்விபத்தையடைந்தவர்பலர்; மேலும், காட்டுவிலங்குகளைக் கொல்கையில், உயிர்க்கே ஏதம் வருதலு முண்டு. இவ்வண்ணம் நன்மை பயவாத வேட்டத்தை யொழிக, இனி, சிவபிரானது பேரருளால் உன னுதரத்திற் காமதேவனது அமிசமாய் ஒரு மகன் உதிப்பான்; தேவமாதினது அமிசமான வாசவதத்தை சிவபிரானை வழிபட அப்பிரானருளால் தோன்றும் அப்புதல்வன், விஞ்சையர் சக்கரவர்த்தியாவான்' என்று அருளிப் போயினர்.

பிறகு, உதயணநிருபன், தேவி வாசவதத்தையை அணுகி, 'சிவபிரானை ஆராதிக்க, அப்பிரானருளாலே புத்திரஸந்தானம் உண்டாகு மென்று நாரதமுனிவர் அருளியிருக்கின்றார். ஆதலால், அச்சிவபிரானை இப்பொழுது நாம் பூசித்தல் வேண்டும்' என்றான். தன்கொழுநன் இன்னணம் கூறவே, அத்தேவி தான் சிவபிரானைநோக்கிநோன்பு நோற்கக் கருதினள். அவள் சிவபிரானைக் குறித்துநோற்கையில், அரசனும் உடன்நோற்றனன். உண்ணுவிரதத்தை

மேற்கொண்டு அத்தம்பதிகள் மூன்றுநாள் கழிக்கையில், சிவபிரான் அன்னார்மீது கருணை கூர்ந்து கனவில்தோன்றி 'உங்கள்விரதத்துக்கு மனமுவந்தோம்; இனி நீவிர் பாரணை புரிக. இனி விரைவில் நுங்கட்குக் காமனது அமிசமான புதல்வனொருவன் என்னருளால் தோன்றுவான்; அவன் வித்தியாதர சக்கரவர்த்தி யாவான்' என்று மொழிந்து மறைந்தனர். பொழுது புலர்ந்ததும், அவர்கள் எழுந்து நீராடுதல் முதலிய காலைக்கடனைச் செய்து பாரணைபுரிந்து நோன்பைமுடித்துத் தமது கனவைப் பிரகிருதிகட்கெல்லாம் உரைத்து மகிழ்ந்திருந்தனர்.

சிலநாள் கழிகையில், கண்ணுதற்கடவுள், தேவிவாசவதத்தையின் கனவில் மீண்டுந் தோன்றி, ஒரு கனியை அன்னாளுக்குஅளித்தனர். மறுநாள் வற்சராசனுக்கு அன்னாள் அச்செய்தியை யுரைக்க, அவன் சிவபிரான் கனியென்று பெயரிட்டுப் புதல்வனைத் தந்தன னென்று உறுதிகொண்டு, மந்திரிமாரோடு, இனி விரைவில் தமதுகருத்து நிறைவுறு மென்று களிப்புக்கடலி லாழ்ந்திருந்தனன்.

---

## பதினொன்காவது அத்தியாயம்.

## நரவாகனதத்தன் பிறப்பு.

அப்பால், தேவி வாசவதத்தை கருக்கொண்டாள். உதயணமன்னவனுக்கு உள்ளத்தில் உவகை பொங்கியெழுந்தது; அப்போது வாசவதத்தைக்கு,

"பீரமலர்ந்த வயாவுநோய்நிலைக்க
வளைகாய்விட்ட புளியருந்தியும்
செவ்வாய்திரிந்து வெள்வாய்பயந்தும்
மனைபுகையுண்ட கருமணிடந்து
பவளவாயிற் சுவைகண்டும்

*  *  *  *

மலரவவிழ்ந்த தாமரைக்கயலென
வரிகொடுமதர்த்த கண்குழிந்தும்"

இவ்வாறு மாதம் பத்திற் குறிகளும் தோன்றின; அப்போது ஒருநாள், அவள், தான் வானத்திற் பறந்துசெல்லத் தன்னை விரைந்து குரலெழுப்பிப் பாடுகின்ற விஞ்சைமங்கையர் அருகில் வந்து கொண்டாடினதாகக் கனாக் கண்டனள். கண்விழித்ததும், அவ்வாசவதத்தை தான் கனவிற் கண்டதுபோலவே, நனவிலும் வானத்திற் பறக்கவும் அங்குநின்று இப்புவித்தலத்தைக் கண்ணுற்று நிற்கவும் விரும்பினள். யௌகந்தராயணன் அத்தேவியினது கருத்தை யுணர்ந்ததும், பறக்கும் பொறியை நிருமித்துத் தந்து அக்கருத்தை முற்றுவித்தான்.

ஒருகால் ஏகாந்தத்தில் தனது மந்திரிமாருடன் தன்னைச்சார்ந்த தன்கணவனை நோக்கி, வாசவதத்தை, 'ஆர்யபுத்ரரே! நான் கருக்கொண்ட நாள் தொட்டு இக்கருவுக்கு யாதொரு தீங்கும் நேரா திருக்குமா?' என்ற விசாரமே எனக்குப் பெரிதுந் தோன்றி யிருக்கின்றது; அக்கவலையுடனே நேற்று இரவு நான் துயில்கையில், உடல் முழுதும் திருநீறணிந்தும், மதிக்கலையை முடியினில் தரித்தும், மின்னெறி சடைமுடி பூண்டும், கையில் திரிசூலமேந்தியும் நின்ற ஒரு திப்பியபுருடன் எனதுகனவில் தோன்றி, 'மாதே! இக்கருவை அளித்தவன் யானே: இதனைப் பாதுகாக்கவேண்டிய பாரமும் என்னதே; ஆதலால், இது குறித்துச் சிறிதும் இடர்கொள்ளவேண்டா' என்று கூறித் தன்மாற்றத்தில் விசுவாசம் பிறக்குமாறு ஓரடையாளமுங் கூறினன்' என்று தெரிவித்தாள். அச்சொல்லைச் செவியுற்றதும், உதயணமகாராசனது மனத்தில் தோன்றிய உவகைக்கு ஓரெல்லையில்லை.

சிலபகல் தேவி வாசவதத்தையின் இன்முகத்தைக் கண்டு கண்டு உதயணமன்னவன் மனம்பூரித்து மகிழ்ச்சிக் கடலுள் மூழ்கியிருக்கையில், மந்திரிமார்யாவர்க்கும் இனி வரப்போகின்ற நன்மைக்கு முன்னறிகுறியாகப் புதல்வர் தோன்றினர்; யௌகந்தராயணன் புதல்வனுக்கு மருபூதியென்பதும், ருமண்வான்மகனுக்கு அரிசிகனென்பதும், வசந்தகனது மகனுக்குத் தபந்தகனென்பதும், வாயில்காவலாளனான நித்யோதிதனென்னும் மறுபெயருடைய இத்யகனது மகனுக்குக் கோமுக னென்பதும் நாமதேயங்க ளாகும். இவ்வாறு மந்திரிமார்க்கு மகார் தோன்றவே, எல்லோரும் பெருவிழாக்கொண்டாடிக்கொண்டிருக்க, அப்போது, 'வித்தியாதர சக்கரவர்த்தியாகப் போகின்ற உதயணராசகுமாரனுக்கு, மந்திரிகுமாரர்கள் பகைவர்களைப்பறக்கடிக்கும் வல்லமைபெற்ற மந்திரிமாராவர்' என்று வானத்திலின்று ஓரசரீரி தோன்றிற்று.

சிலபகல் கழிந்ததும், ஒருநாள் தேவி வாசவதத்தை கருவுயிர்க்கும் வருத்தங்கொண்டு, அமைய வேண்டியஇலக்கணமுறைப்படி அமைக்கப் பெற்றுள்ள சூதிகாகிருகத்தைச்சார்ந்து கருவுயிர்த்தாள். வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும் சுவான் மகற் கண்டு தாய் மறந்தனள். அந்தக்குழந்தை அவதரித்திருந்த அந்தமாளிகைமுழுதும் அந்தக் குழவியின் பேரொளியால் மிக்கு விளங்கிற்று.

அந்தப்புரத்திற் பெருவிழாவாக இருக்கையில், வற்சராசனிடத்து அந்தப்புரத்துச் சனங்கள் ஓடிப்போய்மகப்பேறு தோன்றிய விழாவினைத் தெரிவித்தனர்; அவ்வாறு தெரிவித்தவர்க்கு, உதயணசக்கரவர்த்தி அளக்கலாகாநிதியம் மணி முதலியவற்றை வாரித் தந்தனன்; அவ்வரசர்க்கரசன் இன்செய்தி கூறினர்க்குத் தன் நாட்டையும் அப்

பொழுதுகொடுத்திருப்பன்; அவ்வாறு செய்யாதது, உலோபகுணத்தாலன்று; தகுதியன்று என்பதனாலேயாகும்.

உடனே, "மன்னர்மன்னவன் ஏமுறப் புனல்படீஇ வித்தொடின்பொருள், * * * உறவழங்கி வெண்சங்கமார்ப்புற" கடவுளருளால் நெடுங்காலத்திற்குப் பிறகுதன் நினைவு முற்றியதனால், பேராவல்கொண்ட நெஞ்சத்தோடு அந்தப்புரத்தினுட்குறுகி, தனதுபுதல்வனது இன்முகத்தைநோக்கினான். அந்தக்குழவியினது முகம் அதரமே இதழாகவும் சொள்ளுநீரே கேசரமாகவும் அமைய, ஸாம்ராஜ்யலக்ஷ்மி வீற்றிருக்கின்ற ஒரு செந்தாமரை மலர் போன்றது. அக்குழவியின் இன்முகத்தைக் கண்டபோது, அரையன் கொண்ட மகிழ்ச்சியை அளவிட்டுச்சொல்ல நம்மால் முடியுமோ! அப்பால் வற்சராசன்,

"கறைபன் னீராண் டுடன்விடுமின்
காமர் சாலை தளிதிறு மின்
சிறைசெய் சிங்கம் போன்மடங்கிச்
சேரா மன்னர் சின மழுங்க
வுறையுங் கோட்டமுடன் சீமி
னொண்பொற் குன்றந் தலைதிறந்திட்
டிறைவன் சிறுவன் பிறந்தானென்
றேற்பார்க் கூர்தோ றுய்த்தீமின்."
"மாட மோங்கும் வளநகருள்
வரம்பில் பண்டந் தலைதிறந்திட்
டாடைசெம்பொ னணிகலங்கள்
யாவும் யாருங் கவர்ந்தெழுநாள்
வீட வின்றிக் கொளப்பெறுவார்"

எனப் பறையறைக' என்றனன்.

"என்புழி வள்ளுவர் யானை மீமிசை
நன்பறை யறைந்தனர் நகரமாந்தரு

மின்பிறழ் நுசுப்பினர் தாமும் விம்மலா
லின்பமென் றளக்கரு மளக்க ரெய்தினர்.
பண்ணையு மாயமுந் திரளும் பாங்கருங்
கண்ணகன் றிருநகர் களிப்புக் கைமிகுந்
தெண்ணெயுங் களபமு மிழுது நானமுஞ்
சுண்ணமுந் தூவின வீதி தோறுமே.
இத்தகை மாநக ரீரறு நாளுஞ்
சித்த முறங்களி யோடு சிறந்தே
தத்தமை யொன்று முணர்ந்தில.''

யௌகந்தராயணன் முதலியோர் அக்காலையிற்பெருங் களிப்பில் மூழ்கி, என்னவென்று நாமகரணஞ் செய்வதென்று எண்ணியிருக்கையில் 'வேந்தே! உனக்குப் புதல்வனுகத் தோன்றியவன் காமதேவ னமிசமானவன்; இவன் பெயர் நரவாகனதத்த னென்பது. இவன் ஒருகல்பகால மளவும்வித்தியாதரர்க்கெல்லாம்சக்கரவர்த்தியாகி,மடிமையின்றி அரசுபுரிவன்' என்று அசரீரி கூறிநின்றது. அக்காலத்தில் தேவர்கள் பூமாரிபொழிந்தனர்; தேவதுந்துபிகள் முழங்கின; வானத்தில் இன்னியங்க ளார்த்தன. அது கண்ட உதயணன் கொண்ட மகிழ்ச்சிக்கு நம்மால் ஒரு வரையறை எடுத்துக்கூற முடியுமோ? அப்போது, அந்நகரத்தில் நகரமாந்தர் ஆநந்தநட்ட மிட்டனர். அப்போது அந்நகரத்தில் வாயைத்திறந்தால் வெகுமதியே; பேச்செல்லாம்பெருந்தியாகமே; அந்நகரிலெழும்ஒலியோ பல்லியத்துவையலே;எங்கும் மங்களம்; எங்கும் பெருமகிழ்ச்சி. இவ்வாறு புத்திரப்பேற்றுத் திருவிழாஇனிதாக நடந்தது.

அந்தப்புதல்வனும் நாள் கழியக்கழிய வளர்பிறைச் சந்திரன் போன்று நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமு மாக வளர்ந்தான். அக்குழவி மழலைச் சொல் சொஞ்சுவதும் சப்பாணிகொட்டுதலும் அம்புலி

யழைத்தலும்செங்கீரையாடுதலும் தவழ்ந்துசெல்லுகையும் தளர்நடைநடப்பதும் முதலிய எண்ணிலாவிளையாட்டுக்களைக் கண்ணுற்ற மன்னவனுக்கு உவகைக்கடல் உள்ளத்து ளடங்கவில்லை.

அப்பால்,யௌகந்தராயணன் மருபூதியையும்,ருமண்வான் அரிசிகனையும், இத்யகன் கோமுகனையும்,வசந்தகன் தபந்தகனையும், சாந்திகனென்ற ராஜபுரோகிதன் தனது உடன்பிறந்தோனுக்குப் பிங்கலிகை யென்ற மனைவியினிடம் பிறந்தோரான சாந்திசோமன் வைசுவாநரன்என்ற மக்களிருவரையு மாக மந்திரிமார் தமது சிறுவர்களை யிட்டுக்கொணர்ந்து உதயணகுமாரனுடன் விளையாடுமாறுவிட்டு, மன்னர்மன்னனுக்குப் பெருமகிழ்வை யுண்டாக்கினர்.

அக்காலத்து வானத்தினின்றுஇன்னியங்களினுர்ப்பரவத்தோடு மலர்மழை விழுந்தது. அரசன் தனது தேவியோடும் அச்சிறுவரின் குழுவைக் கண்டு மகிழ்ந்தனன். இளம்பருவத்திலும் அந்நரவாகனதத்தன், இன்றியமையாத குணங்களுடன் சேர்ந்து வாழ்வதுபோல, அக்குழந்தைகளோடு மாறுபாடுகொண்டிடாமல் மனமொத்து விளையாடலானான். வற்சராசன் தன்குழவியினது விளையாட்டிற் கூறும் மழலைச்சொல்லைச் செவியேற்பதாலும், தன்னிடத்து அன்பைக் காட்டுமவர்களிடத்தி லெல்லாம் தாவித்தாவிச் செல்லுகின்ற அந்தக் குழவியின் வெண்முறுவல் பூத்த இன்முகத்தைக் காண்டலாலும் ஆராவின்பமெய்தி, தன் வாழ்நாள் கழிவதே தெரியாது பேருவகையோடு கழித்தனன்.

இவ்வண்ணம் உதயணசக்கரவர்த்தி தன் தேவியுடன் தனது நிகரில்லாப் புதல்வனை ஓம்பித் தன் வாழ்நாளைக்

கழிக்கையில், புதல்வனைப் பாதுகாப்பதில் மன்னவன் பேரச்சம் பூண்டு வருந்துவதைக் கண்ணுற்ற யௌகந்தராயணன், ஏகாந்தத்தில் அன்னனை யணுகி 'அரசர்க்கரசே! நம்புதல்வனை நரவாகனதத்தனைப் பாதுகாப்பதன் பொருட்டுச் சிறிதும் நீர் கவலவேண்டா; சிவபெருமான் இப்புதல்வனை வித்தியாதரசக்கரவர்த்தி யாகுமாறு சங்கற்பித்து நம்மில்லத்தில் அவதரிப்பித்தனர்; இச்செய்தி யுணர்ந்த வித்தியாதரர்களிற் பலர் அழுக்காறுகொண்டு கேடுசெய்யச் சூழ்ச்சி செய்யலாயினர்: அதனால், சிவபிரான் தமது பேரருளாற் கணங்களைச் சேர்ந்த தம்பகனென்பவனை நரவாகனதத்தனைப் பாதுகாக்குமாறு இங்கு விடுத்திருக்கின்றார். 'அவன் பிறர் கட்புலனுக்குத் தோற்றாது உடனிருந்து காத்துவருகின்றான்; இவ்விஷயத்தை ஒருகால் நாரதமுனிவர் என்னிடம் தெரிவித்திருக்கின்றனர்' என்றான். அம்மொழியால், வற்சராசன் மனந்தேறி யிருந்தனன்.

வற்சராசனால் வளர்க்கப் பெற்றுப் பிறைச் சந்திரன் போற்பெருகிவளரும் நரவாகனதத்தன், உரியபருவங்களிற் சௌளம் உபநயனம் முதலிய சடங்குகள் செய்விக்கப் பெற்று மந்திரிமார் புதல்வரோடு பலகலைகளிலும் பயின்று தேர்ச்சி பெறலானான். உயர்குடிப்பிறந்த அன்னான், செருக்கின்மை பணிவுமுதலிய பண்பு உடையவனாகி, மன்னர்க்கு உரிய விஞ்சைகளிலெல்லாம் நன்கு பயின்றனன். வாசவதத்தையும் பத்மாவதியும் அச்சிறுவன்மிசைப் பேரன்பு வைத்திட்டதனால் அல்லும் பகலும் அவன்மீதே கருத்தாயிருந்தனர். மன்னவன் அன்னானுக்குக் கடிமணஞ் செய்வித்தல் முதலியவற்றைக் குறித்து நினைந்தவண்ணம் நாள் கழிக்கலாயினன். இது நிற்க:

---

## பதினைந்தாவது அத்தியாயம்:
## கலிங்கசேனையின் வரலாறு.

ஓங்கிய மாடமாளிகையாற் பொலிவுபெற்ற தட்சசிலை யென்ற நகரம் ஒன்று உண்டு; அதில், நற்பண்பிற் கெல்லாம் உறைவிடமான கலிங்கதத்த னென்பவன் வேந்தனாக வீற்றிருந்தான். வடமீனனைய கற்புடையளான தாராதத்தை யென்பவள் அன்னனுக்கு இல்லறத்துணைவி யாயினள்.

அவர்கள் இனிது இல்லறத்தை நடாத்தி வாழ்கையில், சுரபிதத்தையென்ற அச்சரமாது வித்தியாதரனொருவனைக் காமுற்றதன் நிமித்தம் தேவேந்திரனாற் சபிக்கப்பெற்றுத் தாராதத்தையின் கருவினிற் புகுந்தாள். அப்பொழுது, அத்தேவி, வயாவும் வருத்தமுங் கொண்டு பத்துத்திங்கள் கழிந்ததும் ஒருபுதல்வியைப் பெற்றாள். அப்பெண்மகவு, படைத்தற்றொழிற்கடவுளின் சிற்பத்திற்கு ஓரெல்லை யெனலாம்படி அழகே வடிவாகத் தோன்றினள். பார்ப்பவர் கண்கட்கு எல்லாம் பெருவிழா அளிக்கும் அக்கட்டழகிக்குக் கலிங்கதத்தன் கலிங்கசேனை யென்று நாமகரணஞ் செய்தனன். அவள் பிறைச்சந்திரனது கலைபோல நாளுக்கு நாள் வளர்ந்து, உபரிகைகளிலும் பூஞ்சோலைகளிலும் விளையாடும் பருவத்த ளாயினள்.

ஒருநாள் வானவீதியிற் சென்று கொண்டிருந்த மயாசுரனது புத்திரி யான சோமபிரபை யென்பவள், உபரிகையின்மீது கலிங்கசேனை விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றாள்; இவளது மேனியழகைக் கண்டு வியந்து திகைப்புக்கொண்டு, 'இவள் வரையரமகளோ? வானவர்மகளோ? நீரரமகளே கொல்லோ? அன்றி, இத்துணை மேதகவுடையாள் மானுடமகளேயோ?' என்று

ஐயுற்று,முடிவில்'வானவர்மகளே ஏதேனும்ஒருசாபத்தால் மானுடமகளாய்ப் பிறந்திருக்கவேண்டும்' என்று துணிந்தாள்; பின்னரும், அன்னாள், 'இவளிடத்தெனக்கு இத்துணைக் கண்ணோட்ட முண்டாவதால், முற்பிறவியில் இன்னாளோடு எனக்கு நட்பு இருக்கவேண்டும்' என்று அறுதியிட்டு,அப்பொழுதேஅவளோடுநட்புப்பூண்டொழுகுமாறு கருதி, அப்பால், 'யான் பொள்ளென இவளருகிற் சார்வேனாகில், இவள் பேரச்சங் கொள்ளக்கூடும்' என்றுநினைந்து, தன்னுருவந் தோன்றாதவாறு மறைந்து மெல்ல இறங்கி, பின்பு மானுடவடிவம் பூண்டு அவளது அருகினில் மெல்ல மெல்ல அணுகினாள்.

அணுகியதும், அவளைக் கண்டவுடனே கலிங்கசேனை, 'ஆ! என்ன வியப்பு! இங்கு ஒரு மன்னவகுமரி தெய்வச் செயலால் என்னருகைச் சார்ந்தாள். இவள் எனதுபாங்கியாவள்' என்று கருதி, அன்போடு எழுந்து அன்னாளை வரவேற்றுத் தழுவியணைத்து ஆசனமிட்டு இருக்கவைத்து, அவளது மரபையும் பெயரையும் வினவினாள். அப்பொழுது அவ்விருவர்க்கும் நேர்ந்தசம்பாஷணையில் மாறாநண்பு கொள்வதாக அவ்விருவரும் உறுதிகொண்டனர். அவ்வாறு அவ்விருவர்க்கும் நட்பு ஒருகால் கண்டமாத்திரத்திலேயே வேரூன்றிவிட்டது: "ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை, இருநிலம் பிளக்க வேர்வீழ்க்கும்மே". என்பது, ஆன்றோர்மொழியன்றோ!

சோமபிரபை சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து 'எனது இல்லம்இங்குநின்று அறுபதுயோசனைக்கு அப்பாலுள்ளது;பொழுதோ அஸ்தமிக்கின்ற நேரமாயிற்று; ஆதலால், விடைபெற்றுக்கொள்ளுகிறேன்' என்று இரந்து

வேண்டிப் பிரியாவிடை பெற்றுக்கொண்டு வானத்தி லெழுந்து சென்றனள்.

அதுகண்ட கலிங்கசேனை, 'யானோ ஒருமானுடமகள். என்னோடு ஓர் கடவுட்பெண் நட்புக்கொண்டனளே! ஈது என்ன அற்புதம்!!' என்று பெருவியப் பெய்தினள் பிறகு, 'கடவுளரும் மானுடரோடு சிறுபான்மை நட்புப்பூணுதலு முண்டு: பிருதுவின் மகளோடு அருந்ததி நட்புப் பூண, அது காரணமாகப் பிருது காமதேநுவையே இப்புவியிற் கொணர்ந்து அதன்பாலை யுண்ண, அதனால், அவன் பிரஷ்டனான பின்பும் மீண்டு வானுலகம் புகவில்லையோ? அது போல, இந்தத் தெய்வநங்கையும் என்னோடு தோழமை பூண்டது, எனது நன்மையின்பொருட்டே யாகும்' என்று மனந்தேறினள். அன்று இரவெல்லாம் அந்தக் கலிங்க சேனை சோமபிரபையைப் பற்றி நினைந்த வண்ணமே பொழுது போக்கினள்.

மறுநாள் பொழுதுபுலர்ந்ததும், சோமபிரபை வான வீதிவழியாக மீண்டும் கலிங்கசேனை யருகிற் சார, அவ்வி ருவரும் அளவளாவினர். அப்பொழுது, சோமபிரபை பல் வகைப்பொறிகளா லமைக்கப் பெற்ற மரப்பாவைகள் நிறைத்துள்ள பேழையைக் கலிங்கசேனைக்குக் கொடுத்த னள். அப்பதுமைகளுட் சில மலர்மாலையையும், வேறு சில பானீயங்களையும் கொணரும்; மற்றுஞ் சில ஆட, பின் னுஞ் சில பாடும்; இவ்வாறுள்ள மரப்பாவைகளைக் கண்டு, கலிங்கசேனை உள்ளம்பூரித்து நிற்க, சோமபிரபை விடை பெற்றுச் சென்றனள். இவ்வண்ணமே, சோமபிரபை அடிக்கடி கலிங்கசேனையினிடம் வருவதும் போவது மாக இருந்தனள்.

ஒருநாள் கலிங்கசேனை உணவு கொள்ளாதிருக்க, அது கண்ட அவளது தாய் 'மகள் இவ்வாறுதற்குக் காரணம் என்னோ?' என்று கவன்று மருத்துவரைக் கூவிக் காட்ட, அவரும் 'இது, பிணிபற்றிய தன்று; ஏதோ ஒரு காரணத்தினால் மிக்கமகிழ்ச்சி யடைந்திருப்பதனு லாகும், இப்பசியின்மை' என்றனர். அது கேட்ட தாய் மகளை நெருங்கிச் செய்தி வினவ, சோமபிரபையின் தோழமையை அன்னாள் தெரிவித்தனள். மறுநாள் கலிங்கசேனை சோமபிரபையை இட்டுக்கொண்டுபோய், அவளது நட்புக் கிடைத்தவாற்றைத் தனதுபெற்றோர்க்குத் தெரிவிக்க, அவர்களும் ஏற்ற தோழமைக்கு வியந்தனர்.

இவ்வாறிருக்க, ஒருகால் தன்னருகுசேர்ந்த பாங்கி மீண்டு செல்லுகையில், கலிங்கசேனை, தனது உபரிகை மீது ஏறி, அவளிடத்துள்ள நட்பால் அவள் செல்வதை நோக்கியவண்ணம் நின்றனள். அப்பொழுது, மதநவேகனென்று நாமதேயம்பூண்ட விஞ்சைக்காளையன் மூவுலகையும் மோகிக்கச்செய்யவல்ல அன்னாளது வடிவத்தைக் கண்டு, 'இது மதனனது வாளியோ?' என்றுகருதி மனங் கலங்கினன்; அப்ஸரஸ்ஸ்திரீகள் விஞ்சைமகளிர் இவர் யாவரும் இவளைக் கண்ட பின்னர் ஒருகோதுபோலத் தோன்றுகின்றனர். இவளை இல்லறக்கிழத்தியாகப் பெறுது யான் உயிர்வாழ்தல்தான் எற்றுக்கு?', என்று ஓரெண்ணமுங் கொண்டனன். பிறகு, 'யான் விஞ்சையனுயிருந்து, மானுடமகளை மணப்பது தகுதியோ?' என்று தியங்கினன்.

பின்பு, பிரஞ்ஞப்தியென்ற விச்சையைத் தியானஞ் செய்ய, அந்தத்தேவதை கண்கூடாகத் தோன்றி, 'இவள் மானுடமக ளல்லள்: விஞ்சைமாதே சாபத்தினால் இவ்வாறு

தோன்றினள்' என்றது. அதுமுதல் மதநவேகன் அவளைப் பெறும் உபாயம் யாதோ? என்று சிந்தித்தவண்ணமாகவே யிருந்தனன்.

ஒருநாள், கலிங்கசேனை, தன்னருகிற் சேர்ந்த தன் தோழியை நோக்கி, 'தோழி! யான்கூறுவதை நீ எவரிடத்தும் சொல்லொணாது; எனக்குக் கடிமணம் புரியும் பருவம் வாய்த்துள்ள தென்பதை உணர்ந்திருத்தலால் யான் என்னெஞ்சொத்த நின்னிடத்து இம்மறையைத் தெரிவிக்கின்றேன். பற்பல வேந்தர் என்னை மணம் புரியுமாறு தூதுவரை விடுத்தனர். எந்தை அவர்களையெல்லாம் கணியாது, சிராவத்திநகர்க்கிறையாகிய பிரசேநசித்து என்னும் மன்னவரது தூதுவனைமாத்திரம் மிக்க மேம்பாட்டோடுவரவேற்று அம்மன்னவருக்கு என்னைத் தருவதாக வாக்களித்தனர்' என்றாள். இது செவியிற் புக்கதும், அன்னாள் தன்செவியில் நாராசம்புக்கதுபோல் மிகவருந்திக் கண்ணீர் பெருக்கினாள். அதுகண்ட கலிங்கசேனை திடுக்கிட்டு, 'நீ வருந்தக் காரணம் யாது?' என்று நெருக்கிக் கேட்டனள்.

சோமபிரபை:—'பிரசேநசித்து மன்னவனோ உயர்குடிப்பிறப்பின னென்பதிற் சிறிதும் ஐயமின்று; ஆயினும், அவன் மூப்பை யடைந்திருத்தலால், நரைதிரைகள் அன்னானிடத்துத் தோன்றியுள்ளன. இவ்வாறாகிய கிழத்துக்கா உன்னை மணஞ்செய்விப்பது? இதனை நினைக்க நினைக்க எனக்கு ஆறாத்துயரம் பொங்குகின்றது.'

கலிங்கசேனை:—'ஆயின், நீ வானவீதியிற் சென்று கண்டிருக்கலாமே; எனக்குக் கணவனாதற்கு ஏற்றவன் யாவன்தான்?'

சோமபிரபை:—'கௌசாம்பி யென்னும் நகரத்தில் உதயணசக்கரவர்த்தி வாழ்கின்றார். அவர் குடிப்பிறப்பு பருவம் கல்வி செல்வம் வடிவழகு என்ற இவற்றில் ஒன்றினும் குறைவிலர். அவர் நினது வடிவழகைச்செவியுற்று நின்மீது காதல்கொண்டிருக்கின்றார். ஆயினும், அவரது பெருந்தேவியாகிய வாசவதத்தையினிடத்துள்ளகண்ணோட்டத்தால் வெளிப்படையாக வந்து நினது பெற்றோரிடத்து நின்னைக் குறையிரக்கப் பின் வாங்குகின்றனர்.'

கலிங்கசேனை:—'அங்ஙனமாயின், அன்னாரைப் பெறும் உபாயம் யாதுதான்?'

சோமபிரபை:—'பொறியூர்தி கொணர்வேன்; நீ அதன்மீது ஏறுவாயாயின்,நினக்கு,பிரசேநசித்தென்னும் வேந்தனையுங் காட்டி, உதயணசக்கரவர்த்தியினிடம் நின்னைச் சேர்ப்பேன். நீ அவரைக் கண்ட பிறகு, மீண்டும் நினது பெற்றோரிடத்துவாராயாதலால்,உனது நிதியத்தையும் மற்றும் உனது பரிகரங்களையும்உடன்கொண்டுவருக.'

கலிங்கசேனை:—'சித்திரலேகை அநிருத்தனைக் கொணர்ந்ததுபோல, நினது வல்லமையால் அவ்வுதயண சக்கரவர்த்தியை இங்குத் தருக.'

சோமபிரபை.—'சித்திரலேகை அமரத்தன்மை நிரம்பியவளாதலால் அன்னானைக் கொணரவல்லவளாயினள். பரபுருஷனைப் பரிசித்தற்கு இயலாத எம்போலியரால் அவ்வாறு செய்ய வியலுமோ?'

கலிங்கசேனை, தன் விருப்பம் முற்ற வேறுவகை யில்லாமை கண்டு, அன்னாள்கூற்றிற்குஉடம்பட்டனள். பின்பு சோமபிரபை வானவூர்தியொன்று அமைத்துக் கொணர, கலிங்கசேனை, தன் தோழியின் மொழிப்படியே, தனது

பெற்றோரிடத்தும் ஒன்றும்மொழியாது தனதுபரிகரங்களை யெல்லாம் உடன்கொண்டு சென்றனள். காதற்கடவுட்கு வயப்பட்ட மங்கையர் மேடு பள்ளமென்பதையும் ஓராது, வருங்காலத்து வரக்கடவ இன்னவை யென்பதனையும் கருதாது வரம்பு கடந்து செல்வது, இவ்வுலக வியல்பே.

கலிங்கசேனையைக் காணாத பின்பு, அவ்வரண்மனையில் யாது நிகழ்ந்திருக்குமோ, அதனைப் படிப்பவரே தம் கருத்தால் ஆராய்தற்கு உரியர்; அதுபற்றி, யாம் இங்கு எடுத்துக் கூறப்புகுவ தில்லை.

அவ்வண்ணம் சோமபிரபையால் தூண்டப்பெற்றுக் கலிங்கசேனை வானவூர்தியில் ஏறிவர, சோமபிரபை, அன்னளுக்கு நரையால் முடிமுழுதும் வெளுத்துள்ள பிரசேநசித்தரசனைக் காட்டிவிட்டு,பிறகு கௌசாம்பியைச்சார்ந்து அங்கு உய்யானத்தில் உலாவியிருந்த உதயணசக்கரவர்த்தியைக் காட்டினள்;அன்னனை திருபலாவணியங்களைக் கண்டு திகைப்புக்கொண்ட கலிங்கசேனை, தனது தோழியை நோக்கி, 'என்னை உதயணசக்கரவர்த்தியோடு இன்றே சேர்ப்பிக்க. ஒருகொடிப்பொழுதும் அவரைவிட்டு அகன்று உயிராற்றகில்லேன்' என்றாள்.

அதற்குச் சோமபிரபை:—'இன்று நிமித்தம் தோன்றுகின்றன. ஆதலால், இப்பொழுது நீ ஒருத்தர் கட்புலனிலும் படாது இப்பூங்காவனத்தில்தானே இருக்க. யான் எனது இல்லத்திற்குச் சென்று வருகின்றேன்' என்று மொழிந்து விடைபெற்றுச் சென்றாள்: அப்போது உதயணனும் அரண்மனை சார்ந்தனன்.

அப்பால், கலிங்கசேனை சகுனமறிந்த தனது தோழி தடுத்திருந்தும், வேட்கைமிகுதியால் ஆறியிருக்கவில்லாது தனது ஏவலாளரிற் சிறந்த ஒருவனைக் கூவி, உதயணசக்கர

வர்த்தியினிடம் தூது அனுப்பினுள்: அவனும், சென்று வாயில்காவலர் மன்னவற்குச் செய்தி யுணர்த்தி அரையன் அநுமதியின் மீது உட்புகவிடச் சக்கரவர்த்தியைக் கண்டு பணிந்து, 'அரசர்க்கரசே! தட்சசிலைக்குத்தலைவனுகிய கலிங்கத்தரசனது புதல்வி கலிங்கசேனை யென்பாள் நும்மிடத்து என்னை விடுத்தனள். அன்னுள் நுமது சௌந்தரியத்தைச் செவியேற்று மாலுற்று, தனது தோழி மயாசுரனதுமகள் சோமபிரபை கொணர்ந்த வானவூர்தி யேறித் தனதுசுற்றத்தாரை யெல்லாம்நீத்துத் தன்பரிகரங் களுடன் இங்கு நும்மைச் சுயம்வரத்தால் மணக்கும் பொருட்டு வந்திருக்கின்றுள். அவள் இச்செய்தியை நும் மிடத்து விண்ணப்பிக்க என்னை விடுத்தனள். அவளைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவேணும்; திங்கள்மாட்டு நிலாப் போன்று அன்னுள் நும்மிடத்து விளங்குவள்' என்றுன்.

உதயணசக்கரவர்த்தி அவ்வாறு கூறிய தூதுவனது மொழிக்கு மகிழ்ந்து அன்னுனைச் செம்பொற்பட்டாடை முதலியவற்றுற் சம்மானித்து, பிறகு, யௌகந்தராயண னைக் கூவி வரவிட்டு வந்த அவனிடத்து அச்செய்தியைத் தெரிவித்தான்.

யௌகந்தராயணன் அதுகேட்டுத்தன்னுள் ஆலோசிக் கின்றுன்:—'கலிங்கசேனையோ வடிவத்தினுற் பெயர்போ னவள். அன்னுளைத்தேவாசுரர்களும் விரும்புகின்றனராம். அன்னுளைப் போன்ற மாதரசி இம்மூவுலகிலும் இல்லை. அவளை மனைவியாகப் பெறின், உதயணன் மற்றெல்லாவற் றையும் விட்டிடுவன். அவ்வாருயின், தேவி வாசவதத்தை யும் தன்னுயிர் நீத்திடுவள்; அரசகுமாரன் நரவாகனதத்த னுக்கும் கேடு உண்டாகும்; பத்மாவதிதேவியும் தன்னுயி ரை வைத்துக்கொண் டிருத்தல் அரிதாகும். ஆகவே,

தேவிமா ரிருவர்தந்தையரும் தம்தம் புதல்வியரது செய்தியை யுணர்ந்து, உயிரையாவது விடுவர்; அன்றி, பகைமையாவது பூண்பர். இவ்வாறு பலகேடுகள் நிகழு மாதலால், கலிங்கசேனையின் மணத்தைக் காலம் நீடிக்குமாறு செய்வேன். பின்னர்க் கலிங்கசேனையின் மணத்தைத் தட்டுவித்தற்கு ஏற்ற உபாயம் கைகூடும்' என்று அறுதியிட்டு, வற்சராசனைநோக்கி இவ்வாறு கூறலாயினன்:—'வேந்தே! நம்மைப்போற் பெறும்பேறு பெற்றவர் யாவருளர்? ஏனெனில், நமது வடிவழகைச் செவியுற்று அமரரும் ஆதரிக்கும் வனப்பு வாய்ந்த கலிங்கசேனையே நம்மைச் சுயம்வரத்தால் மணக்கின்றாளன்றே! இங்ஙனம் கலிங்கசேனை நமக்கு அடிமைப்படின், அவளது தந்தையும் நமக்கு அடிமையாவனென்ற ஓர்பயனும் கைகூடும். ஆகவே, சோதிடரைக்கொண்டு நன்முகூர்த்தம் வினவி, நன்னாளில் அன்னாளைப் பாணிகிரகணஞ்செய்துகொள்க. அதுகாறும் அவளுக்கு ஏற்ற வாழிடம் அமைத்து, பணியாளரையும் அணி ஆடை முதலியவற்றையும் அவட்குத் தருக' என்றான். உதயணனும் அவ்வாறே செய்தனன்.

உடனே, யௌகந்தராயணன், சோதிடர்கட்கெல்லாம் செய்தியுணர்த்தி அருகில் நன்னாளில்லையென்றும், சில திங்கள் கழிந்தபின்னரே முகூர்த்தநாளுள்ளதென்றும் சொல்லுமாறு இரகசியமாகத் தெரிவித்தனன்.

மறுநாட்காலையில், யௌகந்தராயணன், உதயண மன்னவனை யணுகி, 'தாங்கள் கலிங்கசேனையை மணப்பது நன்மையைத் தருவதாதலால், விரைவில் முகூர்த்தத்தை நடத்தவேண்டாவோ!' என்று விண்ணப்பித்தனன். அரையன் 'என்னிதயத்தும் அவ்வாறே இருக்கின்றது. அன்னாளை விட்டிருப்பது எனக்கு மனவருத்

தமே' என்றான். உடனே, யௌகந்தராயணன், வாயில் காப்போனைக் கூவிக் கணிகளை அங்கு வரவிடுமாறு ஏவினன்.

உடனே கணிகள், வர, மன்னவன் 'கலிங்கசேனையின் மணத்துக்கு ஏற்ற முகூர்த்தத்தை விரைவிற் பாருங்கள்' என்றான். அன்னார் முந்துறவே யௌகந்தராயணன் செய்திருந்த சங்கேதப்படி, 'ஆறு திங்கட்குப் பின்னரே நன்னாளுளது' என்று ஒருவாய்பட மொழிந்தனர்.

அதுகேட்டதும், யௌகந்தராயணன் சினந்தவன் போன்று 'இந்தச்சோதிடர் என்ன தெரிவார்கள்? இவர் யாவரும் ஒன்றும் உணரார்' என்று பழித்து, 'மன்னரே! புலவரென்று தாங்கள் மதித்திருந்த சோதிடர் இன்று, வந்திலர்; அவரை வினவலாமென்று தோன்றுகின்றது' என்றான். அது செவியுற்ற மன்னவன், உள்ளம் ஊசலாட, அன்னானையும் வருவித்து வினவினன். அவனும், மற்றையோரைப்போலவே மொழிந்தனன்.

யௌகந்தராயணன்:— (மருண்டவன் போன்று,) 'வேந்தே! இப்போது என் செய்வது? கட்டளையிடுக.'

உதயணன்:—'கலிங்கசேனை யாது சொல்லுகின்றாள்; பார்த்திடுக.'

யௌகந்தராயணன்:—'அவ்வாறே' என்று சொல்லி இரண்டு சோதிடரை யிட்டுக்கொண்டு கலிங்கசேனையினிடம் சென்று, 'நன்னாள் குறிக்கச் சோதிடரை யழைத்து வந்திருக்கின்றேன். நும்நாளை மொழிக' என்றனன். அவளது பரிசனங்கள் பிறந்த நாளை மொழிந்தனராக, அக்கணிகள் பொய்ம்மையாகக் கணக்கிட்டு 'ஆறுதிங்கள் கழிந்தபின்னரே முகூர்த்த முள்ளது: அதற்குமுந்தி நன்றுளில்லை' என்றனர்.

அதுகேட்ட கலிங்கசேனை, மருண்டு சிந்தைக் கடலு ளாழ்ந்து நிற்கையில், பெருமைபெற்ற பணியாளன், 'அம் மணீ! நல்ல இலக்கினம் பார்த்தல் இன்றியமையாத செய லாகும். நாள் செய்வது நல்லோர் செய்யா ரன்றோ! அந் நாள் அருகினி லிருந்தாலுஞ் சரி: பன்னாள் பொறுத்திருந் தாலுஞ் சரியே. தம்பதிகட்கு நன்மைபயப்பது அதுவே யாதலால், அநுகூலமான இலக்கினத்தைக் கருத்துடன் ஆதரித்தலே தக்கது' என்றான். யௌகந்தராயணனும் 'அடாத நாளிற் சுபங்களைச் செய்யின் படாதபாடு படுவர்: மேலும், கலிங்கதத்தமன்னவரோடு நமதுசக்கரவர்த்திக்குப் பகைமை விளைந்தாலும் விளையும்' என்றான். கலிங்கசேனை யும் தன்னாற் செய்யலாவது ஒன்று மின்மையை யோர்ந்து, 'நீங்கள் எல்லீரும் எவ்வாறு சொல்கின்றீர்களோ?' என்று மொழிந்தனள்.

யௌகந்தராயணன், அச்செய்தியை உதயணமன்னவ னிடம் தெரிவித்து, இவ்வாறு தனது சூழ்ச்சியினால் அம் மன்னவனைக் கலிங்கசேனையை மணக்கவொட்டாது தடுத் துத் தனது இல்லஞ் சார்ந்தனன்.

கலிங்கசேனையின் கடிமணத்தை இவ்வாறு அணை யிட்டு நிறுத்திய பிறகு எஞ்சிய செயலையும் செய்யக் கருதி, யௌகந்தராயணன் தனது இன்னுயிர்த்தோழ னாகிய யோகேசுவரனென்பவனைக் கருதினான். கருதியமாத்திரத் தில் அன்னான் யௌகந்தராயணனுக்கு முன்னிலையிற் பணிந்து நின்று, 'என்னை நினைந்தது எற்றுக்கு?' என்று வினவினான்.

யௌகந்தராயணன், அந்தப்பிரமராட்சசனிடம் தம் மிறைவனுக்குக் கேட்டை விளைவிக்கத் தக்கதாய கலிங்க சேனையின் செய்திமுழுவதையுந் தெரித்து, பின்பு, 'தோழ

னே! காலத்தை நீட்டித்தற்குவற்ற சூழ்ச்சியைச் செய்திட்டேன்: நீ இப்பொழுது செயற்பாலது ஒன்று உளது. நீ கரந்துறைந்து கலிங்கசேனையின் ஒழுக்கத்தைக் கண்ணுற்று நிற்கவேணும். உருவத்தில் மூவுலகினும் இணையாருமில்லாத அன்னளை விஞ்சையர்முதலோர் காதலித்தலால் ஒரு விஞ்சையனுடனோ அன்றிச் சித்தனுடனோ எவனோடாவது கலிங்கசேனைக்கு நட்புக் கூடுமாயின், அதனை நீ கண்டறிந்து சொல்க. அது எம்மிறைவனுக்கு நன்மை பயக்கும். ஒருகால் கடவுட்டன்மையான் ஒருவன் மற்றையோனுடைய வடிவத்தைக்கொண்டு அன்னளை வஞ்சனையாக நேசிக்கவுங் கூடும். அதனையும் விழிப்புடன் பார்த்திருக்க. கடவுளரும் துயிலுங்காலத்தில் தாம் பூண்ட மாற்றுவடிவத்தை யொழித்துத் தம்மியற்கைவடிவுடன் நிற்பராதலால், அவ்விடயத்தை ஊன்றிப் பார்த்திருக்க வேண்டும். அவ்வாறு அவளிடம் ஏதேனும் குற்றம் கண்டிடுவையாயின், உன்மூலமாக அக்குற்றத்தை நாங்கள் கண்கூடாகக் காண்போம்; அதுகாரணமாகப் பின்னர் நம்மிறைவன் அன்னளிடத்து வைராக்கியங் கொள்ளுவன். இவ்வாறு நந்தொழில் முற்றுறும்; இவ்வாறன்றி, அன்னளை மறத்தால் வருத்தல் வேண்டா; அந்நெறி பெரும் பாதகத்தைத் தருவது ஒன்று அன்றோ?' என்றான்.

யோகேசுவரன், யௌகந்தராயணனது கோட்பாட்டிற்கு இணங்கித் தன் யோகமகிமையாற் கரந்து கலிங்கசேனையின் செயலிற் குற்றங் காணுமாறு விழித்த கண்ணிமையாது நோக்கிய வண்ணமாக விருந்தான்.

யௌகந்தராயணன் பின்பு வாசவதத்தையைக் குறுக, கலிங்கசேனையின்மீது இறைவன் காதல் கொண்டதை யுணர்ந்த அன்னள் நிஷ்டூரமாகக் கூற, 'அன்னே! நீர்

இது பற்றிச் சிறிதும் கலங்கவேண்டா; யான் உயிர்த்திருக்கும் வரையிலும் பத்மாவதியைத் தவிர்த்து வேறொருத்தி நமக்குச் சபத்நியாகமாட்டாள். இது திண்ணம். ஆயினும், நீர் ஒழுகுதற்கு ஏற்ற நெறி ஒன்று கூறுகின்றேன்; அதனைக்கைப்பற்றுக. ஆர்யபுத்திரருடையகருத்துக்கு இனியும் ஒற்றுமைப்பட்டு நடப்பவர்போன்றுநடக்கையிற்காட்டவேணுமேயன்றி மாறுபட்டவர் போன்று நீர் ஒழுகுதல் கூடாது: ஏனெனின், ஆதுரன் மாறுபட்ட சொற்களை மொழியும் மருத்துவனிடத்துஎப்பொழுதும்விருப்புக்கொள்ளாது இன்சொற்கூறும்மருத்துவனிடத்தே விருப்புக்கொள்வது இயல்பு.யாற்றைக் கடக்கக் கருதியவன் நேர்குறுக்காக நீஞ்சாது வெள்ளப்போக்கிற்கு இணங்கி நீந்திச் செல்வானேயாயின், அக்கரை சேர்வா னென்பது திண்ணம். மன்னவர் கலிங்கசேனையை மணப்பதைப் பற்றி வினவினராயினும், கலிங்கதத்தரசனது நட்பால்அரசுமுதலியன வளருமாதலால் அது தக்க தொன் றென்றே மறுமொழி கூறுக. இவ்வாறு கூறுவீராயின் தம் விருப்பத்திற்கு இடையூறு செய்யாது உதவிபுரிவதுபற்றி மன்னவர் நம்மிடத்தில் முன்னினும் மிக்கவிருப்புக் கொள்வர். கலிங்கசேனையை மணப்பதற்கு மாறு செய்பவர் ஒருவரு மில ரென்ற காரணம்பற்றி, அச்செயலில் மிக்கவூக்கங் கொள்ளாதும் நிற்பர்; வேண்டா என்ற செயலில் ஊக்கமுண்டாதல் உலகினது இயல்பேயன்றோ! இச்சூழ்ச்சியைப் பத்மாவதி தேவிக்குங் கற்பிக்க வேண்டும்' என்றான்.

அதுகேட்ட வாசவதத்தாதேவி, யௌகந்தராயணன் மொழியைக் கொண்டாடி, அதன்படி தான் ஒழுகிவந்ததோடு பத்மாவதி தேவியையும் அவன் மொழிப்படியே நடக்குமாறு செய்தனள். இது நிற்க:

சோமபிரபை ஒருநாள் வந்து தன் இன்னுயிர்ப்பாங்கியாகிய கலிங்கசேனை தன்சொல்லை மீறி மன்னவனிடத்துத் தூதுவனை யனுப்பியதையும், பிறகு ஆறுதிங்கட்கு அப்பால் அம்மன்னவனது கணிகள் நன்முகூர்த்தங் குறித்ததையும், உணர்ந்து அவள் செயலை வெறுத்துக் கூறி, 'பாங்கி! சக்களத்திமார் பொய்ம்மையாகவேனும் ஏதேனுங் குற்றத்தை யேறிடுவார்கள். நீயோ கன்னிகை; உனது கடிமண முகூர்த்தமோ பன்னாள் கழித்திருக்கின்றது; உன்னை மணக்க வேணுமென்று தேவர்களும் வேண்டிநிற்கின்றனர். ஆதலால், நீ இனி உதயணசக்கரவர்த்தியினிடத்து அடைக்கலமாகவைத்த நின்னை யாதொருகுற்றத்திற்கும் உள்ளாகா வண்ணம் பெருங்கவலையோடு பாதுகாக்கவேண்டுமே; கணவனில்லத்தி லுறையும் நின்னை இனி அணுகுவதும் எனக்கு இயலாது. இப்பொழுது எனதுகொழுநன் அநுமதியை அரிதிற் பெற்று வந்தேன். இங்கு எனக்கு யாதொரு பணியுமில்லை; என்னில்லத்திற்கு வருகின்றேன்; நீ நினைத்தபோது வருவேன்' என்று கூறித் தன் பாங்கியினிடத்து விடைபெற்றுச் சென்றாள்.

தன்னுயிர்ப்பாங்கி சென்றபிறகு, கலிங்கசேனை, தான் தனிப்பட்டவளாய் வனத்தினின்று பிழைத்துவந்த மான் பிணைபோன்று தயங்கியிருந்தனள்.

கலிங்கசேனை அவ்வாறு இருக்கையில், ஒருகால், உதயண மன்னவன்,பன்னாள் பொறுத்துக் கணிகள் முகூர்த்தங் குறித்தமைக்கு மனம்பொறானாய், ஒன்றுஞ்செய்ய இயலாது பொழுதுபோக்குமாறு வாசவதத்தையின் மாளிகைக்குச் சென்றான். அங்கு அன்னாள் விசேடமாக உபசரிக்கவே, 'இவள் ஒருகால் கலிங்கச்சேனை வந்துள்ள செய்தியை யுணரவில்லை போலும்' என்று கருதி, உதயண சக்கர

வர்த்தி, கலிங்கசேனை தன்னைச் சுயம்வரமணாளனாகவரித்து வந்துள்ள செய்தியைத் தெரிவித்தான். அதுகேட்ட வாசவதத்தை முன்னிலும் அகமலர்ந்து, 'ஆயின், ஐயர்மகர்க்குப் பின்னும் நன்மையே. தேவர்களும் காதலிக்குங் கட்டழகுடைய கலிங்கசேனை நம்மை வரித்தன ளாயின், அது நமக்கு மேன்மையேயாம். அன்றியும், அதுகாரணமாக அவளது தந்தைக்கு நம்மோடு நட்புத் தோன்று மாதலால் நமது வலிமை பின்னும் உறுதிப்படும்' என்று மனத்திற் சிறிதும் விகற்பமில்லாதவள்போன்று மொழிந்தனள்.

அது செவியேற்ற மன்னவனுக்கு 'ஈதென்ன? எவ்வகையிலும் என் விருப்பத்திற்கு இணங்கி நடக்கும் பெருந்தகைமை வாய்ந்தனள் இவள்! ஈதென்ன புதுமை? பத்மாவதியை மணந்ததையும் கடவுள்செயலாற் பொறுத்து அரிதினி லுயிர் தாங்கிய இத்தேவி, இப்பொழுது இவ்வாறு கலிங்கசேனையை மணக்கவும் அநுமதி தருகின்றாள். இவள் விருப்பிற்கு மாறுபட நடப்பேனாயின், இவளைப்பற்றியே நம்முடன் நட்புப்பூண்டொழுகும் எனது மாமனும் மைத்துனனும் எனதுபுதல்வன் நரவாகனதத்தனும் கேடுறுவரே? இவ்வாறு இருக்கையில், கலிங்கசேனையை எவ்வாறு மணப்பது?' என்று ஒருநினைவு மனத்தி லுதித்தது.

அம்மனக்கலக்கத்துடனே உதயணன் பத்மாவதியினில்லத்திற்குச் சென்றான். அவளும் மிகவும் உபசரித்தாள்.

அதுகண்ட மன்னவன், பெருவியப்புக்கொண்டு, அச்செய்திகளைத் தன் அமைச்சன் யௌகந்தராயணனிடத்து உரைத்தனன். அரசன் கலிங்கசேனையை மணப்பதில் முன்போலப் பரபரப்பின்றி விசாரங்கொண்டதை யுணர்ந்த மந்திரி யௌகந்தராயணன், 'இதுதான் இறைவனை நேர்மைப்படுத்துவதற்கு உரிய எல்லை' என்று அறுதியிட்டு

அன்னுனை நோக்கி, இத்துணைக் காலம் அறியாது போயி னேன். தேவியர் மொழிந்தது தம்முயிரைத் திருணம் போல நினைந்து நீத்திடக் காத்திருக்கின்றன ரென்பதைப் புலப்படுத்துகின்றது. கற்புடைமங்கையர் தமது கணவன் வேற்றுமடந்தையினிடத்துக் காதல்கொண்ட காலத்திலும் உயிர்நீத்த காலத்திலும் எளிமைப்பட்டுத் தம்முயிரில் நசை வையாது மரணத்தையே சரணமாகக் கொள்கின்றனர். ஆகலான், சிறந்த அன்பை முறியச்செய்தல் தகா தென்ப தைத் தனியே யெடுத்தோதவேண்டுமோ? நீர் கலிங்க சேனையைக் கடிமணம் புரிவீ ராயின், தேவி வாசவதத்தை உயிர்நீத்திடுவா ளென்பது திண்ணம்; அதனுல் மாமனும் மைத்துனனும் நமது புதல்வனும் தீங்குறுவதும் திண் ணம். தேவியரது உறுதிப்பாடு மரணத்தில்தா னென் பது அவரது கம்பீரமான மொழியே தெருட்டுகின்றது. நீர் கலிங்கசேனையை மணம்புரிவீ ராயின், இவ்வாறு ஒரு நொடியில் எல்லாம் கேடுறும்; இவ்விடயங்களை யான் முன் னர் ஆராயாது போயினேன்; இனி நீர் உமது பொருள்கள் சேதமுறுதவாறு பாதுகாத்தல் உமது கடனே; விலங்குக ளும் தமது பாதுகாப்பை யுணர்கின்றன; நும்போலியர்க்கு யான் கூறவேண்டுவது யாது?" என்றுன்.

உதயணசக்கரவர்த்தி, யௌகந்தராயணனதுஉபதேச மொழியைக் கேட்டதும் பகுத்தறியுந் திறனை நன்னர்ப் பெற்று, 'நமது மந்திரி சொல்வது மெய்ம்மையே; எனது செயல்கள் யாவும் அழிவுறு மென்பது, திண்ணம். கலிங்க சேனையைக் கடிமணஞ்செய்வதால் எனக்கு யாது பயன்? கனிகள் நன்னுளைப் பன்னுள் பொறுத்துச் சுட்டியதும் நலமே யாயிற்று' என்றுன். இவ்வாறு அரசன் மொழிய வும், தனது சூழ்ச்சி பயன்பட்டமையைக் கண்கூடாகஞ

கண்ட யௌகந்தராயணன், 'காலத்தையும் இடத்தையும் அறிந்து செய்யுஞ் சூழ்ச்சி என் பயனளியாது?' என்று நினைந்து அகமகிழ்ந்து மன்னவனைப்பணிந்து தன்னில்லத்திற்கு ஏகினன்.

பிறகு, உதயணமன்னவன், வாசவதத்தாதேவிக்குத் தேற்றரவு கூறி, அதனால் அன்னாளது உள்ளக்கருத்தை உய்த்துணர்ந்து, தன் னமைச்சனது மதிவல்லமைக்கு மனங்களித்து அன்றிரவை வாசவதத்தையின் இல்லத்தில் தானே கழித்தனன்.

இங்கு இச்செய்தி இவ்வாறு நிகழ்கையில், முன்னர்க் கலிங்கசேனையின் ரூபலாவண்யங்களைக் கண்டு காதலித்தவர்களில் ஒருத்தனாகிய மதநவேகனென்னும் விஞ்சையன், தான் சங்கரக்கடவுளை நோக்கித் தவம்புரிந்து வரம் பெற்றிருந்தும், தன்னாற் காதலிக்கப்பட்டாள் வேறொருவனது இல்லத்தில் வாழ்ந்து அன்னானையே சிந்தித்து மனமுருகி யுருகி ஆவியுலர்ந் துலர்ந்து அன்னானது நாமத்தையே வாய்பிதற்றுவதைக் கண்டு, அவளைச் சாருமுபாயத்தைக் குறித்துச் சிந்தித்தவண்ணமாக விருந்தான். ஒருநாள் வானவீதிவழியினால் அன்னாள் வதியும் மாளிகைக்கு நேரே வருகையில், அன்னான் 'உதயணனது உருவத்தைக் கொண்டு உள்ளே புகுவேன்' என்று நினைந்து, தன் விஞ்சையின் வல்லமையால் வற்சராசனது வடிவங் கொண்டு, வாயில்காவலர் உதயணனென்றேகருதி வணங்கி நிற்க, கலிங்கசேனையைச் சார்ந்து உதயணனென்றே கருதியதனால் கரைகாணவொண்ணாக் களிப்புக் கடலில் லாழ்ந்து நிற்கும் அவளைக் காந்தருவவிவாகஞ் செய்து கொண்டனன்.

அதுகண்ணுற்ற யோகேசுவரன் 'என் நண்பனது நினைவுக்கு மாறாக நிகழ்ந்ததே!' என்று முதலில் மனமுளைந்து, பிறகு துயிலுகையிற் காணவேணுமென்று தன் நண்பன் மொழிந்ததை நினைந்து தெளிந்து துயிலுங் காலத்தை நோக்கி நின்றனனாக, மதநவேகன் தன்னியற் கைப்படிவத்துட னுறங்குவதை நோக்கினான். நோக்கியதும், மனமகிழ்ந்து யௌகந்தராயணனது புத்திகௌசலத்துக்கு வியந்து, அவனை யணுகி, 'பகலிலாவானம் போலும் பயமிலாப் பொய்கைபோலும், நிகரறு மெய்ம்மை யின்றி நீண்டிடு வசனம்போலும், சகமதி லமைந்து மாண்ட சயம்பெறுநயத்தோ டேய்ந்த, புகலறு முழையராய்வு போற்றிடா மன்ன னாட்சி. எம்போலியர் உணரமாட்டாத விடயங்களையெல்லாம் உமதுஞானக்காட்சியாற் கண்டறிகின்றீர்' என்று வியந்து கூறி, செய்தியையுணர்த்தி விடைபெற்றுச் சென்றனன்.

யௌகந்தராயணன் அவனுக்கு அநுமதிகொடுத்து அனுப்பியபின், மன்னவனை யணுகினான். கதாபிரசங்கத்தில், 'கலிங்கசேனை வரம்புமீறித் தன்விருப்பத்தின்படி நடப்பவளாதலால், அவளைப் பாணிக்கிரகணஞ் செய்தல் தகவன்று. அவள் பிரசேனசித்தின்மீது அன்புகொண்டு அன்னான் நரைமிக்கிருப்பதுகண்டு அவனை நீத்து நும்முருவத்தை நோக்கி நும்மைக் காதலித்தாள். இப்போதும் வேறோராண்மகனைக் காதலிக்கின்றாள்' என்றான்.

உதயணன்:—'குடிப்பிறந்தமகள் எவ்வாறு ஒழுக்கந் தவறி நடப்பள்? என்னரண்மனையில் வேறோர் ஆண்மகன் புகுதற்குத்தான் எவ்வாறு இயலும்?'

யௌகந்தராயணன்:—'சித்தர் விஞ்சையர் முதலியோர் அன்னாளைக் காதலிக்கின்றன ரென்றன்றோ கூறினேன்;

மானுடர் நமது மனையிற் புகுத லரி தென்பது, உண்மையே; புத்தேளிரின் வரத்துப் போக்கைத் தவிர்க்க யார்க்கு இயலும்? நமக்கு ஐயமகலக் கண்கூடாகக் காட்டுவேன்; என்னுடன் வாரும்.'

உதயணசக்கரவர்த்தி, யௌகந்தராயண னுரையைச் செவியேற்றதும் அன்னானுடன் சென்று அவன் சொல்லை ஆராயவேண்டு மென்று கருதி, அற்றையிரவே அவ்வமைச்சனுடன் கலிங்கசேனை வாழு மிடத்திற்குச் சென்றான். நள்ளிரவில் கலிங்கசேனையினருகில் மதனவேகனென்னும் விஞ்சையன் துயில்வதை யௌகந்தராயணன் அரையற்குக் காட்டினான்; அன்னானைக் கொல்லுமாறு இறைவன் முயல்கையில், அது தெரிந்து அவ்விஞ்சையன் விழித்து வானவழியே சடக்கெனப் பறந்துபோயினன்.

சற்றுநேரங்கழித்ததும், கலிங்கசேனை, கண்விழித்து, 'என்னை? இன்று என்னினும் முந்துறக் கண்விழித்து, உதயணமன்னவர் அப்பால் ஏகினரே!' என்று எண்ணமிட்டிருக்கையில், உதயணமன்னவன் யௌகந்தராயணனுடன் உட்புறத்து நுழைந்தான்.

கலிங்கசேனை:—(இறைவனைக்கண்டதும் வியப்பெய்தி) 'ஆர்யபுத்ரரே! இதற்குள் எங்குச்சென்று மந்திரியுடன் வந்தீர்?'

யௌகந்தராயணன்:—'கலிங்கசேனே! யாரோ ஒருவன் மாயத்தால் உதயணமன்னவரது உருக்கொண்டு வந்து உன்னை மணந்தனன் போலும், எம்மிறைவர் உன்னை யணுகவில்லையே.'

கலிங்கசேனை:—(மருமத்தில் வில்லா லடியுண்டவள் போற் கலங்கிக் கண்களில் நீர் தாரை தாரையாய்ப் பெருக, மன்னவனை நோக்கி,) 'என்னை நீர் காந்தருவநெறியாற்

கடிமணம் புரிந்தும், முன்னர்ச் சகுந்தலையைத் துஷ்யந்த மன்னவர் மறந்ததுபோல மறந்துவிட்டீரோ?'

உதயணன்:—'யான் நின்னை மணக்கவில்லை யென்பது சத்தியம்; நான் இதற்குமுன் இங்கு வந்ததும் இல்லை; இப்பொழுதுதான் வந்தனன்.'

யௌகந்தராயணன், இவ்வாறு கூறிய மன்னவனை 'வருக' என்று கூறி உடனழைத்துக்கொண்டு மன்னவன் மாளிகை சேர்ந்தான். உதயணன், பிறகு கலிங்கசேனையைக் கருதுவதையும் நீத்து, மந்திரிமொழியை நினைந்து வாசவதத்தாதேவியையும் அரசையும் புதல்வனையும் இழந்துவிடாது பெற்றமையைக் கருதி மகிழ்ந்திருந்தனன். தேவி வாசவதத்தையும் மந்திரி யௌகந்தராயணனும் தமது தந்திரம் பலித்தமை கண்டு உள்ளங்களித்தனர்.

தனது சுற்றத்தாரை யெல்லாம் நீத்து உதயணனையே நாடிவந்த கலிங்கசேனை, உதயணன் சென்றதும், தன்னினத்திற் பிரிந்த பிணைமான்போன்று மருண்டு கலங்கி வானத்தைநோக்கி, 'எந்தக்குமரன் உதயணமன்னனது வடிவத்தைப் பூண்டு என்னை மணந்தனனோ, அவன் தனது உண்மை வடிவத்தோடு வருக; அவனே எனது கொழுநன்' என்றாள். அவ்வாறு கூறவும், மதனவேகன், தனது உண்மை வடிவத்துடன் கலிங்கசேனையின் முன்னர்த் தோன்றி, தன்வரலாறு முழுவதையும் கூறினன் அன்னவுரையைக் கேட்டதும் தடுமாற்றங்கொண்ட கலிங்கசேனையினுள்ளம் சிறிதுதேறிற்று.

பிறகு, கலிங்கசேனை, தேவபூமியி லுள்ள தன் கணவன் வாழிடத்தைச் சென்று சேர மானுடமகளான தனக்கு வல்லமை யின்மையாலும், தனது பெற்றோரிட்டுச் சொல்லாது காதலுந்த அன்னரை விட்டிட்டு வந்ததுபற்றி

அங்கு மீண்டு செல்ல விருப்ப மின்மையாலும், உதயண மன்னன் அங்கு வாழுதற்கு அநுமதி தந்ததனுலும், தன்கணவனது அநுமதியைப் பெற்று அங்குத்தானே வாழலாயினள்.

---

## பதினறுவது அத்தியாயம் :
## நரவாகனதத்தனது விவாகம்.

சிலகாலஞ் சென்ற பிறகு கலிங்கசேனை வயிறுவாய்த்து ஒரு புதல்வனைப் பெற, அக்காலைச் சிவபிரானது கட்டளையால் விதிக்கடவுள் அப்புதல்வனை மாயையாற் கவர்ந்து ரதிதேவியினமிசமான பெண்மகவை அவண் வைத்துச் சென்றான். அக்குழந்தை பேரழகுடனே ஒளிர்கின்றது கண்ட கலிங்கசேனை, புதல்வன் பிறந்ததைவிட மிக்க மகிழ்ச்சியடைந்தாள்.

உதயணமன்னவன் கலிங்கசேனைக்கு இணையில்லாத அழகுவாய்ந்த புதல்வி பிறந்த செய்தியைக் கேள்வியுற்று, ஈசன் தூண்ட 'கலிங்கசேனையின் புதல்வி நமது புதல்வன் நரவாகனதத்தனுக்குத் தக்கவள் ; ஆதலால், பெருந்தேவியாவள்' என்று வாசவதத்தையின் முன்னர்க் கூறினன்.

வாசவதத்தை:—'ஆர்யபுத்ரரே! என்ன இவ்வாறு கூறுகின்றீர்? நமது புதல்வனே தூய்மை வாய்ந்த குடிப் பிறப்பினன். ஒருத்தனுக்கு வாழ்க்கைப்படுத்துவதாகப் பெற்றோ ரிருக்க, ஒருத்தனைக் காதலித்து மற்றொருத்தனை மணந்த கலிங்கசேனையின் புதல்விக்கும், நமது குமாரனுக்கும் எவ்வாறு பொருத்தம்?'

உதயணன்:—(ஆராய்ந்து) 'இப்போது யான் இவ்வாறு சொல்லவில்லை யாரோ ஒருவன் என்னுட்புகுந்து என்னை இவ்வாறு சொல்விக்கின்றனன். கலிங்கசேனையோ. ஒருத்

தனுக்கு வாழ்க்கைப்பட்டவளேயன்றி அபிசாரிகை யல்லள்; இவட்கு அபிசாரிகை யென்ற பேச்சுப்பட்டது முன்னைய பிறவியிற் செய்த தீவினைப் பயனே யாகும். ஆகாயவாணி யும் நரவாகனதத்தனுக்கு மனைவியாகக் கலிங்கசேனையின் புதல்வி பிறந்தன ளென்று மொழிகின்றது.'

**யௌகந்தராயணன்:**—'கண்ணுதற் கடவுள் காமனை யெரித்த காலையில், ரதிதேவியானவள் சரீரத்துடன் தன் கணவனை மீண்டும் பெறுமாறு அப்பெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிய, அவளது தவத்திற்கு உவந்த அப்பெருமான் மானுடலோகத்தில் நினதுகருத்து முற்றுப்பெறு மென்று அருள்செய்துள்ளான். அதற்கு ஏற்ப, நமக்குப் புதல்வன் காமதேவனது அமிசமாக உதித்துள்ளா னென்று வான வாணி மொழிந்த தன்றோ! ஆதலால், இவள் ரதிதேவியின் அமிசமாகப் பிறந்திருக்க வேணும். கலிங்கசேனை சருவுயிர்க் கையில் அவணிருந்த முதுக்குறைவினு ளொருத்தி, 'பிறந்த குழந்தை திடீரென்று காணுததாக, அந்நொடியில்தானே அவண் வேறொருகுழவி கிடந்தது; இதனை நம்மிடத்து உணர்த்தும் பொருட்டே யான் வந்தது' என்று என்னி டத்து முன்னர் மொழிந்துசென்றது உண்டு. ஆகவே,பிறந்த குழந்தையை ஒளித்திட்டு, நம்மகனுக்கு ஏற்ப ரதிதேவியி னமிசமான பெண்மகவைக் கடவுளர் மாற்றி வைத்திட் டனர்போலும்' என்றான்.

எல்லோரும் அவ்வதிசயத்தைக் கேட்டு மகிழ்ந்தனர். அவ்யௌகந்தராயணனது மொழியைக் கேட்டு, மன்னவ னும் தேவியும் அவ்வண்ணமே யிருக்கலா மென்று எண் ணினர். அக்குழவியின் பெருஞ்சௌந்தரியத்தைக் கண் ணுற்றூர் யாவரும் அப்பெண் மகவை ரதிதேவியென்றே மதித்தனர்.

அப்பெண்மகவும், மதனமஞ்சுகை யென்று பெயரிடப்பெற்று நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்தது. நரவாகனதத்தனும் மதனமஞ்சுகையும் வளர்ந்துவருகையில், உதயணமன்னவன் அவ்விருவர்க்கும் கடிமணஞ்செய்தல் கடவுளுக்குச் சம்மத மென்றே யறுதியிட்டனன். அதனையுணர்ந்த கலிங்கசேனையும் பெருமகிழ் வெய்தினள்.

பிறைச்சந்திரன் வளர்ந்து பதினாறுகலைகளும் நிரம்பி விளங்குவதுபோன்று பதினாறுபிராயமும் நிரம்பிய நரவாகனதத்தனை, ஆசிரியர் வியாஜமாக விருக்க, எல்லாக் கலைகளும் தாமே சென்று சேர்ந்தன. அதுகண்ட மன்னவன், தனதுமந்திரிமாரைக் கூவி, அன்னாருடன் ஆலோசித்து, ஒருகுறைவு மின்றி எல்லாப்பண்பும் நிறைந்து விளங்குந் தனது புத்திரனுக்கு இளவரசுபட்டஞ் சூட்டுமாறு அறுதியிட்டனன்.

பிறகு, உதயணசக்கரவர்த்தி பட்டங்கவித்தற்கு வேண்டிய பண்டங்களைக் கூட்டி, தன் மகனுக்கு இளவரசுபட்டஞ் சூட்டினான். பட்டாபிஷேகஞ்செய்யுமுன் மகிழ்வால் தோன்றிய பெற்றோரது கண்ணீர்கள் குமரனை முன்னர் நீராட்டின; பின்னரே மந்திரநீர் கொண்டு மறையவர் நீராட்டினர். அக்காலத்துப் பல்லியங்கள் முழங்கின; வானுலகினின்று மலர்மழை விழுந்தது; தேவதுந்துபிகள் ஒலித்தன; கந்தருவர் பாடினர்; அமரமங்கையர் ஆடினர்.

வற்சராசன் இளமைதொட்டுப் பாங்கராய்ப் பயில்கின்ற யௌகந்தராயணனது புதல்வன் மருபூதியை அமைச்சுத்தொழிலிலும், ருமண்வானது புதல்வன் அரிசிகனைப் படைத்தலைமையிலும், வசனந்தகனதுபுதல்வன் தபந்தகனை விளையாட்டுத் தொழிற்கு நண்பனாக விருத்தலிலும், இத்யக

னென்பவனது புதல்வன் கோமுகனை வாயில்காத்தலினும் பிங்கலிகையென்னும் அந்தணமாதின் புதல்வர் வைசுவா நரன் சாந்திசோமன் என்பவரைப் பௌரோஹித்யத்தி லும் என இவ்வாறு தன்மைந்தனுக்கு உரிமை பூண் டொழுகுமாறு ஏவினன். அதற்கு ஏற்பவே, ஆகாய வாணி 'மருபூதி முதலியோர் நரவாகனதத்தனது தொ ழின் முழுவதையும் சாதிப்பர்; ஆயினும், கோமுகனென் பானே நரகவாகனதத்தனுக்கு உயிர்போல் ஒன்றியிருப்பான்' என்றது.

நரவாகனதத்தன் இளவரசனாகிப் புவியைப் போற்று கையில் எல்லாம் ஒருகுறைவுமின்றி நிரம்பியிருக்க, வறு மை பிணி பஞ்சம் கள்ளம் முதலியன தாம் இருக்க இடம் பெறாது மாய்ந்தொழிந்தன; எல்லோரும் களிப்புக்கடலில் மூழ்கினர். இதுநிற்க:

கலிங்கசேனை ஒருகால் தனது இன்னுயிர்ப்பாங் கியை நினைக்க, சோமபிரபை தன் கணவனது உடன் பாட்டின்மீது அன்றிரவு தன் தோழியை நணுகி, அள வளாவித் தன் கணவன் மூலமாகத் தானுணர்ந்த எதிர் காலத்து வரலாறுகளை யெல்லாம் கூறி மகிழ்வித்துத் தனது விஞ்சையின் மகிமையால் மதநமஞ்சுகையின் பொருட்டு ஒரு பூங்காவனத்தையும் நிருமித்துச் சென்றாள். மறுநாட் காலையில் அதுகண்ட நகரமாந்தரனைவரும் பேரிறும்பூ தெய்தினர். மன்னவன் முதலியோர் வினவ, கலிங்கசேனை அப்பூங்காவனம் இயன்றவகையைத் தெரிவித்தாள்.

தனது மைந்தன் எல்லாக்கலைகளிலும் வல்லுநனா யிரு த்தலை ஆய்ந்து அறிந்த உதயணமன்னவன், தான் மருகி யாகக் கொள்ளவேணு மென்று விரும்பிய மதனமஞ்சு கையை நிருத்தகீதங்களிற் பயில்வித்தான்; அன்னாள் அக்

கலைகளிற் பயிலப் பயில, நரவாகனதத்தனது மனம் திங்களைக் கண்ட கடல்போன்று பொங்குத லாயிற்று. மன்னவகுமாரன் ஒருநொடிப்பொழுது மதனமஞ்சுகையைக் காணாவிடினும் உயிராற்றகில்லாத் தன்மையை யடைந்தனன்: மதனமஞ்சுகையும் ஒருநொடிப்பொழுது நரவாகனதத்தனைக் காணாவிடினும் இதயந் துடிப்பவளாயினள்.

இவ்வாறு இவரிருவரும் காதல் மீக்கூர்ந்ததை இறைவன் உணர்ந்து அன்னார்க்குக் கடிமணஞ்செய்விக்குங் கருத்தைப் பின்னுந் திடனாகக் கொண்டான்: ஆயினும், 'உலகத்தார் அபிசாரிகையின் மகளைத் தன் புதல்வனுக்கு அரசன் மணஞ்செய்வித்தா னென்று ஏசுவரோ!' என்று ஆசங்கை கொண்டனன்.

அப்பொழுது, சிவபெருமானருளால் ஓராகாய வாணி தோன்றி, 'எமது கட்டளையின்படி நம்விழித்தீயாலெரிந்த கருப்புவில்லியே நரவாகனதத்தனாகப் பிறந்துள்ளான். அவன் கடிமணஞ் செய்துகொள்ளும்பொருட்டே ரதீதேவியைப் படைத்து விடுத்துள்ளோம். அவள்தான் மதனமஞ்சுகை: ஆகலின், சிறிதும் ஐயுறவு வேண்டா' என்றது. அதுகேட்டு உதயணமன்னவன், 'இனிக் கடவுளின் கட்டளையை மீறுதல் அடாது' என்று துணிந்து, கணிகளைக் கூவி, நன்னாள் குறித்துக் கலியாணங் கோடித்துப் பெருஞ் சம்பிரமமாகத் திருமணத் திருவிழாவை நிறைவேற்றினன்.

சிலநாள் கழிந்ததும் நரவாகனதத்தன் தனது தந்தை உதயணமன்னவனது காளோலக்கத்தில் வீற்றிருக்கையில், வச்சிரபிரபனென்னும் விஞ்சையன் தோன்றித் தன்பெயர்க் காரணத்தைக் கூறி, 'நான் இமயமலையின் பின்புறத்தில் வச்சிரகூட மென்ற நகரத்தில் வாழ்வேன்; 'என்னருளால் தோன்றும் விஞ்சையர்சக்கரவர்த்தியினது திருவடிகட்கு

அன்பு பூண்டு ஒருவராலும் வெல்ல வொண்ணாத ஆற்றலுடன் வாழ்ந்திடுக' என்று என் தவத்திற்கு உவந்து சிவபிரான் வர மளித்துள்ளார் : ஆகவே, எம்மிறைவனைப் பணியு மாறு வந்துள்ளேன். வற்சராசனது குமரன் மானுடனாயினும், காமனது அமிச மாகத் தோன்றி, தென்கூறு வடகூறு என்னும் ஈரிடத்துள்ள விஞ்சையர்க் கெல்லாம் தலைமை பூண்டு ஒருகற்பகாலம் சக்கரவர்த்தி யாவனென்று உரகாபரணன் திருவருள் சுரந்திருத்தலை எனது விஞ்சையின் மகிமையால் அறிந்தேன்' என்று கூறி நரவாகனதத்தனைப் பணிந்து சென்றனன்.

பின்னர், நரவாகனதத்தன் இரத்திநப்பிரபை கர்ப்பூரவதி அலங்காரவதி முதலியோரை மணந்து இனிது வாழ்ந்திடலாயினன்.

இவ்வாறு இருக்கையில், ஒருகால், மாநசவேகனென்னும் விஞ்சையனொருவன் மதனமஞ்சுகையைக் கண்டு காதலித்துக் கவர்ந்து தன்னகராகிய ஆஷாடபுரத்திற்குச் சென்றான். இராவணனைப் போலவே மாநசவேகனும் மாதரை வலியத்தீண்டாதவாறு சாபமொழி பெற்றுள்ளானாதலின், அன்னாளை வலிய மணஞ்செய்து கொள்ள வியலவில்லை. அப்போது அவளைப் பிரிந்த நரவாகனதத்தன் பட்ட துயரத்தை இத்துணை யென்றேனும் இன்ன தன்மைய தென்றேனும் நம்மால் எடுத்துச்சொல்ல வியலுமோ?

இன்னணம் நரவாகனதத்தன் அலக்கணுறுகையில், மாநசவேகனது உடன்பிறந்தவளாகிய வேகவதி யென்பவள் நரவாகனதத்தனை யணுகி மணந்து மதநமஞ்சுகையின் செயலைத் தெரிவித்துச் செல்ல, பிறகு, அவளது தோழியாய பிரபாவதி யென்னும் மாதும் நரவாகனதத்தனை

மணந்து, தனது விஞ்சைமகிமையால் மதனமஞ்சுகை யிருக்கு மிடத்தில் அன்னானைச் சேர்த்தனள்.

அப்போது கௌசாம்பிநகரியில் நரவாகனதத்தனைக் காணாமையால், உதயணன்முதலியோர் இடுக்கணெய்தி நின்றனராக, யாழ்முனிவர் ஆண்டுத் தோன்றி நிகழ்ந்த வரலாற்றை யுணர்த்தி அன்னாரைத் தேற்றினர்.

நரவாகனதத்தன், பிரபாவதியினது விஞ்சைமகிமையால் அன்னாளதுவடிவங்கொண்டு கரந்து உறைகையில் ஒருகால் அவள் வெளிச்சென்றனளாக, அவளதுசந்நிதியில்லாமையால் தன்னியற்கைவடிவத்தினனாயினன். பணியாளர் அச்செய்தியை மாநசவேகனுக்கு உணர்த்தினர். மாநசவேகன் கடுஞ்சீற்றங் கொண்டு நரவாகனதத்தனை நலியுமாறு வர, அவ்விஞ்சையன் தாய் தனது புதல்வி வேகவதியின் மணவாளனென்ற காரணத்தால் அன்பு கொண்டு அந்நரவாகனதத்தனைக் கொன்றிடாதவாறு விலக்கினள்.

பிறகு, வெளிச்சென்றிருந்த பிரபாவதி நிகழ்ந்த செயலைத் தன்விஞ்சைமகிமையா லுணர்ந்து, பைரவ வடிவங் கொண்டு வந்து, மாநசவேகனை நிக்கிரகித்து, நரவாகனதத்தனை அந்த ஆஷாடபுரத்தினின்று ருசியமூகபருவதத்திற் சேர்த்தனள். அங்கு, தநவதி யென்னும் விஞ்சைமகள் தன்புதல்வி அஜிநாவதியை நரவாகனதத்தனுக்கு அளித்து அன்னானைக் கௌசாம்பிநகரியிற் சேர்த்தனள்.

———

பதினேழாவது அத்தியாயம்:

## நரவாகனதத்தன் வித்தியாதர சக்கரவர்த்தியாதல்.

பின்னர் அந்தத் தநவதியின் பிரோணையால் அவளது சுற்றத்தார் யாவரும் குழுமிவந்து, நரவாகனதத்தனை நணுகி, ‘மானசவேகன் கிரிமுண்டன் முதலிய மாற்றாராகிய விஞ்சையரை வென்று விஞ்சையர்சக்கரவர்த்தி யாகுமாறு சித்தக்ஷேத்திரத்தில் தவம்புரிக’ என்று ஓத, நரவாகனதத்தனும் அன்னாரது மாற்றத்திற்கு இசைந்து அமிருதபிரபனென்னும் விஞ்சையர்க்கரசனது துணையினால் கைலாயத்தைச் சேர்ந்து, மதிமுகிழ்முடித்த வேணிப் பெருமானை நோக்கிக் கடுந்தவம்புரிந்தான். அக்கடவுளும் நரவாகனதத்தனது கடுந்தவத்திற்குத் திருவுளமிரங்கி, எல்லா விஞ்சைகளையும் திருவருள் பாலித்ததோடு விஞ்சையர்சக்கரவர்த்திக்கு உரிய ஆயிரவிதழ்த்தாமரை வானவூர்தியையும் தந்தனர்.

அதனைப் பெற்றபிறகு, நரவாகனதத்தன் தான் மணந்த விஞ்சைமாதரது சுற்றத்தாரெல்லாம் துணையாய் வர, ஆகாயவாணியின் மொழிப்படியே மருபூதி முதலிய துணைவரோடுஞ் சென்று, இமயமலையின் தென்பாரிசத்திலுள்ள மாநசவேகன் முதலிய மாற்றாரான விஞ்சையரையெல்லாம் வென்றனன். பின்பு, உத்தரசேடியில் வாழ்கின்ற மந்தரதேவனென்னும் விஞ்சையர்சக்கரவர்த்தி, தட்சிணசேடி விஞ்சையரையெல்லாம் நரவாகனதத்தன் வென்றதைச் செவியுற்று, இவனுடன் பொருமாறு உறுதிகொண்டான். அவனைச் சாரரது முகத்தினுலுணர்ந்த நரவாகனதத்தன், விடைக்கொடியோனது திருவருளை முன்னிட்டு அன்னான்மீதும் படையெடுத்துச் சென்றனன். உத்தர

சேடியில் நரவாகனதத்தனுக்கும் மந்தரதேவனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது; அச்செருவில், ஆகாயமெங்கும் வில் வாள் முதலிய ஆயுதங்களும், பூமியெங்கும் சூரர்களது முடிகளும் புரண்டன: உதிரவெள்ளம் கடல்போலப் பொங்கி யெழுந்தது; வெட்டு, குத்து, கொல்லு என்றாற் போன்ற கடும்பேச்சுக்களே எம்மருங்குங் கேட்டன. அப் பெரும் போரில் நரவாகனதத்தன் மந்தரதேவனைத் தரையில் வீழ்த்தி, அவன் மார்பின்மீது தன்தாளை வைத்து, அவனது முடியைத் துணிக்குமாறு வாளை யோச்சுகையில், அவனது தங்கை மந்தரதேவி நரவாகனதத்தனைப் பணிந்து வேண்டினள். அதனால், அவன் சிரசைக் கொய்வதை விட்டிட்டு அன்னாளுக்குத் தேற்றரவு கூறினான்.

மந்தரதேவன் நரவாகனதத்தனை வணங்கி, இரு சேடிகளையும் ஆளுமாறு வாழ்த்தித் தான் தவஞ் செய்யுமாறு கானகஞ் சென்றனன்.

இவ்வாறு நரவாகனதத்தன் மாற்றாரை யெல்லாம் வென்று விளங்கக் கண்டு, மந்திரிமார் உறங்கியெழுந்தவர் போன்று பெருமகிழ்ச்சி கொண்டனர்: நரவாகனதத்தன் இருபுறத்துச் சேடியிலும் முன்னரே யிருந்த அரசர்களை அவ்வவ்விடங்கட்கு இறைவ ராக்கினன். அவ்வண்ணமே அவன் யாவரிடத்தும் அன்புகொண்டு நடந்ததனாலும், ஆகாயவாணியால் அந்நரவாகனதத்தனது மகிமையைக் கேட்டிருத்தலானும், சிவபெருமானது திருவருளைப் பெற்றுப் பெறற்கரிய சித்திகளைப் பெற்றதனாலும், விஞ்சையர் மங்கையர் பலரை மணந்ததனாலும், நரவாகன தத்தனை 'மானுடன் அல்லன்; திவ்வியபுருஷனே' என்று தெளிந்து, விஞ்சையர்மண்டலம் முழுதும் அன்னான்மீது பேரன்பு பூண்டு பணிந்து நடந்தது.

பிறகு, நாரதர் மொழிப்படியே, நரவாகனதத்தன் தபோவனத்தில் தவஞ் செய்துகொண் டிருந்த மந்தர தேவனது தந்தையாகிய அகம்பநரென்ற ராஜரிஷியைக் கண்டு பணிந்தனன். அவர் ஞானதிருஷ்டியால் யாவும் உணர்ந்தவராதலின், தமது மகளான மந்தரதேவியை நரவாகனதத்தனுக்கு மணஞ் செய்வித்து, இடபமலையில் வித்தியாதரசக்ரவர்த்தி யென்னும் மகாபிஷேகமுஞ் செய்துகொள்ளுமாறு திருவருள் புரிந்தனர். அப்போது, அங்கு விஞ்சையர் தமது தவத்திற்கு ஏற்றவாறு மகாபிஷேகத்திற்கு உரிய பொருள்களை யெல்லாம் சேர்த்தனர்.

அப்பால், நரவாகனதத்தன் களத்திரங்களோடும் மந்திரிமாரோடும் விஞ்சையர்குழுவோடும் இடபமலையைச் சார்ந்தனன். அங்கு, 'மகிஷிபட்டஞ் சூட்டுவது யாவருக்கு?' என்று ஓர்வினுப் பிறக்க, 'ரதீதேவியினம்சமான மதனமஞ்சுகையே அதற்கு ஏற்றவள்' என ஆகாயவாணி மொழிந்தது.

பின்னர் சாந்திசோமன் குறித்த நன்னாளில் மங்கள தூரியங்கள் முழங்க, அரமங்கையர் இன்னிசை பாட, அந்தணர்கள் ஸ்வஸ்திவாசநங் கூற, அரதனச்சிங்காதனத்தில் வீற்றிருக்கும் நரவாகனதத்தன் முடிமீது விஞ்சையர் சித்தர் முதலியோர் மந்திரபூதமான தீர்த்தங்கள் கொண்டு அபிடேகஞ் செய்தனர். அக்காலையில், தேவதுந்துபிகள் முழங்கின; தேவவிருடியர் பல்லாண்டு பாடினர். கற்பக மலர்மாரி இடைவிடாது பொழிந்தது; அபிடேகமானதும், இந்திரனருகில் சசிதேவிபோல, மதனமஞ்சுகை சிங்காதனத்தின்மீது நரவாகனதத்தனது அருகில் விளங்கினள், அப்போது நரவாகனதத்தன் விஞ்சையர்க்குச் சக்கரவர்த்தியா

கும் பெரும்பதவியை முன்னர்க் கண்ணுதற்கடவுள் திருவருள் சுரந்தபடியே பெற்று, விஞ்சையரெல்லாம் தன்கீழ் அடங்கிவாழ, விஞ்சையரது மண்டலத்தில் தனிச்செங்கோல் நடாத்தினன்.

ஒருகால், நரகவாகனதத்தன், அவ்விஞ்சையருலகிலுள்ள நுகர்ச்சிகளைத் தன் பெற்றோரையும் நுகர்விக்க விரும்பி, கௌசாம்பி சென்று, தனது பெற்றோர் முதலியோரைக் கண்ணுதற்கடவுளின் திருவருளாற் பெற்ற வானவூர்தியின்மீது ஏற்றித் தான் அரசு புரியும் இடபமலையிற் சேர்த்து இனிதாக அமரச் செய்தனன்.

சிறிது காலம், உதயணமன்னவன் தனது மனைவியருடனும் மந்திரிமாருடனும் விஞ்சையருலகின் போகத்தை நுகர்ந்தும், மானுட னுகலின் அவணின்று தன்னாட்டிற்குச் செல்லவேண்டுமென்று நசைகொண்டு, 'விஞ்சையர் போகம் யாவருக்குத்தான் பெருமகிழ்ச்சியை யூட்டாது? ஆயினும், பிறந்திடத்துள்ள நண்பு ஆண்டு இழுக்கின்றது: ஆகையால், யான் செல்லுகின்றேன். நீ இந்த விஞ்சையர் செல்வத்தை நீடூழி நுகர்ந்து வாழ்ந்திடுக. விஞ்சையர்க்கெல்லாம் இறைவனாக வீற்றிருக்கக் கண்டமையால், நின்னைப் பெற்ற பயன் யாம் பெற்றோம்; வேண்டும் பொழுது எம்மை அழைத்துக்கொள்க' என்று தன்புதல்வனிடத்துத் தன் விருப்பத்தைத் தெரிவித்தனன்.

நரவாகனதத்தன் பெற்றோரைப் பிரிந்து தனித்து உறைதற்குச் சற்றுங் கருத்தில னாயினும், பெற்றோர் கருத்துக்கு இணங்க வொழுகுதல் புதல்வர்க்குக் கடமை யாதலால், தனது முளரிக்கண்களிலிருந்து வெண்முத்து உதிர மனத்துயரோடு இரங்கி, அவரது விருப்பின்படியே அன்னாரைக் கௌசாம்பியிற் சேர்த்துவருமாறு விஞ்சையரசனை

கிய தேவமாயனென்பவனை விளித்துச் சொல்ல, அவனும் உதயணமன்னவன் முதலியோரை வானவூர்தியி லேற்றிக் கௌசாம்பியிற் சேர்த்து, அம்மன்னவனைப் பணிந்து விடைபெற்றுத் தம்முலகத்துக்கு மீண்டனன். இது நிற்க:

---

## பதினெட்டாவது அத்தியாயம்:

## உதயணன் சுவர்க்கஞ் சார்தல்.

ஒருகால் உஞ்சையினின்று வந்த ஒற்றுவன் சண்டமகாசேநராசன் பரலோகஞ் சார்ந்ததையும் அங்காரவதி அநுமரணஞ்செய்ததையும் திடீரென்று கூறக்கேட்டு, உதயணமன்னவன், அறிவுகலங்கிக் கையற்று உயிர்ப்பொடுங்கிக் கீழ்விழுந்தனன்; சிறிதுநேரந் தாழ்த்து அறிவுதெளிந்து, தனதுதேவி வாசவதத்தையுடன் தன்மாமன்மாமியர் உயிர்நீத்தமைக்கு நெடுநேரம் இரங்கினன். அப்போது மந்திரிமார் 'கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி மருங்கறக்கெடுதற்கு இடமான இப்பிரபஞ்சத்தில் எதுதான் நீடுநிற்கும்? ஒன்றும் நிலையா தாதலின், அம் மன்னவர் இறந்தது இயல்பே. அன்னாரைக் குறித்து இரங்கவேண்டா: ஏனெனின், உதயணமன்னவர் அவருக்கு மருகனும், கோபாலகன் மகனும், நரவாகனதத்தன் பேரப்பிள்ளையு மாக அமைந்திருக்கின்றன ரன்றோ? அவருக்கு இப்போது என்ன குறை உளது?' என இவ்வாறு தேற்றினர். அவ்வாறு, தேற்றவே அரையன் ஒருவாறு தெளிந்து இறந்தார்க்கு நீர்க்கட னீந்தனன்.

பின்பு, உதயணசக்கரவர்த்தி, தன் தந்தை இறந்ததனாற் பேரிடர்ப்படுகின்ற மைத்துனன் கோபாலகனை நோக்கி, தானும் கண்ணுங் கண்ணீரு மாக நின்று, 'எழுந்து உஞ்சைநகர்க்குச் செல்க: வாழையடி வாழையாக வந்த

அரசைக் கைக்கொள்க. அங்கு அரசின்றி மக்கள் வாடு கின்றன ரன்றோ?' என்று கண்ணீரினால் தழுதழுத்த குர லுடன் கூறினன். அச்சொல்லைச் செவியேற்ற கோபால கன், 'இறைவ! நும்மையும் எனது தங்கையையும் ஒரு நொடிப்பொழுதேனும் விட்டகன்று உயிராற்றகில்லேன்; மேலும், தந்தையின்றிப் பாழாகத் தோன்றும் உஞ்சைநக ரையும் காணகில்லேன். என் விருப்பத்திற்கு இணங்கி, எம்பி பாலகனே அரசுரிமை பூண்பானாக' என்று தழு தழுத்தகுரலுடன் அழுதவண்ணங் கூறினன். இவ்வண் ணம் கூறிக் கோபாலகன் மீண்டு உஞ்சைக்குச் செல்ல விருப்பமின்றி யிருக்கவே, உதயணமன்னவன், படைத் தலைவனாகிய ருமண்வானை உஞ்சைநகர்க்குப் போக்கி, அன் னானைக்கொண்டு அண்ணனது அநுமதியினால் இளையோன் பாலகனை அந்நாட்டிற் பட்டாபிடேகஞ்செய்வித்தனன்.

உதயணசக்கரவர்த்தி, உலகத்துப்பொருள் யாவும் நிலையாமை கண்டு, ஐம்புலவாசையை அற நீத்து, யௌ கந்தராயணன் முதலிய மந்திரிமாரை நோக்கி, 'இப்பிரபஞ் சத்தின்கண் எல்லாப்பண்டங்களும் முதலிற் சுவைசெறிந் தனபோலத் தோன்றினும், இறுதியில் சுவையற்றனவே யாம். யாம் அறம்புரிந்தோம்; பகைஞரை ஓட்டினோம்; இன்பம் நுகர்ந்தோம்; எமது புதல்வன் விஞ்சையர்க்கு இறைவனாமையையும் கண்ணுற் கண்டோம்; இப்போழ் தோ பருவஞ் சென்றது; கூற்றுவனிடத்துத் தருமாறு நரை கூந்தலைப் பற்றியிட்டது; திரை உடலம் முழுவதும் அரசுபுரிகின்றது; சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையின ராயினோம்; பற்கழன்று பண்டம் ஒழியுறுகின் றது. ஆகவே, இனி, காலஞ்சரகிரியைச் சார்ந்து முறை வழுவா நெறியால் நிலையற்ற இவ்வுடலத்தை நீத்து, நிலை

யான பதவியைச் சார்வேம்' என்று தன் கருத்தைத் தெரிவித்தனன். அதனைச் செவியுற்ற மந்திரிமாரும் வாசவதத்தையும் ஆராய்ந்து இறைவனோடு ஒத்த கருத்தினராய், 'இறைவ! நுமக்கு விருப்பம் யாதோ, அவ்வாறே புரிக: யாங்களும் நும்மருளால் நும்மைப் பின் பற்றிவந்து உத்தமமான கதியைப் பெறுவேம்' என்றனர்.

இவ்வண்ணம் தன்னோடொத்த மந்திரிமார் கூறவே, உதயணசக்கரவர்த்தி, இறைமைபுரியுந் திறமை வாய்ந்த கோபாலகனை விளித்து, 'நரவாகனதத்தனும் நீயும் எனக்கு ஒரு தன்மையிரே: யான் நின்னையும் எனது புதல்வன் போலவே கருதியிருக்கின்றேன். ஆகலான், யான் வற்சநாட்டுக்கு நின்னை இறைவ னாக்குகின்றேன். நீ என் அநுமதியின்மீது இந்நாட்டிற் செங்கோல் நடாவுக' என்றான். உதயணசக்கரவர்த்தி இன்னணம் கூறவும், கோபாலகன், அரையன் கூற்றுக்கு இணங்கா னாகி, 'நீவிர் எந்நெறியிற் செல்கின்றீரோ, அதுவே யான் செல்லும் நெறியு மாகும்; ஒரு கணப்பொழுதேனும் யான் நும்மைவிட்டுப் பிரியகிற்றிலேன்' என்ற இம்மொழியையே இடைவிடாது பகர்ந்த வண்ணமாக இருந்தனன்.

அப்பொழுது, உதயணசக்கரவர்த்தி, கோபாலகனை நோக்கி, 'நீ இத்துணைக்காலம் என்னெஞ்சம் போல ஒழுகி வந்ததும் பொய்ம்மையென்றே கருதுகின்றேன். ஒருகால், அரசை விட்டுச் செல்லுகின்ற இவன் மொழிப்படி நடப்பதனால் நமக்கு யாது பயன்? என்று நினைந்தனை போலும்' என்று சினந்தவனை யொப்பக் கூறினன். இறைவன் இவ்வாறு கடுமொழியாகக் கூறவே, கோபாலகன் மனமுளைந்து வாய்திறவாது கண்ணீர் ஆறாய்ப்பெருகப் புலம்பிய வண்ண மாகி, உடன் செல்லவேண்டு மென்னுங்

கருத்தைக் கடைப்பிடித்தும் அப்பொழுது உடன்செல்லாது நின்றனன்.

உடனே, உதயணசக்கரவர்த்தி யானையின்மீது ஏறித் தன்னிருதேவியருடனும் உழைஞருடனும் புறப்பட்டான். கௌசாம்பிநகரியினின்று இறைவன் வெளிப்படவும், அந்நகரத்து மாந்தரனைவரும் விம்மி விம்மிப் புலம்பிப்புலம்பிக் கண்ணீரை நிரைநிரையாய்ப் பெருக்கிக் கதறிய வண்ணம் அவ்விறைவனைப் பின்றொடரலானார்கள். அம்மாந்தரனைவரையும் நோக்கி, உதயணன் 'நீவிர் கலங்கவேண்டா: நம்மையெல்லாம் கோபாலகன் நன்னர்ப் பாதுகாப்பன்' என்று மொழிந்து தேற்றி, அவர்களை நகரின் கண்ணேயுறையுமாறு விடுத்து, காலஞ்சரகிரியை நோக்கி நடந்தான். அம்மலையை யணுகியதும், அம்மலைமீது ஏறி, கொல்லேற்றுக் கொடியுடையாரை வணங்கி, எஞ்ஞான்றும் தனக்குத் துணையாயிருந்த கோடவதியென்னும் யாழைக் கையிற் கொண்டு, பக்கத்துத் தேவிமாருடனும் உழைஞருடனும் மலையுச்சியின்று கீழே குதித்தான்.

தன்னுடன் வந்தாரோடு மலையினின்று கீழே விழும் போதுதானே, உதயணன் தனது மானுடதேகத்தை நீக்கித் திப்பியமேனி பெற்று, வலவனேவா வானவூர்தியின் மீது ஏறிச் சுவர்க்கஞ்சேர்ந்து இனிது வாழலாயினன்.

# உதயணன் சரிதையினது

## அபிதாந விளக்க வகராதி.

அகம்பனர் - மந்தரதேவனது தந்தையாகிய ராஜரிஷி.

அங்காரகாசுரன் - அங்காரவதியின் தந்தை.

அங்காரவதி - வாசவதத்தையின் தாய்.

அஜிநாவதி - நரவாகன தத்தனால்ருசியமூகமலையிலே மணக்கப்பெற்றவள்; தநவதி யென்பவளது மகள். இவளைச்சார்ந்தவர்களின் துணையினால் தான் நரவாகனதத்தன் வித்தியாதர சக்கரவர்த்தியாயினான்.

அபிமந்யு-உதயணனது வமிசத்து முன்னோன்.

அம்ருதப்ரபன் - நரவாகன தத்தனைக் கைலைமலையிற்சேர்த்தவன்.

அயோத்தி - உதயணன் தாயாகியம்ருகாவதிபிறந்தவூர்.

அரிசிகன் - ருமண்வானது புதல்வன்.

அலங்காரவதி-நரவாகன தத்தனது மனைவியருள் ஒருத்தி.

அவந்திகை - வாசவதத்தை பிரமமணிவேடம்பூண்டு பத்மாவதியின் கிருகத்தில் வசித்த போது பூண்ட பெயர்.

ஆஷாடகன் - வாசவதத்தையினது யானைப்பாகன்.

ஆஷாடபுரம் - நரவாகனதத்தனது மாற்றானாகிய மாநசவேகனது நகரம்.

இடபமலை - நரவாகனதத்தனுக்குப் பட்டாபிஷேக மான இடம்.

இத்யகன் - கோமுகனது தந்தை: இவன்மறுபெயர் - நித்யோதித னென்பது.

உச்சயினி - வாசவதத்தையின் தந்தையான சண்டசேனமன்னனது ராஜதானி; உஞ்சை எனவும் வழங்கும்; அவந்தி நாட்டிலுள்ளது.

உதயணன் - கதாநாயகன்; இவன், பாண்டவர் வமிசத்து உதித்தவன்: வற்சராசன் என்றும், வத்தவன் என்றும் வழங்கப்படுவான். (உதயணன் என்ற சொல்-உதயநன் என்பதன்பாகதச்சிதைவு.)

உதயாசலம்-ம்ருகாவதியைக் கருடன் விட்ட இட மாகிய மலை.

கதாஸரித்ஸாகரம் - ப்ருஹத்கதையின் ஸாரமாகிய வடமொழி வழிநூல்.

கர்ப்பூரவதி - நரவாகனதத்தனது மனைவியருள் ஒருத்தி.

கலாவதி - கிருதவர்மாவின் மனைவி; ம்ருகாவதியின் தாய்.

கலிங்கசேனை - கலிங்கதத்தன்மகள்; இவள், உதயணனை மணக்க எண்ணி யிருக்க, மதநவேக னென்னும் விஞ்சையன் உதயணனது வடிவம் பூண்டு இவளை மணந்தான்.

கலிங்கதத்தன் - தட்சசிலைக்கு அரசன்; கலிங்கசேனையின் தந்தை.

காஞ்சநமாலை-வாசவதத்தையின் தோழி

காணபூதி-சுப்பிரதீகன் என்னும் இயக்கன் பிசாசனுயிருந்தபொழுது கொண்ட பெயர்.

காலஞ்சரம் - ஓர்மலை; இம் மலையினின்று உதயணன் முதலோர் கீழ்க்குதித்து நற்கதி பெற்றனர்.

கிரிமுண்டன் - நரவாகனதத்தனுக்கு மாற்றானுகிய விஞ்சையன்.

கிருதவர்மா-ம்ருகாவதியின் தந்தை; அயோத்தி மன்னவன்.

கீர்த்திசேநன் - குணாட்யனது தந்தை.

குணதேவன் - குணாட்யனது மாணவருள் ஒருத்தன்.

குணாட்யன் - பெருங்கதையைச் செய்தவன்; மால்யவானென்பவன் சாபத்தால் இவனுகப் பிறந்தான்.

கோபாலகன் -வாசவதத்தையின் உடன்பிறந்தோன்.

கோமுகன்-இத்யகனது புதல்வன்.

கோஷவதி - வசுநேமி உதயணனுக்குத் தந்த வீணை.

கௌசாம்பி - உதயணமன்னவனது ராஜதானி.

சண்டமகாசேனன் - வாசவதத்தையின் தந்தை. இவனுக்கு மகாசேந னென்றும் பெயர் உண்டு.

சதாநீகன் - உதயணமன்னவனது பாட்டன்.

சமதக்நி-உதயாசலத்தில் வசித்த முனிவர்; இவர்-ம்ருகாவதி கருவுற்றிருக்கையில் அவளைக் காத்து, அவள்புதல்வனுகிய உதயணனுக்கு வித்தியாப்பியாசஞ் செய்வித்தவர்.

சர்வவர்மா - சாதவாகனனது அமைச்சன்; அவ்வரசனுக்குக் கல்வியறிவையுண்டாக்கியவன்.

சாண்டில்ய முனிவர் - சதாநீகனது தோழர்; இவர் அருளால்ஸஹஸ்ராநீகன்பிறந்தான்.

சாதவாகனன் - பிரதிஷ்டாநகரத்துமன்னவன்; குணாட்யனிடத்தினின்று பெருங் கதையைப்பெற்றவன்.

சாந்திசோமன்- நரவாகனதத்தனது புரோகிதன்.

சிங்கவர்மா - ப்ரத்யோதமன்னவனது குமாரன்; பத்மாவதியின் உடன்பிறந்தோன்.

சிராவத்தி - பிரசேநசித்தின் நகரம்.

சுரபிதத்தை-சாபத்தாற் கலிங்கசேனையாகப் பிறந்த ஓர் தேவமாது.

சோமசர்மா - குணாட்யனது தாய்க்குத் தந்தை.

சோமபிரபை - கலிங்கசேனையின் தோழி; மயனது புத்திரி.

ஜநமேஜயன்-உதயணன் மரபில் முன்னோன்.

ஜயஸேநன் - சண்டமகாசேநனது தந்தை.

ஜயை - புஷ்பதந்தனது மனைவி.

தட்சசிலை-கலிங்க தத்தனது நகரம்.

தநவதி - அஜிநாவதியென்னும் விஞ்சைமகளின் தாய்.

தபந்தகன் - வசந்தகனது புதல்வன்.

தம்பகன் - பிரமத கணத்துட் சேர்ந்தவன்; நரவாகனதத்தனைக் காக்கச் சிவபெருமானால் அனுப்பப் பட்டவன் இவன்.

தாராதத்தை - கலிங்கதத்தன் மனைவி.

தாலபடன் - சண்டமகாசேன மன்னவனது அரண்மனை வாயில் காப்போன்.

திருநந்திதேவர் - சிவபிரானது வாயில்காப்போர்.

திலோத்தமை - ஸஹஸ்ராநீகனைச் சபித்தவள்.

தேவசேனன் - ஒரிடையன்; காட்டில் தலைமைபூண்டு அந்தணச் சிறுவன் தன்னை வெட்டுமாறு செய்தவன்.

தேவமாயன் - உதயணனைப் புவியிற் சேர்த்தவன்.

நடாகிரி - வாசவதத்தையின் பிறந்தகத்திலிருந்த ஆண்யானை.

நந்திதேவன் - குணாட்யனது மாணாக்கர் இருவரில் ஒருவன்.

நரவாகனதத்தன் - உதயணன் புதல்வன், விஞ்சையர் சக்கரவர்த்தி.

நாரதர் - ஒரு முனிவர்; உதயணனிடத்து அநுக்கிரகமுள்ளவர்.

பத்மாவதி - ப்ரத்யோதன் புதல்வி; உதயணன் மனைவி

பத்ரவதி - வாசவதத்தையினது பெண்யானை.

பரீக்ஷித்து-உதயணன் மரபிலுதித்த முன்னோன்.

பருகச்சம் - சாதவாகநன் தனது ஆசிரியனுக்கு அளித்த நாடு.

ப்ரதிஜ்ஞா யௌகந்தராயணம்-பாஸன்செய்தரூபகங்களுளொன்று.

ப்ரதிஷ்டா நகரம்-சாதவாகனனது நகரம்.

ப்ரத்யோதன் - பத்மாவதியின் தந்தை; மகதநாட்டு மன்னவன்.

ப்ருஹத்கதாமஞ்சரி - க்ஷேமேந்திரன் செய்தது.

பாலகன்-கோபாலகனுக்குத் தம்பி.

பாஸகவி - பிராசீநனான ஒரு மஹாகவி.

பிங்கலிகை - புரோகிதனது உடன் பிறந்தவனது மனைவி; இவள் புதல்வர் நரவாகனதத்தனுக்கு இஷ்டரானவர்.

பிரசேநசித்து - கலிங்க சேனையை வாழ்க்கைப்படுத்துவ

தாக அவளது தந்தையால் எண்ணப்பெற்றவன்.

பிரபாவதி - நரவாகனதத்தனை மணந்த ஒருவிஞ்சை மாது; இவள் வடிவத்தோடு நரவாகனதத்தன் மதநமஞ்சுகையினிடம் சிலகாலம் இருந்தாள்.

பிரமதத்தன் - வாராணசி மன்னவன்.

புத்ததத்தன் - சண்டமகாசேனராசனது மந்திரியருள் ஒருத்தன்.

புளிந்தகன் - விந்தமலைச் சாரலில் வாழ்ந்த வேடன்; உதயணன் நண்பன்.

புஷ்பதந்தன் - கணநாதருள் ஒருவன்; இவனே வரருசியாகப் பிறக்கின்றான்.

மகதநாடு - ப்ரத்யோதனுடைய தேசம்.

மகாமாத்ரன் - சண்டமகாசேனனது பாகர்க்கெல்லாந் தலைவன்.

மகேந்திரவர்மன் - சண்டமகாசேனனது பாட்டன்.

மதநமஞ்சுகை - கலிங்கசேனையின் புதல்வி; நரவாகனதத்தனது பட்டமகிஷி.

மதநவேகன்-கலிங்க சேனையைஉதயண வேஷங்கொடு கந்தருவமுறையால் மணந்தவன்.

மந்தரதேவன் - உத்தரசேடியில் வாழ்ந்த விஞ்சையர்சக்கரவர்த்தி.

மந்தரதேவி - மந்தரதேவனது உடன்பிறந்தவள், நரவாகனதத்தனை மணந்தவள்.

மயாசுரன் - சோமபிரபையின் தந்தை.

மருபூதி - யௌகந்தராயணன் புதல்வன்.

மாதலி - இந்திரனது பாகன்.

மாநசவேகன் - மதநமஞ்சுகையை விரும்பியவன்.

மாயாவதி - ஒரு விஞ்சை மகள்; இவள், சாபத்தால் பத்ரவதியென்னும் பிடியானையாயினள்.

மால்யவான் - பிரமதகணங்களுட் சேர்ந்தவன்: இவனே குணாட்யனாகச் சாபத்தாற் பிறந்தான்.

ம்ருகாவதி-உதயணன் தாய்.

யமதம்ஷ்டரன் - தேவேந்திரனை யெதிர்த்தவன்; சதாநீகனால் மாய்ந்தவன்.

யுகந்தரன் - யௌகந்தராயணன் தந்தை.

யோககரண்டகன் - பிரமதத்தனது அமைச்சன்.

யோகேசுவரன் - யௌகந்தராயணனது நண்பனான பிரமராக்ஷஸன்.

யௌகந்தராயணன் - உதயணனுக்கு முக்கியமந்திரி.

ரத்நப்ரபை - நரவாகனதத்தனை மணந்த ஓர்விஞ்சைமகள்.

ருசியமூகம் - ஆஷாடபுரத்தினின்று நரவாகனதத்தனை வேகவதி சேர்த்த இடம்.

ருமண்வான் - சுப்ரதீகனென்னும் படைத்தலைவனது குமாரன்; உதயணனது படைத்தலைவன்.

லாவாணகம்-மகதநாட்டிற்கு அருகிலுள்ள ஊர்.

வசந்தகன்- உதயணனுக்குத் தோழன்.

வசுநேமி - உதயணனால் வேடனிடத்தினின்று விடுவித்த நாகம்; இவன் வாசுகியின் அண்ணன்.

வச்சிரப்பிரபன்-ஒரு விஞ்சையன்.

வத்ஸம்=வற்சம்; உதயணன் ஆண்டநாடு.

வரருசி-புஷ்பதந்தன் சாபத்தாற் பிறந்தபோது கொண்டிருந்த பெயர்.

வாசவதத்தை- உதயணனது பிரதானமஹிஷி.

வாஸவதத்தா-ஸுபந்துமகாகவிசெய்த கத்யகாவ்யம்.

வாசுகி - குணாட்யனது பாட்டன்.

விந்தமலை - ஒருமலை.

விந்தைமகள்-துர்க்கை: குணாட்யனுக்குக் காணபூதியைக் காணுமாறு அருளியவள்.

விஷ்ணுமதி-சதாநீகன்மனைவி.

வீரபாகு - சண்டமகாசேனனது வாயில்காப்போர் இருவரில் ஒருத்தன்.

வேகவதி - மானசவேகனது உடன் பிறந்தவள்.

வைசுவாநரன் - பிங்கலிகையின் புதல்வருள் ஒருவன். இவனும் நரவாகனதத் தனது புரோகிதன்.

ஸஹஸ்ராநீகன் - உதயணன் தந்தை.

ஸுபந்து - 'வாஸவதத்தா' என்ற நூலைச் செய்தவன்.

ஸுப்ரதீகன் - குபேரனது சாபத்தாற் காணபூதி யென்னும் பிசாசனாகப் பிறந்தவன்; ருமண்வானது தந்தைக்கும் இப்பெயருண்டு.

ஸோமதேவபட்டன் - கதாஸரித்ஸாகரம் செய்தவன்.

ஸ்வப்நவாஸவ தத்தம்-பாஸமகாகவி செய்த ரூபகங்களுளொன்று.

க்ஷேமேந்தரன் - ப்ருஹத்கதா மஞ்சரீயென்னும் நூலைச் செய்தவன்.

# உதயணன் சரிதையிலுள்ள

# செய்யுளுரை.

"முன்னர்."—(இதன்பொருள்.)முன்புநாகாபரணம்பூண்ட சிவபெருமானது முகத்தில்தோன்றிப் பழமையாய் நல்ல இனிமைவாய்ந்த குற்றமற்ற பெருங்கதையைச் சொல்லுவதற்கு, முன்பு பாரதப்போரை முடியுமாறு சிந்தித்த கடவுளே! எனக்கு வரமளிப்பாய்; (என்றவாறு.)—தோம் - குற்றம்.

"மணிபொதி கிழியும்"—(இ-ள்.) இரத்தினம்வைத்து முடியப்பெற்றமுடிப்புத்துணியும் மிக்கமணியுடன் இருக்கும்போது, அதனையும் இரத்தினங்களுடனே சேர்த்துக் காப்பாற்றிவைப்பர் உலகத்தோர்; அதுபோல, எனதுசொல் துணிந்துசொன்ன இழிவான சொல்லேயானாலும் பரிசுத்தமான நூலின் விஷயங்கள் அடங்கியிருத்தலால் இதனையும் அழகியதென்று உலகத்தோர் மேற்கொள்வரென்று துணிந்து இந்நூலைச்சொல்வேன்; (எ-று.)—மணி-தூய நூற்பொருளுக்கும், கிழி - புன்சொல்லுக்கும் உவமை.

"குற்றங்களைந்து".—(இ-ள்.) இந்நூலிலுள்ள குற்றங்களை நீக்கிக் குறையாயிருப்பவற்றையும் சேர்த்துக்கொண்டு படித்தல் கற்றறிந்த பெரியோரது கடமையாம்; (எ-று.)

"திருமகள்கோன்".—(இ - ள்) அருச்சுனனது அருமையான குலத்திலே பூமியிற் பிறந்த உதயணனது சிறந்த சரித்திரத்தை இப்போது சொல்லும்படி திருமாலினது செவ்விய திருவடிகள் இந்தப்பெருநிலத்திற் பாதுகாவலாக நின்று என்னைக்காக்கும்படி வரவேணும்; (எ-று.)

"சிந்துகங்கை நீர்."—(இ-ள்.) சிந்துநதி நீரும் கங்காந்தியின் நீருஞ் சேர்ந்து வளம்பெற்று அழகாயிருக்கும் அவந்தி தேசத்திலே, சந்திரன்தங்குமாறு ஓங்கிய மதிள்களைப்பெற்ற வளப்பமுள்ள நகரம் மாளிகை நிரம்பிய உச்சயினி; (எ-று.)

"அரக்கினும்."—(இ-ள்.) அரக்கினுலும்மெழுகுபூசப்பெற்ற நூலினுலும் மாத்திரலும்கிழிபட்ட மிருகங்களின் மயிரினுலும் பரப்பிய தோலினுலும் மற்றும் வேண்டிய பொருள்களினுலும் பொருத்தி யந்திரயானையை நன்ருக இயற்றினர்கள்; (எ-று.)

"கொடிக்கோசம்பி."—(இ-ள்.)வெற்றித்துவசம்விளங்கப் பெற்ற கௌசாம்பி நகரத்துக்கு அரசனும் நன்கு அமைந்தசேேரோடு சேனையுமுடையனுமாகிய வற்சராசனைமாற்றரசன் வஞ்சனையினுற் சிறையிலிட்டபோது அவனதுமிக்க தளையை[சிறையை]விடுவிக்கும்பொருட்டு உச்சயினீநகரத்தில்வந்த பிரமசுந்திரயோகியென்பவனதுகுமாரனுய் அந்தணனுகிய யௌகந்தராயணன துருபத்திற்குத்தகாதமிக்க நோயைப்பார்த்துவருந்துஞ்சனங்கள்போல; (எ - று.)—வத்தவன் - வற்சராசன். உறுநோய் - பைத்தியம்.

"கார்பெற்ற"-(இ-ள்.)சிறப்பையடைந்து தன்மனைவியோடு மன்னன் திரும்பிவருவதைக் கண்ட பெரிய நகரத்தார்க்கு, மழையைக்கண்ட மயிற்பறவையையோ, இழந்த கண்களைப்பெற்றஒளியுள்ள முகத்தையோ,ஜலத்தைப்பெற்று வளம்மிக்க கழனியையோ எதை உபமானமாகச் சொல்லுவேன்? (எ-று.)

"குன்றுகுன்றுதொறு."—(இ - ள்.) வெற்றியைப்பூண்ட வலிய பெரியவேட்டுவப்படையானது-மலைகளிலும் நீலநிறமான நீருள்ள குளங்களிலும் குளிர்ந்த காடுகளிலும் வேற்று மிருகங்களின் அடிவைப்பைப் பிடித்து நெருங்கிச் சென்று பலதிக்குக்களிலும்நெருங்கிய மிருகங்களை மிகுதியாகக்கொன்று குவித்து எரிக்கின்ற வெவ்வியதீயிலே இட்ட அம்மிருகத்தின் தசைகளை மிகுதியாகத்தின்று தண்ணீர்குடித்து மேலே செல்லும்;(எ-று.)

"இரவினில்"—(இ-ள்.) இராப்பொழுதைவிட மிகுதியாக இருட்சியடைந்தும், கருக்கொண்ட மேகத்திற்கு இரண்டாவதாகக் கருநிறம் பொருந்தியும், பூமியினிடம் எல்லாம் கவர்ந்துகொண்டு,எய்த அம்பும் உட்புகாது பட்டுத்தெறித்து வரும்படி அடர்ந்துமுள்ள படர்ந்த முட்களையுடைய காட்டிற்பொருந்தி, வேடர் பாம்புக்கூட்டம் கரடிமுதலியன மறைந்து இதற்குள் வசிக்குமென்று கருதி, காடு எல்லாம் தீயிடலானார்கள்;(எ-று.) —முண்டகம் - முள். இறும்பு - காடு.

"சுட்ட செந்தழலில்."—(இ-ள்.) பலபல மிருகக்கூட்டங்கள், சுட்ட செந்தழலிலே உடல் வெந்துபோய்ச் சுருண்டு விழுந்திடும்;மற்றுஞ் சில மிருகங்கள்,தம்மைக்கட்டிய கயிற்றை யவிழ்த்து விடப்பெற்ற வேட்டை நாய்கள் கடிக்கத் தம்உயிரொழியும்; இன்னும் சிற்சில விலங்குகள், தம்நிலையினின்று நீங்கிக் கெட்டொழிந்து மிக்க அச்சத்தினால் உயரத்தாவி எழும்பிக் குதித்துக்கீழே விழும்; (எ - று.)

"பீரமலர்ந்த."—(இ - ள்.) நிறவேறுபாடு தோன்றுதற்குக் காரணமான மசக்கை நோய் நிலைத்துத் தோன்றியதனால்,வளைவாகக் காய்க்குந் தன்மையுள்ள புளியைச் சாப்பிட்டும், செந்நிறவாய் வெண்ணிறமானவாயாகியும், வீட்டிற்புகைபடிந்ததனாற் கறுத்த மண்ணைத் தோண்டிப் பவளம் போன்ற வாயினாற் சுவைத்தும், நன்குமலர்ந்த தாமரைமலரில் கயல்மீன்திரிவது போலச் செவ்வரி பரந்து மதர்த்துள்ள கண் குழிவிழுந்தும்; (எ - று.) - பீரம்-நிறவேறுபாடு.

"கறை பன்னீராண்டு."—(இ-ள்.) அரசிளங்குமரன் பிறந்தானென்ற காரணத்தால் பன்னிரண்டு வருஷம் ஒருசேரத் திறைப்பொருளை வாங்காது விட்டிடுங்கள்; அழகிய அறச்சாலைகளையும் கோயில்களையும் புதியனவாக உண்டாக்குங்கள்; சிறையிலடைக்கப்பட்ட சிங்கம்போல ஒடுங்கிப் பகையரசர் தம் கோபம் மழுங்க வசிக்கின்ற சிறைச்சாலையை ஒருங்கே திறந்து

விடுங்கள்; ஒள்ளிய பொற்குவியலுள்ள பொக்கிஷசாலையைத் திறந்து பொற்குவியலை எடுத்து ஊர் தோறுஞ் சென்று இரப்பவர்கட்கெல்லாம் கொண்டு போய்க் கொடுங்கள்; (எ-று.)

"மாடமோங்கு."—(இ - ள்.) மாடங்கள் ஓங்கி விளங்குகின்ற வளப்பமுள்ள நகரத்திலே எல்லையற்ற பண்டசாலையைத் திறந்துவிட்டு, ஆடையும் செம்பொன்னும் ஆபரணங்களும் ஆகிய யாவும் யாவரும் எழுநாள் இடைவிடாமல் கவர்ந்துகொண்டுசெல்வார்களாக; (எ - று.)—என—என்று, பறை அறைக.

"என்புழி."—(இ - ள்.) என்று கட்டளையிட்டபோது, வள்ளுவர் யானையின்மீது பறையேற்றி அவ்விஷயத்தைப்பறையறைந்து தெரிவித்தார்கள்; அப்போது அந்நகரத்து ஆடவர்களும் மின்னல்போல் விளங்குகின்ற இடையையுடைய மகளிரும் மகிழ்ச்சியென்கின்ற அளக்கமுடியாத சமுத்திரத்தில் மூழ்கினர்; (எ - று.)

"பண்ணையும்."—(இ-ள்.) மகளிர் கூட்டமும் அவர்தோழிமார்களும் ஆண்மக்கட் கூட்டமும் அவர்தோழன்மார்களுமாகிய இடமகன்ற அழகிய அயோத்தியிலுள்ளார் யாவரும் களிப்புமிகுந்து, எண்ணெயும் கலவைச்சாந்தும் நெய்யும் கஸ்தூரியும் சுகந்தப் பொடியும் ஆகிய இவற்றை வீதிதோறும் தூவினர்கள்; (எ - று.)

"இத்தகை."—(இ-ள்.) இவ்வாறாக அந்தப்பெரிய நகரத்தவர் பன்னிரண்டு நாளும் மனத்திற்பொருந்திய களிப்பு மிகுந்து தங்கள்தங்களையே சிறிதும் அறியாதவரானார்கள்; (எ - று.)

---

## உதயணன் சரிதையின்கு

# அரும்பத விளக்க அகராதி.

---

அக்டு - நடு.
அகம்படி-அடிவயிறு.
அகவலைப்படுதல்-வலையிலகப் படுதல்.
அகாலம்-காலமல்லாதகாலம்.
அங்காடிவீதி-கடைத்தெரு.
அங்கி-அக்நி.
அசரீரி-ஆகாயவாணி.
அணிகலம்-ஆபரணம்.
அண்ணல்-பெருமையிற் சிறந் தவன்.
அச்சரமங்கையர் - அப்ஸரஸ் ஸ்திரீகள்.
அத்தாணி மண்டபம் - ஆஸ் தானமண்டபம்.
அநவரதமும் - எப்போதும்.
அம்மே - தாயே! 'அன்னே' என்பதும் இப்பொருளதே.
அமரர்-தேவர். அமராவதி - தேவர் நகரம்.
அரதனம்-ரத்நம்.
அரமங்கையர் - அமரமங்கை யர்.
அரவம்-பாம்பு.
அரிவையர்-மகளிர்.
அரிதினில்-கஷ்டத்தோடு.
அலக்கண்-துன்பம்.
அழுக்காறு-பொறாமை.
அறநெறி-தருமமார்க்கம்.
அறுதியிட்டு-நிச்சயித்து.
அற்றம்-சமயம்.
அற்றைநாள்-அந்தத்தினம்.
அன்னணம்-அவ்வாறு.
ஆகாயவாணி - வானத்தி னின்று தோன்றும் வாக்கு.
ஆசி-வாழ்த்துமொழி.
ஆணை-ஆஜ்ஞை.
ஆதித்தியம்-விருந்தினர்க்குச் செய்யும் உபசாரம்.
ஆதுரன்-நோயாளி.
ஆமிடம்-மாமிசம்.
ஆயவெள்ளம் - தோழியர் திரள்.
ஆராவமுதம்-உண்ண உண்ண த்தெவிட்டாமல் மேன் மேலும் உண்ணவேணுமென்னும் விருப் பையுண்டாக்குகின்றஅமிருதம்.
ஆர்ப்பரவம்-பேரொலி.
ஆர்ப்பரித்தனர் - பேரார வாரஞ் செய்தனர்.
ஆர்யபுத்திரர்-கணவர்; இது நாடகவழக்கு.
ஆள்வழக்கு - ஜநஸஞ்சாரம்.
இங்கிதம்-குறிப்பு.
இஞ்சி-மதிள்.
இடியேறு-பேரிடி.
இடுக்கண்-துன்பம்.
இடைக்கானில்-நடுக்காட்டில்.

இந்து-சந்திரன்.
இயம்-வாச்சியம்.
இருக்கை-இருப்பிடம்.
இருபிறப்பாளன் - பிராமணன்.
இருமுதுகுரவர் - தாய்தந்தையர்.
இல்லக்கிழத்தி - இல்லாள், மனைவி
இவர்ந்து - ஏறிச்சென்று.
இழுக்கு - குறைவு.
இருஞ்சுதல் - பறவை கவர்தல்.
இறுக்க-வரிகட்டுமாறு.
இறும்பூது - ஆச்சரியம்.
இறைவன்-தலைவன்; அரசன்.
இன்னல்-துன்பம்.
ஈதல்-கொடுத்தல்.
ஈமக்கடன் - இறந்த பின்பு செய்யுஞ் சடங்கு; உத்தரகிரியை யெனப்படும்.
உணா-உணவு.
உதாரம்-கொடுக்குங் குணம்.
உபாயநம்-காணிக்கை.
உபேட்சித்து-மதிக்காமல்.
உயிர்த்திருத்தல் - மூச்சுவிட்டுக்கொண்டிருத்தல்; பிழைத்திருத்தல்.
உயிர்நீத்தவுடல்-பிணம்.
உரகவணி-பாம்பாகிய ஆபரணம். உரகம்-பாம்பு.
உலோகபாலீர் - திக்பாலகர்களே!
உல்லாஸம்-ஸந்தோஷம்.
உழைஞர்-மந்திரிமார்.
உளைந்து-வருந்தி.
உறைதல்-வசித்தல்.
ஊடல்-பிணக்கு.
ஊர்தி-வாகனம்.
ஊற்றம்-அன்பு.
ஊனம்-குறைவு.
எஞ்சிய-குறைந்த
எஞ்ஞான்றும்-எப்போதும்.
எம்பி-என்தம்பி.
எயினம்-பன்றி.
எல்லை-வேளை.
ஏகதேசம்-ஒருபாகம்.
ஏக்கழுத்தம்-தலையெடுப்பு.
ஏமுற-மகிழ்ச்சி பொருந்த.
ஐங்கணையோன்-மன்மதன்.
ஐம்புலவாசை - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் இவைகளில் தோன்றும் விருப்பம்.
ஐயுறவு-சந்தேகப்படுதல்.
ஒருங்கே-ஒருசேர.
ஒற்றன்-தூதன்.
ஒன்றி-சேர்ந்து.
ஓலமிடல்-முறையிடுதல், அபயமிட்டழைத்தல்.
ஓஷதிபலம்-பச்சிலையின் வலிமை.
கடகம் - சேனை தங்குமிடம்; பாசறை யெனப்படும். ஓர் கையணியுமாம்.
கணகர்-சோதிடர்.
கணி-சோதிடன்.
கணிசியாது - லக்ஷியஞ் செய்யாது, ஆலோசியாது.
கணை-அம்பு.
கண்கூடு-ப்ரத்யக்ஷம்.
கண்ணநீர்-கண்ணீர்.
கண்ணுதற்கடவுள்-சிவன்.
கதிரவன்-சூரியன்.
கத்யகாவ்யம் - வசனநடையிலெழுதிய காவ்யம்.
கமலை-லக்ஷ்மி.

கரந்து-ஒளித்து.
கரம்-கை; திறைப்பொருள்.
கருப்புவில்லி-மன்மதன்.
கருப்பொறை - கர்ப்பத்தின் பாரம்.
கரேணு-பெண்யானை.
கலுழிநீர்-நீர்ப்பெருக்கு, கலங்கல்நீர்.
கல்லணை-சேணம்.
கவான்-தொடை
களத்திரம்-மனைவி.
கற்பகம்-தன்னை யடைந்தார் வேண்டியதைக்கொடுக்குந் தெய்வதரு.
காந்தருவ மணம்-கணவனும்மனைவியும் கொடுப்போரின்றி அன்பினால் தாமே மணந்து கொள்ளும் மணம்.
காந்தர்வவித்தை - யாழ்வாசினை.
காமதேநு - வேண்டியதைத் தரும் தெய்வப் பசு.
காலக்கழிவு-சிலகாலங்கழித்தல்.
கிரிதுர்க்கம்-மலையரண்.
கீட்டிசை } -கிழக்குத்திக்கு
குணதிசை }
குழவி-குழந்தை.
கூற்று-யமன்.
கேசரம்-பூந்தாது.
கேழல்-பன்றி.
கைதவம்-கபடம்.
கையடை-கையில் ஒப்பித்த பொருள்.
கையற்று - செயலற்று,மூர்ச்சித்து.
கொண்டல் } மேகம்.
கொண்மூ }
கொழுநன்-கணவன்.
கோணம்-மூலை.
கௌபேரதிசை-வடக்கு.
சடக்கென-விரைவாக, திடீரென்று.
சத்திரம்-குடை.
சந்நிதி-சான்னித்தியம்.
சபத்தினி-சக்களத்தி.
சபரன்-வேடன்.
சம்பவம்-வரலாறு.
சமர்- போர்
சம்பிரமம் - கொண்டாட்டு, பரபரப்பு.
சரணம்-ரக்ஷகம்.
சாமம்-சமாதானம்.
சாரர்-ஒற்றர்.
சார்பு-பக்கம்.
சான்று-சாட்சி.
சிக்கியது-அகப்பட்டது.
சிந்தாமணி - வேண்டியதை யளிக்குந் தெய்வமணி.
சிற்பம்-தொழிலில்வல்லமை.
சிரிய-சிறந்த.
சுதை-சுண்ணம்பு.
சுரநீர்-கங்கை.
சூளுறவு-சபதம்.
செந்நீர்-இரத்தம்.
செரு-போர்.
செவியேற்று-காது கொடுத்துக்கேட்டு.
செவிப்புழை-காதின் துவாரம்.
சேய்மை-தூரம்.
தந்யை-பாக்கியசாலினி.
தராபதி-அரசன்.
தன்னடிக்கீழ்ப் படுத்துதல் - தனக்குள்ளாக்குதல்.
தாபதப்புதல்வன்-ருஷிகுமாரன்.

தாரகாபதி-சந்திரன்.
தானை-சேனை.
திகைப்பூடு - மிதித்தவர்க்குத் திகைப்பையுண்டாக்கும்பூண்டு.
திப்பியம்-சிறந்தது.
திப்பியமொழி, திப்பிய வாணி-ஆகாசவாணி.
திரோதாகமாதல் -மறைதல்.
திறல்-வல்லமை.
தீநிமித்தம்-அபசகுனம்.
ஞான்று-பொழுது.
தீரம்-தைரியம்.
துவையல்-ஒலி.
தூய,தூய்மைவாய்ந்த-பரிசுத்தமான,சாந்தமான.
தூர்த்தன்-நேர்மையான ஒழுக்கமற்றவன்.
தேவமாது - தெய்வப்பெண். அப்ஸரஸ்.
தேவவிருடியர் - தேவதைத் தன்மையோடு ருஷித்தன்மையும் பொருந்தியவர்.
தேறுதல்-தெளிதல்.
தொடக்கமானவை - முதலியவை.
தொடர்பு-சம்பந்தம்.
நசை-விருப்பம்.
நட்டம்-ந்ருத்தம்.
நயனம்-கண்.
நல்லிணக்கம் -நல்லசிநேகம்
நாளோலக்கம்-பகலிலே குடிகட்குக் காட்சியளித்தல்.
நாற்றிசை-நான்கு திக்கு.
நிகழ்ச்சி-சம்பவம்.நிரை-வரிசை
நிலப்பொறை-பூமிபாரம்.
நீத்து-விட்டு.
நுந்தை-உமதுதந்தை.
நூதனம்-புதியது.
நேயம்-அன்பு.
பகலவன்-சூரியன்.
பணித்தது-சொன்னது, கட்டளையிட்டது.
பணிமாறினர்-வேலை செய்தனர்.
பதாகை-பெருங்கொடி.
பதி-கணவன் இருப்பிடம்.
பத்தினி - அக்கினிகாரியத்திற்கு உரிய மனைவி.
பத்ரமுகன்-இனிய முகத்தையுடையவன்.
பந்நகம்-பாம்பு.
பம்பியது-நெருங்கியது.
பயம்-ஜலம்; அச்சமுமாம்.
பயில-கற்க, பழக.
பரபாகம் - மாறுன இரண்டு நிறங்களையுடைய பொருள்களின்சேர்க்கையால் தோன்றும் சிறப்பொலிவு.
பரிகரம்-பணியாளர் செல்வம் முதலிய சாமக்கிரிகள்.
பரிமா-குதிரை.
பல்லாண்டுபாடுதல்-'பலவருஷங்கள் வாழ்க்திடுக'என்று கூறும் மங்கலப்பாடலைப்பாடுதல்.
பல்லியம்-பல்வகை வாத்தியம்.
பனவன்-அந்தணன்.
பாங்கர்-தோழர், பக்கம்.
பாதசாரி-வாகனமின்றிக் கால்களினுற் சஞ்சரிப்பவன்.
பானீயம்-பருகுவதற்கு உரிய பொருள்.
பாரங்கதன்-கரைகண்டவன்.
பாரிசம்-பக்கம்.
பிடிபடுக்கப்பட்டகளிறு-பெண்யானையாற் பிடியுண்ட ஆண்யானை.

பிணித்தல்-கட்டுதல்.

பித்திகை-சுவர்.

பிரகிருதிகள்-அரசன் படை கூழ் அமைச்சுநட்பு அரண் இவை; இவற்றுள், இங்கு வில் ஏற்றபெற்றி கொள்க.

பிரஷ்டை - ஒழுக்கந்தவறினர்.

புகல்-ரக்ஷகம், சொல்வாய்.

புத்திகௌசலம் - அறிவின் ட்பம்.

புத்தேளிர்-தேவர்கள்.

புயங்கத்து உரிவை-பாம்பின் தால்.

புலவி-மனப்பிணக்கு.

புலிப்போத்து-ஆண்புலி.

புல்வாய்-மான்.

புனல்படீஇ-ஜலத்தில்மூழ்கி.

பேழை-பெட்டி.

பொதுவர்-இடையர்.

பொறித்தல் - அடையாளகச் செதுக்குதல்.

பொறியூர்தி-விமானம்.

ப்ரபௌத்திரன்-ஆண்சந்ததிற்பிறந்த பேரனது புதல்வன்.

மகவான் - இந்திரன்; மேககனன் வாசவன் முதலியன இப்பொருளனவே.

மகவு-குழந்தை.

மஹாப்ரஸ்தாநம் - மீளவும் தம்பாது பரலோக மடையுற செய்யும் பிரயாணம்.

மகிமை-பெருமை; தெய்வத்மை.

மடிமை-சோம்பல்.

மதிமுகிழ்-பிறைச்சந்திரன்.

மத்தக்களிறு-மதயானை.

மந்தணம்-ஆலோசனை.

மந்திரபூதம்-மந்திரத்தாற் பரிசுத்தமானது.

மரபு-வமிசம்.

மருத்துவர்-வைத்தியர்.

மலர்ப்பலி-புஷ்பங்கள் கொண்டு வாயில்களிற் செய்யும் ஓர் வகை யலங்காரம்.

மள்ளர்-போர்வீரர்.

மாசுணம்-மலைப்பாம்பு.

மாணி-பிரமசாரி.

மாதங்கம்-யானை.

மாநுஷ்யகம்-மனிதனது சம்பந்தமுள்ளது.

மாற்றம்-வார்த்தை.

மாற்றாண்மை-பகைமை.

மீக்கூர்தல், மீதூர்தல் } மிகுதிப்படுதல்

முதக்குறைவினள் - பேரறிவுடையாள்.

முதுமொழி-பழமொழி.

முந்நீர்-சமுத்திரம்.

முரன்று-ஒலித்து.

முளரி-தாமரை.

முறுவல்-புன்சிரிப்பு.

முற்றுறும்-நிறைவேறும்.

முனிபுங்கவர் - இருடியரிற் சிறந்தவர்.

முன்னிய-நினைந்த.

மூதாதையர்-பாட்டன்மார்.

மேதக்க-சிறந்த.

யாழ்முனிவர்-நாரதர். யாழ்-வீணை.

வஞ்சப்பழிப்பு - புகழ்வது போன்று பழித்தல்.

வடமீன்-வடதிசையில்நக்ஷத்திரவடிவமாக இருப்பவள்; அருந்ததி.

வதனாரவிந்தம்-முகமாகியதாமரை; வதனம்-முகம்.

வதுவை-விவாகம்.

வந்தியர்-ஸ்துதிபாடகர்.

வயா-கருக்கொண்டார்க்குத் தோன்றும் விருப்பம்; நோயுமாம்; இது, மசக்கையென இக் காலத்து வழங்கும்.

வயிறுவாய்த்தல்-கருக்கொள்ளுதல்.

வலவன்-தேர்ப்பாகன்.

வழிமறித்து-வழிமடக்கி.

வள்ளல்-வரையாது கொடுப்பவன்.

வனப்பு-அழகு.

வற்கடம்-பஞ்சம்.

வாசம்-வாசனை.

வாச்சியங்கள், இயங்கள் - வாத்தியங்கள்.

வாஞ்சை-விருப்பம்.

வாரமடந்தையர்-வேசியர்.

வாவி-ஒருவகை நீர்நிலை.

வாழ்க்கைத்துணை-மனைவி.

வாளம்-சக்தி.

வாளா-வெறுமனே.

வாளி-அம்பு.

வானகங்கை-ஆகாசகங்கை.

வானவூர்தி-விமானம்.

விசனம்=வ்யஸநம் - வேட்டமாடுதல் கட்குடித்தல் சூதாடுதல் முதலியவற்றில்மிக்கபற்று; அதனையுடையவன்-வியசனி.

விதாநம்-மேற்கட்டு.

விதிமுறை வழுவாது-செய்ய வேண்டிய முறை தவறாமல்.

விநயம்-வணக்கம்.

விந்தைமகள்-விந்தைமலையில் வாழ்பவள், துர்க்கை.

விரூபம்-விகாரரூபம்.

விளர்த்தது-வெளுத்தது.

வெகுளி-கோபம்.

வெள்ளணி-வெண்மைநிறமாகியஅணி; இது, ஸரஸ்வதிக்கு உள்ளது.

வேணவா, வேட்கை அவா-மிக்க ஆசை.

வேழம்-யானை.

வைரூப்யம்-விகாரவடிவு.

ஸத்காரம்-உபசரித்தல்.

ஸர்வஜநசம்மதன் - எல்லார்க்கும் இஷ்டன்.

ஸாமந்தர்=சாமந்தர்-சிற்றரசர்.

ஸாமம்,=சாமம் - சமாதான வார்த்தை.

ஹஸ்தலாகவம்-கைத்திறம்.